விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை (20.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 122

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ



## வெற்றி நினைவு சின்னங்களை நிறுவுவதால்
# போரின் காயங்களை ஆற்றிவிட முடியாது!

உலக பொதுக் கொள்கை நிறுவகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் வெற்றிக்கான போர்வெற்றி நினைவுச்சின்னங்களும் பொருளாதார அபிவிருத்தியும் மாத்திரம் நாட்டின் காயங்களைக் குணப்படுத்த உதவாது. அதற்குப் பதிலாக போரினால் உயிரிழந்த அனைவருக்கும் நினைவுச் சின்னம் உருவாக்கப்படவேண்டும் என்று பேர்லினில் இயங்கும் உலக பொதுக்கொள்கை நிறுவகம் கோரியுள்ளது.

இந்த நிறுவகத்தின் முக்கிய உறுப்பினர் ஜெரிட் கேட்ஸ் என்பவர் இலங்கையின் வடக்கு கிழக்கில் மேற்கொண்ட பயணத்தின் பின்னர் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வன்னியில் ஏ.கே 47 துப்பாக்கியை ஏந்திய வண்ணம் இலங்கை படைவீரர் ஒருவரின் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு கையில் துப்பாக்கியும் ஒரு கையில் இலங்கைக் கொடியையும் ஏந்திய நிலையில் இந்த நினைவுத் தூபி அமைக்கப்பட்டுள்ளது. இத் தூபி 2009 ம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் பின்னர் இலங்கை படையினரால் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் அந்த நினைவுத்தூபியில் பெயர் பலகை ஆங்கிலத்திலும் இலங்கையின் முதன்மை

23ஆம் பக்கம் பார்க்க....

## குடும்பப் பெண் ரி.ஐ.டியினரால் கைது

வவுனியாவில், தேவிகன் வசித்ததாக கூறப்படும் வீட்டின் காணியை தனது பெயரில்வைத்திருந்த குடும்பப் பெண் ஒருவரை பயங்கரவாத புலனாய்வுப்பிரிவினர்நேற்றுமுன்தினம வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சியில் வசித்து வந்த 60 வயதுடைய மகாலிங்கம் பத்மாவதி என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இவர் விடுதலைப்புலி உறுப்பினர்களை மீள ஒருங்கிணைக்க முயற்சித்த குற்றச்சாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட தேவிகன் வசித்த வீடு அமைகக்கப்பட்ட காணியினை தனது பெயரில் வாங்கிக் கொடுத்தமைக்காகவே கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள குறித்த பெண் மேலதிக விசார

23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகள் படைமுகாமுக்கு அழைப்பு!

முல்லைத்தீவில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை குடும்பத்துடன் படைமுகாமுக்கு வருமாறு படையினர் வற்புறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களான கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி உள்ளிட்ட பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை சென்ற படையினர், அங்கு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் போராளிகளைச் சந்தித்துள்ளனர்.

இதன்போது விடுவிக்கப்பட்ட போராளிகள் அனைவரும் தத்தமது குடும்பங்களுடன் பதவியா ஜனகபுரம்

23ஆம் பக்கம் பார்க்க....

## தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு கூட்டமைப்பிற்கு மீண்டும் அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்பங்கேற்குமாறு அரசாங்கம்மீண்டும் விடாப்பிடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளில் இணைந்து கொள்ளுமாறு தெரிவுக் குழுவின் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மிகச் சிறந்த தளமாக பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவுக்கான தூதுவர் நியமனம்

(கொழும்பு)

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் அமெரிக்காவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக பணியாற்றி வந்த காரியவசம், பல்வேறு கருத்துக்

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டும்

சிங்கள ஊடகம் செய்தி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் அவதானத்துடன் இருக்க வேண்டுமென சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இது தொடர்பில் தினமின பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

புலிகள் தொடர்பில் கடும் அவதானத்துடன் இருக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளது.

கோபி, தேவியன், அப்பன் ஆகியோர் தொடர்பிலான சம்பவம் இதனையே வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் புலிச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ள போதிலும் சர்வதேச ரீதியில் புலிகளின் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடும்போக்குடைய தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு இராணுவ முகாம்களை பற்றி பேசியதும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தர்மானம் நிறைவேற்றியதும் பாரிய திட்டமொன்றின் முதல் கட்டமே.

இந்த திட்டங்களை தோற்கடிக்காவிட்டால் பிரிவினைவாதத்திற்கு அடிமையாக நேரிடும்.

கனடா, சுவிட்சர்லாந்து, ஜெர்மன், பெல்ஜியம், நெதர்லாந்து உள்ளிட்ட பல நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் வழங்கி வருகின்றன.

1980கள் முதல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிகளவில் வெளி

23ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களை இராணுவத்திற்கு உள்ளீர்க்க அரசு சதி!

சிக்கி விடாதீர்கள் என்கிறார் கஜதீபன்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்திற்கு உள்ளீர்க்கும் படுபயங்கரமான ஒரு நிகழ்ச்சி நிரலை, திட்டமிட்ட ரீதியில், தமிழர் வாழும் பிரதேசமெங்கும் அரங்கேற்றி வருகிறது. இந்த அபாயகரமான அரசின் சதிவலைக்குள் எந்தவொரு உண்மையான தமிழ் இளையோர்கள் எவ்விதத்திலும் சிக்கி விடாமல் விழிப்புடன் உண்மை நிலையை உணர்ந்து செயற்பட வேண்டும் என வடக்கு மாகாண சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் தெரிவித்துள்ளார்.

தாயக தமிழ் இளையோர்களுக்கு வேலை, வசதி வாய்ப்புகள் அனைத்தும் வழங்கப்படும் என்பதான மாயைக்குள் அவர்களைத்தள்ளி, இன்றைய ஆளும் மத்திய அரசு, அவர்களின் வறுமை நிலையைப்பயன்படுத்தி, மூளைச் சலவை செய்து வேறு சிவில் வேலை வாய்ப்புக்களை வழங்காமல் இராணுவத்தில் இணைக்கும்

23ஆம் பக்கம் பார்க்க....




SISIL WORLD
கோடைகாலத்தை குளிர்மையானதாக்க உலகத்தரம்வாய்ந்த
SISIL, WELLING, KDK, ROWENTA, SYMPHONY
எயர்கூலர் மற்றும் மின்விசிறிகள்
120 நாள் வட்டி இன்றிய கொடுப்பனவு
விசேட விலைக் கழிவுகள்
3வருட நீடித்த உத்தரவாதம்
(C-7099)
இல-106,கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் 021-2219291
இல-125,கே.கே.எஸ். வீதி,சுன்னாகம் 021-2242335
இல-17/3,கண்டி வீதி,கிளிநொச்சி 021-2283755

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இராசலிங்கம் (துரை)

### (இளைப்பாறிய தபால் அதிபர்)



விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 89, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசலிங்கம் (துரை) 18. 04.2014 வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சுப்பிரமணியம் (விதானையார்), முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு -சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரகுமாரியின் அன்புக் கணவரும், வித்யா (முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்- கண்டாவளை), சர்மிலா (ஆசிரியர்-புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), லக்சிகா, றஜீவன் (மாணவன்-யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிறிகாந்தனின் (லண்டன்) அன்பு மாமனாரும், புஸ்பராணி, கீதாம்பாள் (லண்டன்), சண்முகலிங்கம் (அமெரிக்கா), சிவலோகன் (முகாமையாளர்-பிரதேச அபிவிருத்தி வங்கி, யாழ்ப்பாணம்), புஸ்பலீலா, புஸ்பவதி (லண்டன்), அப்புலிங்கம் (லண்டன்), திலகவதி, கலாவதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராஜா, கிருஸ்ணபிள்ளை (கனடா), தர்மலிங்கம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, இராசலட்சுமி, யோகலட்சுமி (கனடா), செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மீசாலை சிவராஜா (ஓய்வுபெற்ற நில அளவையாளர்)-புஸ்பராணி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் 9.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

89, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தகவல்:-குடும்பத்தினர்.
021 222 4706

(6174)

# மரண அறிவித்தல்

## செல்வி ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம்



சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம் அவர்கள் 18.04.2014 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான சிற்றம்பலம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், இராசலெட்சுமி, அமரர் Dr. இராசலிங்கம் மற்றும் சிவலிங்கம், மகாலெட்சுமி, சுந்திரமதி, ஸ்ரீஸ்கந்தராஜா, அருள்கந்தராஜன், நவநீதராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் சண்முகலிங்கம் மற்றும் Dr. மைத்திரிதேவி, மரகதவல்லி, Dr. ஸ்ரீகாந்தா, பாலசுப்பிரமணியம், இந்திராணி, சோமாவதி ஆகியோரின்மைத்துனியும், சுபோதினி, சுபேந்திரன், Dr. வினோதினி, நந்தினி, பாலகஸ்தூரி, இளங்கீரன் ஆகியோரின் அன்புச் சித்தியும், அனுஷா, Dr. சிவாணி, சிவசங்கர், பவதாரணி, பிரதீபன், அபிராமி, Dr.சஞ்சீவன், சரண்யா, மைத்திரி, திவ்வியன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.04.2014 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 23.04.2014 புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஈமக்கிரியைகள் நடைபெற்று 4 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

3/1,பம்பலப்பிட்டி
தொடர்மாடி
கொழும்பு - 04

தகவல்
சிற்றம்பலம்
குடும்பத்தினர்

(6178)


## வேலையாட்கள் தேவை

இல. 21 சட்டநாதர் வீதி நல்லூரில் அமைந்துள்ள அச்சகத்திற்கு கணனியில் நல்ல அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை

தொடர்பு
0777165589

(6177)

## வாடகைக்கு

பிரிட்டிஷ் கவுன்சில், கச்சேரி என்பவற்றிற்கு மிக அண்மையில் வாகன தரிப்பிடங்களோடு கூடிய மாடி வீடு வாடகைக்கு உண்டு. அரச/அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு
0755461826

(6180)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## வாழ்க்கையில் பிரச்சினைகளா?

மனத்தளர்வு, மனஅழுத்தம், மணவாழ்க்கை, காதல் நண்பர்கள், ஆரோக்கியம், கல்வி, பாலியல் எதுவாக இருப்பினும் உங்களைப் பற்றி அக்கறைப்பட நாம் இருக்கின்றோம்.

அழையுங்கள் 021 222 8117

வருடத்தின் 365 நாட்களும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை.

கைகொடுக்கும் நண்பர்கள்
ஸ்ரீ லங்கா சுமித்ரயோ
104, நாலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

"தற்கொலைத் தடுப்பு எம் அனைவரதும் கடமையாகும்" இது ஒரு மத/ அரசு சார்பற்ற இலவச சேவை

(C-7112)

## வேலை ஆள் தேவை (Vacancies)

Travels Office வேலை செய்வதற்கு தகுதி உடையோர் தேவை.

» Qualification A/L

நல்லூர் கோவில் வீதி,
கைலாசபிள்ளையார்
கோவிலடி யாழ்ப்பாணம்.

தொடர்பு :
0770640544
0772259030

(6184)

## தவறவிடப்பட்டுள்ளது

A.M.K.தில்லைமோகன் என்பவரது பேர்சுடன் 550913380V இலக்கமுடைய அடையாள அட்டையும் சாரதி அனுமதிப்பத்திரமும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் தரப்படும்.

(C-7115)

தொடர்பு: 0776562369

## நிரந்தர தொழில்வாய்ப்பு

புதுவருடத்தில்... புது தருணத்தில்... எதிர்கொள்ள நீங்கள் தயாரா? அப்படியாயின்! சம்பளம் 18000/- 25000/- 32000/- நிரந்தர வருமானத்தை பெற நிரந்தர தொழில், கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் தொழிற்சாலைகளில் (ஜேம் / சோஸ் / காமென்ட் / Pvc / தண்ணீர்போத்தல் / டயில் / கிளவுஸ் / கோழி இறைச்சி / பெயின்ட் / ரப்பர் / கண்ணாடி / பால்மா .........) உற்பத்தி உதவியாளர்.

* லேபல் *தரம்பிரித்தல் *களஞ்சிய பிரிவு 18-50 வயது ஆண்-பெண் தேவை உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில் கல்வி / சான்றிதழ் / சிங்களம் அவசியமில்லை வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு.

(C-7108) தொடர்பு :- 077 556 1883

## பக்தி கானங்கள்

உங்கள் ஆலயங்களுக்கு தேவையான பக்திப்பாடல்கள்தென் இந்தியமற்றும்உள்ளூர் பாடகர்களின் குரலில் சிறந்த முறையில் குறைந்த செலவில் உருவாக்கித் தரப்படும்.

தொடர்பு :- சண்
0779395983

(6182)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION
MONEY TRANSFER

(C-7094)

## Personal Class-கணினி

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்

ஆசிரியர்:KRC TP:0779672038

## யாழ்ப்பாணக் கல்லூரியினர் தயாரித்து வழங்கும்

# தியாகத் திருமகன்

பஜனையும் திருப்பாடுகளும்

(Passion Play)

இடம் :- ஒட்லி மண்டபம்

காலம் :- 20.04.2014 மாலை 5.00 மணி

அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றோம்

- ஆஸ்திரேலியா குடும்ப விசா எண்ணி 180 நாள்களில் விரையலாம்.
- கனடாவில் படிக்க உழைக்க 90 நாள்கள் போதும்.
- இத்தாலி 2 வாரங்களில் நாட்டை விட்டுப் பறக்கலாம்.

## மீ ஒலி (Supersonic) வேகத்தில் புத்தம் புதிய விசா ஆலோசனை வரவுகள்

இச்சலுகை இன்னும் சில தினங்களுக்கு மாத்திரமே!

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
யாழ்ப்பாணம்.

www.thisaivisa.com
021 221 9016 / 021 499 3502

(C-7110)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கும் பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்

## தேசிய சமாதான பேரவை வலியுறுத்து

NPC THE NATIONAL PEACE COUNCIL OF SRI LANKA

(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதனை தடுக்கும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட வேண்டுமென தேசிய சமாதானப் பேரவை தெரிவித்துள்ளது.**

தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்கக் கூடிய வகையிலான ஓர் பொறிமுறைமையை உருவாக்க அரசாங்கமும் ஏனைய அரசியல் கட்சிகளும் ஆர்வம் காட்ட வேண்டுமென குறிப்பிட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வட மாகாணசபை உருவாக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என்ற போதிலும், தேவையற்ற அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாக இயங்கக் கூடிய ஓர் பின்னணி உருவாக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது.

அல்லது வட மாகாணசபை அமைத்ததில் எவ்வித பயனும் இருக்காது என சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் காத்திரமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைப் பொறிமுறைமைக்கு ஒத்துழைப்பு வழங்கக் கூடிய வகையிலான ஓர் பொறிமுறைமையை இலங்கை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என தெரிவித்துள்ளது.

வடக்கில் இராணுவத்தின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன என சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் தீர்வுத் திட்டம் நோக்கி நகராவிட்டால் புலம்பெயர் தமிழர்கள் தொடர்ந்தும் வடக்கு, கிழக்கு தமிழ் பொதுமக்களின் நலன்களுக்காக குரல் கொடுப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# புத்தாண்டு விற்பனை சந்தையில் முதல் ஐந்து இடங்களை பெற்ற பிரதேச செயலகப் பிரிவுகள்

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சி திணைக்களத்தினால் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிகளுக்கிடையில் யாழ் .மாவட்டத்தில் நடைபெற்ற பிரதேச மட்டத்திலான புத்தாண்டு விற்பனைச் சந்தையில் பங்கு கொண்ட பிரதேச செயலகப்பிரிவுகளில் மதிப்பீட்டுப் புள்ளிகள் அடிப்படையில் முதல் ஐந்து இடங்களையும் பெற்றுக் கொண்ட பிரதேச செயலகப் பிரிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய முதலாமிடத்தை யாழ்ப்பாணம்,இரண்டாமிடத்தை சங்கானை, மூன்றாமிடத்தை கரவெட்டி, நான்காமிடத்தை மருதங்கேணி, ஐந்தாமிடத்தை சண்டிலிப்பாய் மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலகங்கள் பெற்றிருப்பதாக யாழ். சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இம் மதீப்பீட்டுப்புள்ளிகள் முறையே புத்தாண்டுச் சந்தையில் பங்கு கொண்ட அரச,தனியார் நிறுவனங்கள், சந்தையில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள், அவற்றின் விலைகள், சந்தையில் மக்களின் பொருட்கொள்வனவு, மக்களைக் கவரக்கூடிய விளம்பரங்கள் மற்றும் மதிப்பீட்டுக் குழுவினால் அவதானிக்கப்பட்ட விடயங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே புள்ளிகள் வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# மணற்காட்டு சவுக்கங்காட்டுக்கு இனம் தெரியாதோர் தீ வைப்பு



குடத்தனை மணற்காடு பகுதியில் உள்ள சவுக்கங்காட்டினுள் கடந்த 17ஆம் திகதி இனந் தெரியாதவர்களால் தீ வைக்கப்படுள்ளது. இவ் இடத்தினை மாகாணசபை உறுப்பினர் ச.சுகிர்தன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை தலைவர் பூ. சஞ்சீவன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். மாகாணசபை உறுப்பினர் கருத்து தெரிவிக்கையில் .

குடத்தனை மணற்காடு பகுதியில் உள்ள சவுக்கங்காட்டு இனந் தெரியாதவர்களால் தீவைக்கப்பட்டுள்ளது. இத் தீயினால் சுமார் 5 ஏக்கர் பரபளவில் உள்ள சவுக்கமரம் தீக்கிரையானது. மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் துணிச்சல் மிக்க செயற்பாட்டினால் தீயானது கட்டுபாட்டுக்குள் வந்தது.

இது சம்பந்தமாக எமது விவசாய அமைச்சரிடம் தெரிவித்துள்ளேன். அவர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இச்சவுக்கங்காடு கடந்த 2006 ஆம ஆண்டுக்குப் பின்னர் இன்று வரை எவரும் கவனிக்காது கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. பல ஏக்கர சவுக்கு மரமானது மக்களால் களவாக விறகுக்கு வெட்டி செல்லப்பட்டுள்ளது.

வடமாரட்சி கிழக்கு பகுதியினை இயற்கை அழிவில் இருந்து பாதுகாப்பது மணல் திட்டுகள் மற்றும் சவுக்கங்காடுகளே. ஆனால் இவை இரண்டும் தற்போது மிக வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றது. இதனை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வரவேண்டும். தவறும் பட்சத்தில் காலபோக்கில் இப் பிரதேசமானது முற்றாக அழிந்து போகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை என்றார். (6)

# பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் தேடுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

**தமிழீழம் மலரும்** என எழுதப்பட்ட துண்டுப்பிரசுரத்தை ஒட்டியவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலுமொருவர் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் **தமிழீழம் மலரும்** என்ற துண்டுப்பிரசுரத்தை ஒட்டினார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினமும் அதற்கு முன்தினமும் கொக்குவில், இணுவிலைச் சேர்ந்த 24 வயதுடைய இரு இளைஞர்கள் பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இக்கைது நடவடிக்கை இராணுவ புலனாய்வாளர்களின் தகவலையடுத்தே இடம்பெற்றதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் மற்றுமொருவர் ரி.ஐ.டியினரால் தேடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தையடுத்து யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் புலனாய்வாளர்களின் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.(2-4)

# தர்மாசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்ட தர்மாசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் நல்லூர்,பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோவிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறநெறிப் பாடசாலை உதவிப் பணிப்பாளர் ஹேமலோஜினி குமரன் அறிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் இவ்வருடம் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தர்மாசிரியர் பரீட்சைக்கு தோற்ற இருபவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் கலந்து கொள்ளலாம்.

வதிவிடக் கருத்தரங்காக நடைபெறவுள்ளதால் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் வருகையை உறுதிப்படுத்துவதற்கு 0112554278/ 0714402348எனும் தொலைபேசி இலக்கங்களுடனோ அல்லது 011255 2825 எனும் தொலைநகல் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறது.மேலும் கருத்தரங்கில் பங்கு பற்றுபவர்கள் காலை 8 மணிக்கே சமுகமளித்தல் வேண்டும்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தோர் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் சமுகமளிக்க வேண்டும்.

அத்துடன் தங்குவதற்கு தேவையானவற்றை எடுத்து வருதல் வேண்டும்.

பங்குபற்றுபவர்கள் கலாசார உடையிலேயே பங்குபற்றுதல் வேண்டும் என அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். பெறுமதிமிக்க பொருட்கள் எடுத்து வரலாகாது என குறிப்பிட்டுள்ளார். (2)

# இன்றைய இராசி பலன்

20.04.2014

(சித்திரை 07,ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பஞ்சமி காலை 7.35 மணிவரை
சஷ்டி பின்னிரவு 5.24 மணிவரை
மூலம் முன்னிரவு 8.08 மணிவரை
இராகுகாலம்- 4.32-6.02 மணிவரை
சுபநேரம் 9.02- 10.32 மணிவரை
அமிர்தசித்தம்

வளவன்

**மேடம்:** மனக்குறைகள் அகன்று மகிழ்ச்சி கூடும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் உருவாகும்.

**இடபம்:** சுற்றத்தாரை அனுசரித்துச் செல்வது நல்லது, வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள், மனச்சோர்வுகள் என்பன ஏற்படலாம், பிள்ளைகளின் திடீர் செலவுகளை சமாளிக்க நேரிடலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** அபூர்வ சந்திப்புகள் இடம் பெறலாம், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், வீட்டில் கலகலப்பான சூழ்நிலைகள் உருவாகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** ஆரோக்கியமான நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பகைவர்கள் விலகுவர், பயணத்தால் பலன் கிடைக்கும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், நாள்.

**சிம்மம்:** பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிறருக்கு உதவும் சிந்தனை உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கன்னி:** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், குடும்பத்தினர் உங்களின் சொற்களைக்கேட்டு நடக்க முன்வருவர், சுபகாரியச் செலவுகள் கூடும்.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், இளைய சகோதரத்தின் வழியில் உதவிகள் கிடைக்கலாம்,பழைய பாக்கிகள் வசூலாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள் ளும் வாய்ப்புண்டு. அந்நியர் சந்திப்பு [illegible]

**விருச்சிகம்:** குடும்பத்தினர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள், திடீர் பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்பட லாம், கற்பனை மிகுதியான நாள்.

**மகரம்:** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, கதிரவன் வழிபாடு காரிய வெற்றி தரும், சுபவிரயங்கள் கூடும், சயன சுகக் குறைவான நாள்.

**கும்பம்:** சமயோசித புத்தியில் பலரையும் கவர்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், வருமானம் திருப்தி தரும்.

**மீனம்:** மற்றவர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும், நம்பிக்கைகள் நடைபெறும் நாள், நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, முயற்சிகள் எளிதில் கைகூடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருசுவில் சந்தியில் நிறுத்தப்படும் துவிச்சக்கரவண்டிகள் மாயம்

## திருடர்களின் கைவரிசையென மக்கள் விசனம்


(மிருசுவில்)

மிருசுவில் சந்திப் பகுதியில் துவிச்சக்கர வண்டிகள் தொடர்ச்சியாக திருடப்பட்டு வருவதாக அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மிருசுவில் சந்தி கடைகளுக்கு பின்னால் பாடசாலை மாணவர்கள் மற்றும் வேலைக்கு செல்வோர்கள் தமது துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தி விட்டுச் செல்வது வழமை.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இனந் தெரியாத நபர்களினால் துவிச்சக்கர வண்டிகள் தொடர்ச்சியாக திருடப்பட்டு வந்த நிலையில் கடந்த புதன்கிழமை ஒருவரின் துவிச் சக்கர வண்டி திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆரம்பத்தில் கொடிகாமம் பொலிஸ் பிரிவில் முறையிட்டும் எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது. (2-85)



(நன்றி:- ஐலன்ட்)

# யாழ். மாநகர சபை தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்

## இல்லையேல் மு.த.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை தொழிலாளர்களின் பிரச்சினையில் இராணுவமோ, பொலிஸாரோ தலையிட கூடாது என்று சுட்டிக் காட்டிய முற்போக்கு தமிழ்த்தேசியக்கட்சியின் செயலாளரும் முன்னாள் யாழ்.மாநகரசபையின் ஆளும்கட்சி உறுப்பினருமான எஸ்.விஜயகாந் , இம்மாத இறுதிக்குள் தொழிலாளர்களுக்கு உரிய தீர்வினை வழங்க முன்வரவில்லையென்றால் மாபெரும் கண்டனப்போராட்டத்ததை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்

யாழ். மாந்கர சபையில் கடமையாற்றும் தொழிலாளர்கள் கடந்த இரண்டு நாட்களாக நிரந்தர நியமனம் வழங்க கோரி போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த் போராட்டத்தினை நடத்தும் தொழிலாளர்களின் உரிமை போராட்டத்தினை முடக்கும் வகையில், இராணுவத்தினர் செயற்பட்டு வருகின்றதாக தகவல்கள் எமக்கு கிடைத்துள்ளன. அதாவது யாழில் உள்ள இராணுவத்தினரை பயன்படுத்தி துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு யாழ்.மாநகர சபை தீர்மானித்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

அந்தவகையில், யாழ். மாநகர சபையின் சுகாதார தொழிலாளர்களினால் மேற்கொள்ளப் படும் போராட்டம் உரிமைப் போராட்டம். அந்த உரிமைப் போராட்டத்தில் இராணுவத்தினர் தலையிட கூடாது. அவ்வாறு தலையிடாத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி உதய பெரேராவிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளேன்.

இவ்வாறான உரிமைப் போராட்டத்தில் இராணுவமோ, பொலிஸாரோ தலையிட்டால், தொழிலாளர்கள் வேறு மாதிரியான செயல்களில் ஈடுபடுவதற்கு இந்த விடயம் உந்து சக்தியாக அமையுமென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் யாழ்.மாநகர சபை சுகாதார தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்தோம். ஆனால், தொழிலாளர்களின் பிரச்சினையினை தீர்ப்பதற்கு யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா முன்வரவில்லை.

தொழிலாளர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில், யாழ். மாநகர முதல்வருக்கும், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

தொழிலாளர்களின் நிர்ந்தர நியமனத்தில் யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் கையொப்பமிட வேண்டுமே தவிர அமைச்சருக்கும் இவ்விடயத்திற்கும் தொடர்பில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அந்த வகையில், வடமாகாண சபை முதலமைச்சராக இருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் இந்த விடயத்தினை கவனத்திலெடுத்து யாழ். மாநகர சபையின் தொழிலாளர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஆவண செய்ய வேண்டும்.

உள்ளூராட்சி அமைச்சராகவும் இருக்கும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஏன் யாழ். மாநகர சபையின் சுகாதார தொழிலாளர்களின் நிரந்தர நியமன விடயத்தில் ஏன் தலையிட முடியாது அவ்வாறு அவர் தலையிட்டிருந்தால் இந்தப்பிரச்சினை இவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்காது.

யாழ்.மாநகர சபையும், வடமாகாண சபையும் இணைந்து யாழ். மாநகர சபையின் சுகாதார தொழிலாளர்களுக்கான நிரந்தர நியமனத்தினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கு ஆவண செய்யாவிடின், எதிர்வரும் மே மாதம் 01 ஆம் 02 ஆம் திகதிகளில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்வதற்கு முற்போக்கு தமிழ் தேசிய கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, மத்திய அமைச்சின் பிரச்சினைகளைப் பற்றி கதைப்பதை விடுத்து மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும்.

இலங்கை அரசுக்கு சார்பான தென்னாபிரிக்கா நாட்டிற்கு தமிழ் மக்களின் பிரச்சினையினை தீர்ப்பதற்கு முன்வர வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் சென்று வந்துள்ளனர்.

ஆனால், தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றது. முதலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைத்து விட்டு, அரசியல் தீர்வினை நாட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் கடந்த மாதம் 30 ஆம் திகதி கல்லூரியின் துரைராசா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதற்கமைய தலைவராக சி.சிறிசற்குணராசா, செயலாளராக பி.கனகசபாபதி, பொருளாளராக வே.பிரபாகரன், உப தலைவர்களாக ச.தில்லையம்பலம், ந.அனந்தராஜ், தி.யோகசாமி, பொ.வியாகேசு, உப செயலாளராக வே.தவேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் இடம்பெற்றது.

போஷகராக கல்லூரியின் அதிபர் எஸ்.கிருஷ்ணகுமார் தெரிவானார் என உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (2)




# மோட்டார் சைக்கிள்களின் பிரதான விளக்குகள் பகலிலும் ஒளிர வேண்டும்

## பொலிஸார் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் பிரதான விளக்குகளை பகல் வேளையிலும் ஒளிரவிட்டு பயணிக்க வேண்டுமென யாழ். பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடு முழுவதும் இந் நடைமுறை கொண்டு வரப்பட்ட போதிலும் சில இடங்களில் இந் நடைமுறை பின்பற்றப்படவில்லை.

குறிப்பாக யாழில் இந் நடைமுறை ஒரு மாதத்திற்கு முன்னரே கொண்டு வரப்பட்ட போதிலும் இதுவரை அது சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆகவே இந் நடைமுறையை மோட்டார் சைக்கிளில் செல்வோர் பின்பற்ற வேண்டுமென பொலிஸார் கோரியுள்ளனர்.

இந் நடைமுறையினால் நாட்டில் குறிப்பிட்டளவு விபத்துக்கள் குறைவடைந்துள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (2-4)




ஜேர்மனில் இயங்கும் மனிதாபிமானத்தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் இறுதி யுத்தத்தின் போது இரண்டு கால்களையும் இழந்த இயக்கச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கு சிறு வியாபார முயற்சிக்காக வாழ்வாதார உதவித் தொகையினை வலி.வடக்கு பிரதேச சபைத் துணைத் தவிசாளர் சண்மு[illegible] தொகையினை வழங்குவதனைப் படத்தில் காணலாம். (பட[illegible] செய்தியாளர்)

# இந்திய கடற்படையினரால் இலங்கை மீனவர்கள் கைது

(பருத்தித்துறை)

இரு மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் அண்மையில் இரவுவேளை இந்திய நடுக்கடல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

குறித்த மீனவர்கள் இரவு நேரம் வல்வெட்டித்துறை கடலுக்கு சென்ற வேளை இந்திய கடற்பரப்பு எல்லைக்குள் அத்து மீறிச் சென்றுள்ளனர்.

இதேவேளை இரவு நேரப் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட இந்திய கடற்படையினரால் எந்த வித விசாரணைகளும் இன்றி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராசா ரவீந்திரன்(வயது 49), பிரா ன்சிஸ் மனோகரன் (வயது 36) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர் என தெரிய வருகிறது. (2-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் வீசப்படும் வலைகள் கணவாய் குழைகளால் சேதம்

## கடற்றொழிலாளர்கள் கடும் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கணவாய்க்குழைகள் அதிகரித்துள்ளதாக அப்பிரதேச கடற்றொழிலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இப்பிரதேச கடற்பரப்பில் குறிப்பிட்ட சில கடற்றொழிலாளர்கள் தென்னிலங்கை மீனவர்களின் துணையுடன் கணவாய்க்குழைகளை போட்டு கணவாய் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நடவடிக்கையானது வடமராட்சி கிழக்கு மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதனால் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் வலைகளில் மேற்படி குழைகள் சிக்குவதால் கடற்றொழிலாளர்கள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில் பிரதேச கடற்றொழிலாளர்கள் அவற்றை அகற்றி கடற்றொழிலில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில் மீண்டும் கணவாய்க்குழைகள் வீசப்பட்டிருப்பதால் வலைகள் கடும் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

எதிர்வரும் காலங்களிலும் இக்கடற்பிரதேசத்தில் இக்கணவாய்க்குழைகள் பயன்படுத்தப்பட்டால் பாரம்பரிய வலைகளில் தொழிலில் ஈடுபடும் கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை முற்றாக கைவிடவேண்டிய நிலை உருவாகும்.

இதனால் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே கணவாய்க்குழை போடுவதனை முற்றாக தடைசெய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவ வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-64)

# புத்தசாசனத்திற்கு எதிராக செயற்படும் நபர்களுக்கு சட்டம் நிறைவேற்றப்படும்

## பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவிப்பு

புத்தசாசனத்தை அழிக்க தயாராகியுள்ள, அதற்கு உள்ளேயும் வெளியேயும் இருக்கும் நபர்களுக்கு நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வரப்படும் என புத்தசாசன அமைச்சரான பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

புத்தசாசனத்திற்குள்ளேயே அதனை அழிக்கும் நபர்கள் உருவாகியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நிலைமையானது பௌத்த மக்களுக்கும், பௌத்த பிக்குகளுக்கும் பிரச்சினையாக மாறியுள்ளது.

அப்படியான நபர்களை புத்தசாசனத்தில் இருந்து நீக்கும் வகையில் குறித்த சட்டத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த சட்டத்திற்கு 31 தலைமை பௌதத பிக்குகளின் உதவியும் கிடைத்துள்ளது என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# மஹோற்சவம்

வேலணை புளியங்கூடல் இந்தன்முத்து விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 ந ாட்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் தினமும் மாலை 6 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மாவின் மகாபாரதம் இசைச் சொற்பொழிவும் இடம்பெறும் எனவும் ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (2)


**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532**

### உடனடியான வேலைவாய்ப்பு

எம்மிடம் பல்துறை சாந்த பிரிவில் வெற்றிடம் தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்/ கப்பல் புனர்நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள்/ மற்றும் கட்டட நிர்மாணத் துறையில் மேசன் /வெல்டர்/பெயின்டர்/ தச்சு/ இலற்சீசன்/ கையுதவியாளர்கள் தேவை. சம்பளம் 25000/= -45000/= (தொழில் அடிப்படையில்) உணவு+ தங்குமிடம் சகாய விலைகளில் (கொழும்பு அண்மித்த பிரதேசங்களில்)

(சி-7097) உடன் தொடர்பு:0775561883

### யாழ்ப்பாணக் கம்பன் கழகம் நடத்தும் நிலாக் கால நிகழ்வு



இடம்: கம்பன் கோட்டம், நல்லூர்.
காலம்:- 20.04.2014
ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மாலை 4.30 மணி

மங்கல விளக்கேற்றல்:- திரு. ஆ. தியாகராஜா
*(தலைவர், நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்)*
கடவுள் வாழ்த்து:- செல்வி. சகிஷ்ணா ரவிச்சந்திரன்
தலைமையுரை:- திரு.சி.க. எழில்வேந்தன்
*(அதிபர். யாழ். மத்திய கல்லூரி*

விவாத அரங்கு
தலைவர்
பேராசிரியர் .எஸ். சிவலிங்கராஜா
''வீழ்ச்சியால் பெரிதும் மாட்சி பெற்ற பாத்திரம்''

*தசரதன்- திரு.ச.மார்க்கண்டு*
*சடாயு- திரு. அ.வாசுதேவா*
*வாலி- திரு.லோ.துஷிகரன்*
*கும்பகர்ணன்- திரு.ந.விஜயசுந்தரம்*
*இந்திரஜித்- பேராசிரியர் தி.வேல்நம்பி*
*இராவணன் -திரு. இரா.செல்வவடிவேல்* இ

'கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்'

| த.ஜெயசீலன் | லோ.துஷிகரன் | அ.வாசுதேவா | கி.கிருபானந்தா |
|---|---|---|---|
| பெருந்தலைவர் | தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

### காணி விற்பனைக்கு

கரந்தன் சந்திக்கருகாமையில் 3 1/2 பரப்பு வாழைத் தோட்டத்துடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. (6163)

தொடர்புகட்கு:-0771102210

### உடனடி வேலைவாய்ப்பு

நீங்கள் 18-50 வயதுடையவரா? (ஆண்- பெண்) சம்பளம் 18000/-, 25000/-, 32000/- உணவு+ தங்குமிடம் குறைந்த விலைகளுடன் உடனடியான வேலைவாய்ப்புக்கு கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ கோடியல்/ நூடில்ஸ்/ தண்ணீர் போத்தல் PVC/ கோழி இறைச்சி/ தேயிலை/ காமென்ட்/ பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலை களில் உற்பதி/ லேபல்/ தரம் பிரித்தல்/ களஞ்சியப் பிரிவுக்கு ஆட்கள் தேவை (நண்பர்கள் குழுக்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள். உடன் தொடர்பு (விசேடம் வடக்கு/ கிழக்கு தமிழ்/ முஸ்லிம் மக்களுக்கு) தொடர்பு: 077 8430179 (சி-7096)

### உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜி) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி. T.P. 0777064247

(6142)

### கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: சித்திரை 2
கி.பா: 39 சூரி செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / அரச ஊழியர்
தொ.இ: B/1329

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 33.75 சூரி செவ் 9 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L (பிரான்ஸ் Not PR)
தொ.இ: B/1331

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்திராடம் 2
கி.பா: 21 செவ் 12 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: BSc, MA / Programme Officer
தொ.இ: B/1333

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம் 4
கி.பா: 84 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L / காசாளர்
தொ.இ: B/1335

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: விசாகம் 4
கி.பா: 80.5 செவ் 8 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: GAQ / NGO Officer
தொ.இ: G/1890

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 23
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1895

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: 52
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: சிறப்புப் பட்டதாரி / கணனி வேலை
தொ.இ: G/1896

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: 24 .5
உயரம்: 160 cm
தகைமை/தொழில்: A/L, HNDE
தொ.இ: G/1899

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 90 | 80 | 90 | 80 |
| தக்காளி | 40 | 40 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 25 | 20 | 35 | 40 |
| கரட் | 90 | 100 | 100 | 120 |
| பூசணி | 25 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 50 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 100 | 60 |
| லீக்ஸ் | 80 | 60 | 80 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 80 | 60 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 30-40 | 80 | 100 | 160 |
| போஞ்சி | 120 | 120 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 25 | 40 | 50 | — |
| கீரை – 1 பிடி | 10 | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 90 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 | 80 |

# வறுமை இருப்பது ஐ.தே.கட்சிக்கே அன்றி நாட்டுமக்களுக்கு அல்ல

## அமைச்சர் பியசேன கமகே தெரிவிப்பு

நாட்டு மக்களிடம் முன்னரை விட தற்போது பணம் புழக்கத்தில் இருப்பதாகவும் வறுமை இருப்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கே அன்றி நாட்டு மக்களுக்கு அல்லவென சிரேஷ்ட அமைச்சர் பியசேன கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தாண்டு காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது வழமையானது. புத்தாண்டு காலத்தில் பொருட்களுக்கு அதிக கேள்வி நிலவுவதே இதற்கு காரணம்.

புத்தாண்டு காலத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிப்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் நடந்துள்ளது.

பொருட்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டை எமது அரசாங்கத்தினால் குறைக்க முடிந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி கூறுவது போல் மக்கள் வறுமையில் வாடவில்லை. எந்த பிரதேசத்தில் மக்கள் பட்டினியால் உயிரிழந்துள்ளனர்?. மூன்று வேளை சாப்பிடாதவர்கள் எந்த பிரதேசத்தில் உள்ளனர்?.

இவை எதிர்க்கட்சிகளின் வெற்று போராட்ட கோஷங்கள். புத்தாண்டு காலத்தில் பொருட்களின் தட்டுப்பாடு குறித்து எதிர்க்கட்சிகள் கூக்குரலிடுவது இன்று வாடிக்கையாக மாறியுள்ளது என்றார். (2)

## பி.பி.சி. ஊடகவியலாளருக்கு விசா வழங்க அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

பி.பி.சி செய்தி சேவையின் இலங்கைக்கு பொறுப்பான ஊடகவியலாளர் சார்ள்ஸ் ஹெவுலனுக்கு அரசாங்கம் வழங்கிய இரண்டு வருடத்திற்கான விசா அனுமதி நீடிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இம் மாதம் காலாவதியாகவும் அவரது விசா அனுமதியை புதுப்பிக்க அவர் விண்ணப்பித்திருந்த போதிலும், அவருக்கு மூன்று மாதங்களுக்கு மட்டுமே விசா அனுமதி வழங்கப்படும் என அமைச்சின் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

மூன்று மாதங்களுக்கு வழங்கபடும் விசா அனுமதி முடிவடைந்த பின்னர், அவர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும அமைச்சு உத்தரவிட்டுள்ளது. (2)

# உண்மையான கிறிஸ்தவனாக வாழ உயிர்த்தவரின் வாழ்வை மீட்டுப்பார்ப்போம்

மானிட விடியலின் உச்சமாக உலக வரலாற்றில் உயர்கின்ற உயிர்ப்பு என்கின்ற உன்னதம் கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாய் அமைகின்றது.

மனிதம் விஞ்சி நின்ற வாழ்வியலின் சின்னமாய் வாழ்ந்து காட்டி இயேசு கிறிஸ்துவின் உன்னத அடிச்சுவடிகளில் வாழ்கின்ற கிறிஸ்தவர்கள் உளங்களிக்கும் விழாவாக உயிர்ப்பு விழாவினை கொண்டாடுகின்ற இன்றைய நாளில் உயிர்த்தவரின் வாழ்வியலை புரட்டிப் பார்க்க வேண்டிய கட்டாயம் காலத்தின் தேவையாகக் கண்முன்னே விரிகின்றது.

இயேசு, இறைவனாக இருந்தும் மானிடர்க்காய் மனித அவதாரம் எடுத்த மகா அற்புதர். தன் வாழ்வின் ஒவ்வொரு நகர்வுகளிலும் மானிடம் ஓங்கும் உயர் தத்துவங்களோடு நடைபோட்ட உன்னதர்.

அவர் தடம் பற்றிப் பயணிக்கின்ற எமது கால்கள்தடம்மாறித்தடுமாறும் நிஜங்கள் சமகாலத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பது... நிதர்சனம்.



நான் செய்தது போல நீங்களும் செய்யுங்கள் என்பது இயேசுவின் போதனை. அவர் பாதங்களை கழுவினார். பாவிகளை மன்னித்தார். தன் கரங்களில் ஆணி அறைந்தவர்களையும் அவ் அறைதலுக்கு அடித்தளமிட்டவர்களையும் மன்னித்தார். இந்த மனித மாண்பு இன்று நம்மிடையே கேள்விக்குறியாகவே உள்ளதென்பதுகசப்பான உண்மை.

விரைந்து செல்லுகின்ற உலகத்தின் நுகர்வுக் கலாசாரத்தில் பயணிக்கின்ற நமது கிறிஸ்தவ வாழ்வு வெறுமனே சடங்குகளை நிகழ்த்துகின்ற ஆற்றுகையாகவே நம்மை தற்கால உலகில் அடையாளப்படுத்துகின்றது.

வாழ்ந்து காட்ட வேண்டிய நாங்களே வீழ்ந்து போவதற்கான வழிகளைக் காட்டும் குருட்டு வழிகாட்டி களாக தடம் மாறிக் கொண்டிருக்கின்றோம்.இது ஏன்? என்ற சிந்தனை முகிழ்க்கின்ற போது கிறிஸ்துவாக வாழ்தல் என்ற கருத்து தற்கால உலகியல் சகதிக்குள் அமிழ்ந்து வடிவம் மாறி கிறிஸ்தவ முக மூடிகளை மட்டுமே நமக்கு தந்திருக்கின்றது.

உன்னைப் போல் உன் அயலவனையும் நேசி என்கின்ற கிறிஸ்தவத்தின் அடிப்படைத் தத்துவம் சுயநல வேர்களால் நசியுண்டு உருமாறிப் போகின்ற துர்ப்பாக்கிய நிலையே மேலோங்கி நிற்கின்றது.

கிறிஸ்தவ சார் கருத்துகளை வெறுமனே எழுத்துகளில் எழுதி வாசித்து முடிந்தவுடனே அவை முற்றுப் பெறுகின்றது. ஆலயங்களை அழகாக்குவதிலும் ஆ சந்தி சுற்றுவதிலும் திருவிழாக்களை பெரு விழாக்களாக கொண்டாடுவதிலும் செலுத்தப்படும் கவனம் சாதாரண வாழ்வியல் யதார்த்தங்களை புரிந்து கொண்டு கிறிஸ்தவத்தின் உட்பொருளை வாழ்வதில் செலுத்தப்படுவதில்லை என்பதே வேதனை தரும் விடயம்.

புரிந்துணர்வின்மை, விட்டுக்கொடுப்பின்மை பிறர்நலம் பேணாமை, தூய்மையான அன்பின்மை எனும் பண்புகள் விரிசலடைய குடும்பங்கள் குலைந்து போகின்றன. இவ் விரிசல்களுடாக பிள்ளைகள் தடுமாறித் தடம்மாறி பயணிக்க, தரமற்ற சினிமாவும் தவறான இணையங்களும் கலாசார சீர்கேட்டுக்குத் தீனிபோட, சுயமற்ற தன்மைகளால் ஏற்படும் வறுமைகளும் மனித நேசிப்பின் அசாதாரண வீழ்ச்சியின் விளைவினால் ஏற்படும் விபரீத மரணங்களும், நாம் என்கின்ற நன்னிலைத் தகர்வுகளால் ஏற்படுகின்ற இருப்பற்ற நிலைகளும் இறையியல் வாழ்விலிருந்து நாம் வெளிநடப்புச் செய்துள்ளோம் என்பதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

நான் தாகமாயிருக்கின்றேன் என்று இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பு இறைமகன் கூறியதை விட இப்போது பல மடங்கு தாகமாயிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வோம். அவர் விட்டுச்சென்ற அடிச்சுவடுகளை வெறுமனே வார்த்தையளவில் பறைசாற்றுவதை விடுத்து வாழ முயலுவோம். அன்பெனும் கரங்களை அகலப்படுத்தி அனைவரையும் அரவணைப்போம். முகத்திரைகளைக் கிழித்தெறிந்து மீண்டும் முழுக்கடைவோம். மனித மாண்பினை மகத்துவமாய் வாழ முயல்வோம். அப்போதுதான் இயேசுபிரானின் உயிர்ப்பின் மேன்மை உன்னதமடையும்என்பதுஉண்மை.

*ஜே.ம.ஜோஷப்மேரி*
*ஆசிரியர்*

## பாகிஸ்தானியர்களை குடியேற்ற இரகசியத்திட்டம் முன்னெடுப்பு

இலங்கையில், பாகிஸ்தானியர்களை குடியேற்றும் இரகசியத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரகசியமான முறையில் நாட்டுக்குள் அழைத்து, பாகிஸ்தானியர்கள் குடியேற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு பிரதேசத்தில் பாகிஸ்தானியர்கள் குடியேறியுள்ளனர்.

இவ்வாறு குடியேறிய 18 பாகிஸ்தானியர்கள் கடந்த ஆண்டில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவ்வாறான மூன்று பேர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மத நிறுவனமொன்று இவ்வாறு குறித்த நபர்களை இலங்கைக்குள் அழைத்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் மலேரியா நோய் இல்லாதொழிக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வாறான பாகிஸ்தானியர்களின் வருகையினால் மீண்டும் மலேரியா தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (2)

## சிகிரியாவில் மழைக்குருவி கூடுகளை உடைத்தவர் கைது

(கொழும்பு)

சிகிரியாவில் 20 இற்கும் மேற்பட்ட மழைக்குருவி கூடுகளை உடைத்தார் என்ற சந்தேகத்தில் ஒருவரை கைது செய்துள்ளதாக சீகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு கிலோகிராம் மழைக்குருவி கூடு மூன்று இலட்சம் ரூபாவிற்கு விற்கப்படுவதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார் சந்தேகநபரை தம்புள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (2)

## ராஜபக்ஷ அரசு கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறலாம்

### எதிர்வு கூறுகிறார் ரங்கேபண்டார எம்.பி

உலகில் மிகவும் மோசடியான அரசாங்கம் என்று மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற கூடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார எதிர்வு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசியாவின் ஆச்சரியம் தென்பட ஆரம்பித்து விட்டது. மதுவுக்கு முற்றுப்புள்ளி எனக் கூறி 10 வருடங்கள் கடந்து விட்டது. ஆனால் உலகில் மது பாவனையில் உள்ள நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. ஏனைய மூன்று நாடுகள் குளிரான காலநிலையை கொண்ட நாடுகள். வெப்ப வலய நாடான இலங்கை மது பாவனையில் நான்காவது இடத்தில் உள்ளது.

இன்னும் கொஞ்ச நாட்களில் கமிஷன் அடிப்பதிலும் கொலை, கொள்ளைகளில் ஈடுபடுவதிலும் மோசடியிலும் இலங்கை உலகில் முதலிடத்திற்கு வர வாய்ப்புள்ளது.

இது குறித்து தற்போது ஆராய்ந்து வருகின்றனர். முடிவுகள் கிடைத்ததும் உலகில் மோசடியான அரசாங்கம் என்ற விருது மகிந்த அரசாங்கத்திற்கு கிடைப்பதுடன் அது கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இடம்பெறலாம் எனவும் பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், சினிமா, பொழுது போக்கு தொடர்பான உங்கள் கேள்விகளை

*ஆசிரியர், வியாசர் பதில்கள்*
*இல. 3,2 ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

வே.வே.அகிலேஸ்வரன்,
மருதங்கேணி

அன்பின் வியாசரே!

நடிகைகளுக்கும் நம் நாட்டு பெண்களுக்கும் என்ன ஒற்றுமை?

தேவையான இடத்தில் நடிக்காமல் தேவையில்லாத இடங்களில் அதிகமாய் நடிப்பது.

சி.சிவறீபன்,புன்னாலைக்கட்டுவன்

வியாசர் அண்ணா...!

பறக்கும் தட்டு பறக்கும் தட்டு என்று சொல்லி கேள்விப்பட்டிருக்கிறேன். நேரில் பார்க்கவில்லை அது என்னாங்க?

தம்பி சிவறீபன் மாயாவியின் ராணி கமிக்ஸ் புத்தகங்களை அதிகம் வாசிப்பீர் போல் தெரிகிறது.

இரா. ஜெ.துஷ்யந்தா, சூராவத்தை

மை டியர் ப்ரண்!

மது போதையில் மின் உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை உடைக்கும் மனிதன் பற்றி?

மதுபோதை இல்லாத நேரம் பார்த்து அவர் மண்டையை உடைத்தால் சரிவரும்.

வளர்மதி யுகன், இருபாலை

அன்பின் வியா அண்ணா!


ஆண்கள் ஏன் தங்களுடைய பிழைகளை மறந்து பெண்களை பிழை பிடிக்கின்றார்கள்?

உங்கள் கேள்வியில் பெரிய பிழை ஒன்று இருக்கின்றதே. தங்களின் பிழைகளை மறந்தல்ல மறைத்து விட்டு பெண்களைப் பிழை பிடிப்பது தானே ஆண்களின் குணம்.

## உங்களைப் போல் ஒருவரை நான் பார்க்கவே இல்லை?

### *கொஞ்சம் சிரிங்கப்பா...*

ரெண்டு செம்பு
தண்ணியில
குளிச்சு முடிச்சுட்டு
அதுக்கு காக்கா
குளியல் னு
பெயரை வெச்சு
நம்மை
அசிங்கப்படுத்துறாங்க.
இவங்க மேல
எச்சம் போடுறதுல
தப்பேயில்லை!



K. வாணி, புன்னாலைக்கட்டுவன்

அன்பின் வியா அண்ணா!

கதை கட்ட நாலுபேர் இருந்து விட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கம்தான். இதன் கருத்து யாது என கூறுவீர்களா?

வெறுமனே கண்ணால் பார்ப்பதையும் காதால் கேட்பதையும் வைத்து எடுக்கும் சில முடிவுகள் பாரதூரமாகி விடும். அதுதான் இது.

## தாய் தந்தையை இழந்த அநாதைப் பிள்ளைகளை ஏன் யாரும் கவனிப்பதில்லை?

கலைஅரசன், மிருசுவில்

வியா.!

உங்களைப் போல் ஒருவரை நான் பார்க்கவே இல்லை?

இந்தக் கதையெல்லாம் இங்கு விடாதே. அப்பனே முப்பது வருடத்திற்கு முன்னர் என் பொண்டாட்டி சொன்ன கதை இது.

அ.நிறோஜன், SOS சிறுவர் கிராமம், யாழ்ப்பாணம்.

அன்பின் வியாசரே!

தாய் தந்தையை இழந்த அநாதைப் பிள்ளைகளை ஏன் யாரும் கவனிப்பதில்லை?

நடிகர் கமலஹாசனின் அருமையான கவி வரிகள்.

அநாதைகள் எல்லாம் கடவுளின் குழந்தைகள் என்றால் குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டும் கடவுளுக்கு.

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

புராணத்தில் போற்றப்படும் வாய்மையில் சிறந்த அரிச்சந்திரன் இக்காலத்தில் வாழ்ந்தால்...?

அதே புராணம் தலைகீழாக மாற்றி எழுதப்பட்டு விடும்.

MR: D

வணக்கம்

பள்ளிக் காதல் படலை வரைக்கும் என்பதை கொஞ்சம் ஆழமாக விபரிக்க முடியுமா?

பள்ளிப் படலையுடன் முடிந்து விட்டால் பரவாயில்லை. வீட்டுப் படலைவரை தொடர்ந்து விபரீதம் ஆகிவிடுகிறதே! படிக்கும் வயதில் படிக்காமல் இறுதியில் சுடலை ஞானம் வந்து விட்டது என ஞானப் பேச்சு பேசாமல் இருந்தால் சரி.

கிரு. செந்தூரன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

வேலைத் தளங்களில் விடுமுறை சம்பந்தமான பிரச்சினை ஏற்படுவது வழமை. அவ்வாறு உமக்கு ஏற்பட்டு இருந்தால் எம்மிடம் பகிர்ந்து கொள்ளலாமே?

வேலைக்கு லீவு எடுத்த ஒருவன் ஓடி வந்து வீட்டு வாசலில் இருந்த தாத்தாவைப் பார்த்து முதலாளி வருகிறார் உள்ளே போய் ஒழிக்குமாறு கூறுகிறான். தாத்தா! நீ லீவு எடுத்ததற்கு நான் ஏன் ஒழிக்க வேண டும். முதலாளி வந்தால் நீதானே ஒழிக்க வேண்டும் என கேட்கிறார். அதற்கு பேரன் ஐயோ தாத்தா நீங்கள் செத்துப் போயிட்டீர்கள் என்றுதான் லீவு எடுத்தேன் என்றான். (என் அனுபவம் இல்லை)

# தொண்டைமானாறு மீன்களின் இறப்புக்கு ஒட்சிசன் பற்றாக்குறையே காரணம்

## வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமான் ஆற்றுக் கடல் நீரேரியில் பெரும் எண்ணிக்கையில் மீன்கள் இறந்து மிதப்பதற்கான காரணம் ஆற்று நீரில் ஏற்பட்டுள்ள ஒட்சிசன் பற்றாக்குறையே என்று வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தொண்டைமான் ஆற்றுக் கடல்நீரேரியில், செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலட்சக்கணக்கான மீன்கள், குறிப்பாகத் திரளி வகை மீன்கள் இறந்து கரையொதுங்கின. இந்த அசாதாரண மீன் இறப்புத் தொடர்பான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நேற்று அமைச்சர் அப்பகுதிக்குச் சென்றிருந்தார். அங்கு ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக தொண்டைமானாறுக் கடல் நீரேரி வழமைக்கு மாறாக அதிகம் வற்றியுள்ளது. எஞ்சியுள்ள குறைந்தளவு நீரில் எல்லா மீன்களுக்கும் போதுமான அளவு ஒட்சிசன் இல்லை. அதுமட்டும் அல்லாமல் உயர் வெப்பநிலை காரணமாக நீரில் ஒட்சிசனின் கரைதிறனும் குறைவாக உள்ளது. இந்த ஒட்சிசன் பற்றாக்குறையே மீன்களின் சடுதியான இறப்புக்கான பிரதான காரணமாகும்.

ஒட்சிசன் பற்றாக்குறைவுக்குச் சகிப்புத் தன்மையைக் கொண்டிராத திரளி மீன்களே முதலில் அதிகளவில் இறக்க ஆரம்பித்துள்ளன.


ஒட்சிசன் பற்றாக்குறைவுக்கு ஓரளவேனும் தாக்குப் பிடிக்கக்கூடிய கெளிறு மற்றும் விலாங்கு மீன்கள் நீரின் மேல்மட்டத்துக்கு வந்து சுவாசிக்க முயல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. நீர் ஆவியாவதால் ஏற்படும் உப்புச் செறிவு அதிகரிப்பும் இன்னுமொரு உப காரணமாக இருக்கக் கூடும். மற்றப்படி மீன்களின் இறப்புக்கு நஞ்சு காரணம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் பொ.ஐங்கரநேசனுடன் மாகாண சபை உறுப்பினர்கள் க.சுகிர்தன், க.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், வல்வெட்டித்துறை நகர சபைச் செயலாளர் கிரிஜா வாசுதேவன், வலி. கிழக்குப் பிரதேசசபை முன்னாள் தலைவர் அ.உதயகுமார், வடமாகாண பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் ந.சுதாகரன், யாழ் மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் க.கருணாநிதி, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொன்ஸ்ரன் ஜக்சீல் மற்றும் தொண்டைமானாறு கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் ந.வர்ணகுலசிங்கம் ஆகியோரும் அப்பகுதிக்குச் சென்றிருந்தார்கள்.

நேற்று அப்பகுதியில் கணிசமான அளவு மீன்கள் இறந்து கரையொதுங்கி இருந்ததனால் அவற்றை அகற்றிப் புதைக்கும் பணியில் வல்வெட்டித்துறை நகரசபை, கரவெட்டி பிரதேச சபை மற்றும் வலிகிழக்கு பிரதேச சபைகளைச் சேர்ந்த பணியாளர்களுடன் வடமாகாண சுற்றாடல் அமைச்சின் பணியாளர்களும் இணைந்து ஈடுபட்டிருந்தனர். (2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் சிகப்பு மனிதன் - திரைவிமர்சனம்



நார்கொலாப்ஸி' இது ஒரு மோசமான தூக்க வியாதி. அடிக்கடி கண்ணைக் கட்டிக் கொண்டு தூக்கம் வந்து விடும்.என்னடா இது இராத்திரி எல்லாம் தூக்கம் வராம அவனவன் பேஸ்புக்ல உட்கார்ந்து கிட்டு இருக்காய்ங்க. தூக்கம் வருவ தெல்லாம் ஒரு வியாதியா? என்று குழப்பமாக இருக்கலாம்.

ஆனால் 'நான் சிகப்பு மனிதன்' படத்தில் விஷாலுக்கு உள்ள வியாதி எந்த அளவிற்கு மோசம் என்றால்? கண்ணுக்கு முன்னாடி அழகுச் சிலையாக நிற்கும் லட்சுமி மேனனை உணர்ச்சிவசப்பட்டு அணைக்க நினைக்கும் போது கூட பாழாய்ப்போன இந்த தூக்கம் வந்து அப்படியே கண்கள் சொருகிவிடும்.

எந்த ஒரு அதிர்ச்சியான சத்தத்தை கேட்டாலோ அல்லது உணர்ச்சிவசப்பட்டாலோ நடுரோட்டில் உச்சி வெயில் மண்டையைப் பிளந்தாலும் அந்த நேரத்தில் விஷாலுக்கு ஏசி ரூமில் பஞ்சு மெத்தையில் படுத்திருப்பது போல் தூக்கம் வந்து விடும். ஆனால் தூக்கத்திலும் மற்றவர்கள் பேசுவதை கேட்க முடியும்.

இப்படியாக மற்ற மனிதர்கள் சாதாரணமாக செய்யக் கூடிய சில விடயங்களைக் கூட தம்மால் செய்ய முடிய வில்லையே என்று விஷால் வருந்துகிறார். தனது ஆசைக ளைப் பட்டியலிடுகிறார். ஷகிலா படத்திற்கு முதல் நாள் முதல் ஷோ சென்று பார்ப்பதும் அவரது 10 ஆசைகளில் ஒன்று.

இந்த வியாதி யால் பெரும் அவதிப்படும் விஷாலை தெரிந்தே லட்சுமி மேனன் காதலிக்கிறார். ஷகிலா படத்திற்கு அழைத்துச் சென்று அவரது ஆசையை நிறைவேற்று கிறார். (என்ன பொண்ணுடா இது). விஷாலால் தனக்கு ஒரு பேரப் பிள்ளையை பெற்றுத் தர இயலாது என்பதை அறியும் லட்சுமி மேனனின் அப்பா ஜெயப்பிரகாஷ் அவர்களின் கல்யாணத்திற்குத் தடை விதிக்கிறார். தண்ணீரில் நனைந் தால் விஷா லுக்கு தூக்கம் வராது என்பதை கண்டு பிடிக்கும் லட்சுமி மேனன் விஷாலை விடாப்பி டியாக துரத்தி அவரது வாரிசை எப்படியோ வயிற்றில் சுமந்து விடுகிறார்.

இனி யாராலும் தங்களைப் பிரிக்க முடியாது என்று எண்ணி சந்தோஷப்படும் வேளையில் லட்சுமி மேன னுக்கு ஒரு அசம்பாவிதம் நடக்கிறது.முதல் பாதியில் ஒவ்வொரு காட்சியும் அழகாக ரசிக்கும் படியாக நகரும் திரைக்கதை இரண்டாவது பாதியில் இடைவேளையோடு சற்றே சருக்கத் தொடங்குகிறது.

அந்த அசம்பாவிதம் நடப்பதற்குக் காரணமாக ஒரு பிளாஷ்பேக் பழிவாங்கும் கதையும் சொல்லப்படுகிறது. அங்கு தான் கதையின் தள்ளாட்டம் கொஞ்சம் அதிகம்தான் ஆரம்பமாகிறது.இருந்தாலும் இரண்டாம் பாதியில் வரும் இனியா கதாப்பாத்திரம் ரசிகர்களின் மொத்த கவனத்தையும் ஈர்த்து சில நிமிடங்கள் கதையை நகர்த்துகிறது.இதற்கு முன் விஷால் நடித்த சமர் படத்தை இயக்கிய அதே திரு தான் இந்த படத்தையும் இயக்கியுள்ளார். ரிச்சர்ட் எம்.நாதன் ஒளிப்பதிவு செய்துள்ளார். ஜீவி பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

நடிப்பு

இயல்பாக நடிப்பதில் விஷாலின் திறமை அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். சமீப காலமாக 'திமிரு' தனமான நடிப்பை எல்லாம் விட்டுவிட்டு பாண்டிய நாட்டில் பயந்தாங் கொள்ளி நான் சிகப்பு மனிதனில் தூக்க வியாதி என பல வித்தியாசமான கதாப் பாத்திரங்களை தேர்வு செய்து நடிக்கத் தொடங்கிவிட்டார். நடிப்பில் நல்ல முதிர்ச்சி வெளிப்படத் தொடங்கியிருக்கிறது.

லட்சுமி மேனனுக்கு நேரும் கொடுமையை தன்னால் தடுக்க முடியவில்லையே என்று அவர் வருந்தும் காட்சிகளில் கைதட்ட வைக்கிறார்.

விஷாலின் அம்மாவாக வரும் சரண்யா வழக்கம் போல் அப்பாவி அம்மாவாக கலகலப்பை ஏற்படுத்தியிருக்கிறார். விஷாலின் நண்பராக வரும் ஜெகனுடன் அவர் அடிக்கும் காமெடி பஞ்ச் வசனங்கள் ரசிக்க வைக்கின்றன.

விஷாலின் இன்னொரு நண்பராக வரும் சுந்தர் (மயக்கம் என்ன, 3 புகழ்) தான் இரண்டாம் பாதியில் நடக்கும் கதையின் முக்கிய திருப்பத்திற்கு காரணமாக இருக்கிறார். ஆனாலும் நடிப்பில் சொதப்பியிருக்கிறார். வசனங்களை பேசும் பொழுது குளறுகிறார். அழுகையில் செயற்கைத் தனங்கள் தெரிகின்றது. இது போன்ற வலுவான கதாப் பாத்திரங்களை செய்வதற்கு இன்னும் மிகுந்த அனுபவம் தேவை என்பதை இயக்குநர் கவனிக்கவில்லையோ?

படத்தில் லட்சுமி மேனன், இனியா இரண்டு நாயகிகளும் அழகாக வந்து போகின்றனர். லட்சுமி மேனன் முதல் பாதியில் விஷாலுடன் இதழோடு இதழ் முத்தம் வைக்கும் காட்சியிலும் விஷாலை வம்படியாக நீச்சல் குளத்தில் தள்ளும் 'அந்த' காட்சியிலும் அவரது முகபாவனைகள் ஆபாசமாகத் தெரியவில்லை.

ஆனால் அதற்கு நேர்மாறாக இனியா வரும் ஒவ்வொரு காட்சியிலும் கவர்ச்சி தான். நல்ல நடிப்பு ஆற்றல் கொண்ட இனியா,தடாலென இப்படி ஒரு கதாப் பாத திரத்தை சவாலாக ஏற்று செய்திருந்தாலும் இப்படியே தொடராமல் இருந்தால் கதாநாயகி யாக தொடர்ந்து நிலைப் பதற்கு வாய்ப்பு உள்ளது.

**இசை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு**

ரிச்சர்ட் எம். நாதனின் ஒளிப்பதிவு ஓகே ரகம் தான். பிரம்மிக்க வைக்கும் காட்சிகள் இல்லையென்றாலும் பாடல் காட்சிகள், படத்தில் தொடக்கத்தில் வரும் ரயில் காட்சி கள் போன்றவற்றை சிறப்பாக செய்திருக்கிறார்.

ஜீவி பிரகாஷ் பின்னணி இசையில் காதல் காட்சிகள் அற்புதம். அது அவருக்கே உரிய பாணி. பாடல்களை இன்னும் ரசிக்கும் படியாக அமைத்திருக்கலாம்.படத்தின் எடிட்டிங்கை ஆண்டனி ரூபன் சிறப்பாக செய்திருக்கிறார்.'நார்கொலாப்ஸி' என்ற நோய் பற்றியும் அதன் தாக்கம் ஒருவரது வாழ்க்கையில் எந்த அளவிற்கு சக மனிதர்களிடமிருந்து வேறுபடுத்தும் என்பதையும் கதையின் கருவாக வைத்து சொல்ல நினைத்த இயக்குநருக்கு பாராட்டுகள்.

அதே நேரத்தில் அந்த நோயில் இருந்து விஷால் தன்னை எப்படி மாற்றிக் கொண்டு வாழ்க்கையில் வெற்றியடைகிறார் என்பதை முழு நீளத் திரைக்கதையாக காட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் தேவையில்லாத பிளாஷ்பேக் பழி வாங்கும் படலம் கிளைமாக்ஸ் காட்சியில் திடீரென விஷாலின் அதிரடி சண்டை என பழைய மசாலாக்களை புகுத்தியதால் சலிப்பைஇரண்டாம் பகுதி அதிகமாகவே ஏற்படுகின்றது.

தூங்காமல் ஒருமுறை பார்க்கலாம்!

# சினித் துளிகள்

• **கோச்சடையான்** பட விடயமாக ஜெயா டி.வி அலுவலகம் வந்த சுப்பர் ஸ்டார் இரண்டு மணி நேரம் அங்கிருந்து எல்லோருடனும் போட்டோ எடுத்து சகஜமாகப் பேசி விட்டுச் சென்றாராம்.

• ஷங்கர் இயக்கும் ஐ படத்தின் கதை ரன்னிங் ஆன் கர்மா என்ற சீனப் படத்தைத் தழுவி எடுக்கப்படுகிறது என்று ஒரு கோலிவுட் டாக். புத்தத்துறவி ஆக வேண்டும் என்று பல பயிற்சிகள் எடுக்கும் இளைஞன் ஒருவன் புத்தத் துறவி ஆக முடியாமல் பாடி பில்டர் ஆகிறார். அப்போது இறந்து போனவர்கள் வாழ்க்கை முறையை அறியும் விசேட சக்தி அவனுக்குக் கிடைக்கிறது. அதை வைத்து நாட்டில் நடக்கும் பல ஊழல்வாதிகளின் முகமூடியைக் கிழிப்பதே கதையாம்.

• **ஓகே ஓகே** வில் ஹன்சிகா விமானப் பணிப்பெண்ணாக நடித்தார். அந்த காஸ்ட்யூம் நன்றாக இருந்தது என்று பலரும் பாராட்டினார்கள். இப்போது மீண்டும் **ரோமியோ ஜூலியட** படத்திலும் அப்படிப்பட்ட காஸ்ட்யூம் அணிந்து நடிக்கிறார். **அரண்மனை, மீகாமன, ரோமியோ ஜூலியட,** தெலுங்கில் ரவிதேஜா, நிதின். ராம், விஷ்ணு மஞ்சு எனப் பல படங்கள் கையில். 2016 வரை பிஸியாம்.

• **கண்ணா லட்டு தின்ன ஆசையா** நாயகி விசாகா சிங் மீண்டும் சந்தானம், சேதுவுடன் நடித்த **வாலிபராஜா** படத்தின் ரிசல்ட்டை எதிர்பார்த்துள்ளார். இந்தப் படமும் வெற்றி பெற்றால் தனது சம்பளத்தை உயர்த்தலாம் என்று முடிவு செய்துள்ளார். தெலுங்கில் இவர் நடித்த ரௌடி பெலோ படமும் ரிலீஸுக்குத் தயாராக உள்ளது. இதில் செம கவர்ச்சியாக நடித்துள்ளாராம்.

# குழப்பத்தில் இருக்கும் சன்னி லியோன்



உலக கவர்ச்சிப் பிரியர்களை தனது கவர்ச்சியால் கட்டிப்போட்டு வைத்திருப்பவர் சன்னிலியோன். இத்தனை நாளும் பாலிவுட் ரசிகர்களை கிரங்கடித்த சன்னி லியோன், ஜெய் நடித்துள்ள வடகறி படம் மூலம் கோடம் பாக்கத்துக்கும் வந்துள்ளார்.


தமிழில் சன்னி ஆடுகிற முதல் பாடல் ரசிகர்களுக்கு முழு திருப்தியை கொடுக்க வேண்டும் என்பதால் பாடல் கம் போசிங் தொடங்கி படப்பிடிப்பு வரை ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்திருக்கிறார்கள்.

தமிழ் ரசிகர்களுக்கு நேரடி தரிசனம் கொடுக்க நானும் ஆவலாகத்தான் உள்ளேன் என்று சன்னி லியோனும் சொல்லியிருக்கிறாராம்.

அதனால் கோடம்பாக்கத்தில் விரைவில் சன்னி அலை வீசும் தருணம் நெருங்கி விட்டது.

ஆனால், இந்த நேரத்தில் நீல படத்தில் நடித்த சன்னி லியோன் நடித்த படத்தை தமிழகத்தில் ஓட விடமாட்டேன் என்று ஏற்கனவே இந்து மக்கள் கட்சியினர் போர்க்கொடி பிடித்ததால், சன்னி தமிழ்நாட்டு எல்லைக்குள் என்ட்ரியாகும் நேரத்தில் பலமுனைகளில் இருந்து போராட்டங்களும் வெடிக்கும் என்றொரு பரபரப்பான சூழ்நிலையும நிலவியுள்ளது.

# அந்த நாள் ஞாபகம்



**அன்றைய நாடக மேடை:** ஒரு நாடக அரங்கேற்றத்தின் போது டான்ஸ் மாஸ்டர் கே.ஜே.சரசாவுடன் ஜெயலலிதா. அருகில் சந்தியா, ராஜ சுலோசனா ஆகியோர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பன்முகத் தன்மை

எதிர்வரும் 24 ஆம் திகதி பகவான் சத்ய சாயி பாபாவின் மூன்றாவது ஆராதனைமஹோற்சவம்நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரை பகிரங்கப் பொதுக் கூட்டம், நடைபெறவுள்ளன. இதையொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

பகவான் ஸ்ரீ சத்ய பாபா அவதார புருஷராகப் பூமியில் வாழ்ந்த போது பின்வரும் அவதார நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் அவரது வாழ்வும் செய்திகளும் போதனைகளும் அமைந்திருந்தன.

அன்பை பரப்புதல், வேதங்களைப் போஷித்தல், உலக மக்களிடையே சமரச சன்மார்க்கத்தை ஏற்படுத்தல், தர்ம வழியில் வாழத் தூண்டுதல், வாழ்வின் குறிக்கோளை உணர வழிவகுத்தல்.

அந்தவகையில்ஸ்ரீசத்யசாயியை நாம் பிரேம சாயியாக, வேத சாயியாக, சத்வமத சம்மத சாயியாக, தர்மசாயியாக, ஞான சாயியாககாண முடிகிறது.

பிரேமசாயி: சாயியே அன்பு வடிவம் தான். இதை ரஷ்ய விஞ்ஞானி Dr. பிஃராங் ஜி பரனோஸ்கி கிரிலியன் ஒளிப்படக் கருவி மூலம் நிரூபித்துள்ளார்.

ஸ்ரீ சத்ய சாயி பாபாவிடமிருந்து பரவும் றோஸ் நிற அன்பு அலைகள் கண்ணுக்கு எட்டாத தூரம் வரை பரந்து விரிவதை அவர் அவதானித்தார்.

பொதுவாக சத்யசாயி மேல் மட்ட மக்களின் சுவாமி என்று குறை கூறுவோர் உண்டு. அவர் ஏழைகளிடமும் ஏதிலிகளிடமும் கசிந்து உருகுவது பலருக்குத் தெரியாது.


**வேதசாயி:** வெளிப் பார்வைக்கு வேதம் சப்தமயமாகவும் அதன் சடங்குகள் செயல் வடிவமாகவும் காணப்படலாம்.

ஆனால், மந்திரங்களின் பொருளைப்பார்த்தால் பெரும்பாலும் அவை சகல உயிர்களின் நன்மை வேண்டிய பிரார்த்தனையாகவே இருக்கும்.

எனவே, வேதயாகங்களைப் பொறுத்தவரையில் வெகு கண்டிப்புடன் தர்ம சாஸ்திர விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

காயத்திரி, ஓங்காரம், வேதமந்திரங்களை வெள்ளையரும் பெண்மணிகளும் ஓதுவதற்கு ஆதரவு தந்தாலும் அதை வாழ்க்கைத் தொழிலாக கொண்டு கற்பிப்பதும் சமூக மேம்பாட்டிற்காக ஓதுவதும் உழைப்பதும் அந்தணருக்கு மட்டுமே உரித்தானது என்று கூறுகிறார்.

**சர்வமத சம்மத சாயி:** பர்த்தி சாயியோ முற்றிலும் பகவானாகவே இருந்து அகில உலகரீதியாக எல்லோராலும் வணங்கப்பட்டு சமய ஐக்கியத்தின் அடிப்படை விழுமியங்களை எடுத்துரைத்தார்.



புதிதாக ஒரு மதத்தை சர்வதேச மக்களுக்காக உருவாக்க வேண்டுமென்றோ நான் வரவில்லை. மதம் என்பது ஒரு பிறப்புரிமை.

அந்த வகையில் ஒரு இந்து நல்லதொரு இந்துவாக வாழ வேண்டும். ஒரு கிறிஸ்தவன் நல்ல கிறிஸ்தவனாக வாழவேண்டும் என்றார்.

**தர்மசாயி:** கீதை அருளிய கிருஷ்ணன்; தர்மம் நலிவுறும் போது என்னை நானே அவதரிக்கச் செய்வேன் என்றான். இக் கலியுகத்தில் தனியொருவரான சுவாமியால் ஆன்மீகம், ஆஸ்திகம், அறநெறி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு சொல்ல முடியாதது.

கிராம சேவை, நன்னீர் வழங்கல், மருத்துவ முகாம் ஒழுங்கு செய்தல், கல்வியறிவு ஊட்டுதல், சுயவாழ்வு ஆதாரத் திட்டங்கள் மூலம் குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்தல் என பல நல்ல செயற்பாடுகளில் சாயி நிறுவன அங்கத்தவர்கள் முழுமனதுடன் ஈடுபடுகிறார்கள்.

**சாந்தசாயி:** பிரசாந்தி நிலையத்தில் அன்றும் இன்றும் சாந்தி நிலவக் காரணம் சுவாமியின் அன்பு அலைகளே.

1950 ஆம் ஆண்டில் பாபாவின் 25 ஆவது ஜயந்தி தினமன்று பிரசாந்தி நிலைய குடிபுகும் விழா இடம்பெற்றது.

ஊர் பேர் தெரியாமல் இருந்த புட்டபர்த்திக் கிராமம் ஒரு பெரிய நகரமாக மாறி பல மொழி பேசும் பல மதத்தைச் சார்ந்த பல்லின மக்கள் வாழும் ஒரு உலக நகரமாக மாறிவிட்டது.

இதற்குக் காரணமாக இருந் தது சுவாமியின் அன்பு. சுவாமியின் அன்பு. எல்லோரையும் அவரை நோக்கி ஈர்க்கிறது . இனியும் ஈர்த்துக் கொண்டே இருக்கும்.

**ஞானசாயி:** ஒருவர் ஞான மார்க்கத்தில் ஆத்ம விசாரம் செய்ய பாபா சொன்னது: ''கலக்கமடையாதே, சித்தத்தைச் சிதற விடாதே, வெறுமே கவனித்துக் கொண்டே இரு, சித்தம் ஓடினாலும் சட்டென்று விலகி அதைக் கவனிப்பவனாக இரு, எவன் இப்படி பட்டுக் கொள்ளாமல் சாட்சி மாத்திரமாகக் கவனிக்க மட்டுமே செய்கிறானோ. அவனே முற்றும் உணர்ந்தவன். அதுவே சத்-சித்-ஆனந்தம். வெறுமே கவனி'' அபேதா நந்தருக்கு அத்வைத ஆனந்தத்தை தருவதற்காக அவர் சொன்ற சாதனை "கவனி (Watch)

ஞானயோகத்தின்- அதியுச்ச சாதனையை ஞானசாயி எமக்கு மிக இலகுவாக எளிமையாக்கிப் பின்வருமாறு கூறுகிறார். Watch.

Watch your Words<br>your Actions<br>your Thought<br>your Character<br>your Heart

பகவான் சத்ய சாயி தூல வடிவில் இருந்து சூக்கும வடிவிற்கு மாறி விட்டதை தூல நிலையில் உள்ள பனிக்கட்டி சூட்சுமமான நீராவி வடிவத்திற்கு மாறியதற்கு ஒப்பிடலாம். அங்கு சக்தி மட்டத்தில் எதுவித மாற்றமில்லை. ஆற்றல் குறையவில்லை. வழி நடத்தல் தற்போதும் நிகழ்ந்து

சியாமளா இரவீந்திரன்<br>கோப்பாய்.

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு நிபந்தனை விதித்தது அவுஸ்திரேலியா

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் மீண்டும் புகலிட கோரிக்கையாளர்களுக்கு ஒரு வருடத்துக்கு நிபந்தனை அடிப்படை விசாவான Bridging Visa Conditions விசா வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் கடந்த 2 ஆண்டுகளுக்கு முதல் வந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் விசாக்கள் முடிவடைந்த நிலையில் பலருக்கு இதுவரைக்கும் விசா புதுப்பிக்கப்படாத நிலையில் இருக்கின்றது.

தற்போது நடைமுறையில் உள்ள BVC என்னும் நிபந்தனை அடிப்படையிலான விசாவில் பல பிரச்சினைகள் உள்ளதால் எதிர்க்கட்சிகள், வழக்கறிஞர்கள், அகதி செயற்பாட்டாளர்கள் என பல தரப்பு செயற்பாட்டாளர்களும் இந்த விசாவை மாற்றக் கோரி பல எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

கடந்த மாதம் செனட் சபையிலும் நிரந்தர வதிவிட விசா வழங்குவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நிலையிலும் டோனி அபட் அரசாங்கம் புகலிடக் கோரிக்கையளர்கள் தொடர்பில் அவர்களுடைய கடும்போக்கு தன்மையை கைவிடவில்லை.

மீண்டும் புகலிட கோரிக்கையாளர்களுக்கு ஒரு வருடத்துக்கு நிபந்தனை அடிப்படை விசாவான BVE விசாவே வழங்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் மீண்டும் புகலிடக் கோரிக்கையாளர்களை நடத்தும் விதம் மிகவும் கவலை அளிப்பதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (2)

# சன் சீ கப்பலில் பயணித்த மூன்று பேருக்கு எதிராக வழக்கு

## கனேடிய உச்ச நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளது

(கொழும்பு)

சன் சீ கப்பலில் பயணம் செய்த மூன்று பேருக்கு எதிராக கனேடிய உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்குத் தொடரப்பட்ட மூவரும சட்டவிரோத ஆட்கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்திற்காக குறித்த மூன்று பேருக்கும் புகலிடம் மறுக்கப்பட்டுள்ளது.

கணவன்-மனைவி மற்றும் ஒரு நபருக்கு எதிராக இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பிலான விசாரணைகளை கனேடிய உச்ச நீதிமன்றம் முன்னெடுக்கவுள்ளது.

ஏற்கனவே குறித்த கப்பலில் பயணித்த ஒருவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

கப்பலில் பணியாற்றிய ஒருவருக்கு எதிரான வழக்கினை விசாரணை எடுத்துக்கொள்ள முடியாது என உச்ச நீதிமன்றம் அறிவித்திருந்தது.

எனினும், ஆறு மாதங்களின் பின்னர் மூன்று இலங்கையர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

கடந்த வழக்கில் குறித்த புகலிடக் கோரிக்கையாளருக்கு வழங்கப்பட்ட சலுகை இந்த மூவருக்கும் வழங்கப்பட வேண்டுமென சட்டத்தரணிகள் கோரியுள்ளனர். (2)

# சோதிடரின் ஆலோசனையின்படி ஜனவரி மாதம் 2015 இல் தேர்தல்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி நடத்தப்படலாம என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் சோதிட ஆலோசகர். தேசபந்து சுமணதாச அபேகுணவர்த்தனவை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஊவா மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன.

ஊவா தேர்தல்களைத் தொடர்ந்து ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் கிரக நிலைக்கு அமைய 2015 ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு பின்னரே தேர்தல் நடத்த வேண்டுமென சிரேஷ்ட சோதிடரும், ஜனாதிபதியின் சோதிட ஆலோசகருமான தேசபந்து சுமணதாச அபேகுணவர்தன தெரிவித்துள்ளார.

குறித்த காலப்பகுதியில் தேர்தலில் போட்டியிட்டால் வெற்றியீட்டக் கூடிய சாத்தியங்கள் அதிகம் என குறிப்பிட்டுள்ளார். (2)

## சாமஸ்ரீ பட்டம் பெறுகிறார்



சமய சமூக கலை கலாசார பொது விடயங்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுடன் தெரிவு செய்யப்பட்ட கல்விமான்களுக்கும் வர்த்தகர்களுக்குமான சமூக சேவையாளர் பட்டமளிப்பில் சாமஸ்ரீ பட்டத்திற்கு ஜோதிடர் வி.ஏ சிவராசா(ஜோதிடர் வித்யாரத்னா- அரச விருது பெற்ற சோதிடர்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சமாதான முனைப்புக்களை முன்னெடுக்க பேச்சுவார்த்தை நடத்தப்படுவது அவசியம்

## பா.ஜ.கட்சி தலைவர் தெரிவிப்பு

இலங்கைக்கும் தமிழக மாநில அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் ராக்நாத்சிங் தெரிவித்துள்ளார். தஞ்சாவூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் சமாதான முனைப்புக்களை முன்னெடுப்பதற்கு தமிழக மாநில அரசாங்கத்திற்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவது அவசியமானது.மத்தியஅரசாங்கம் இலங்கையுடன் சிறந்த இராஜதந்திர உறவுகளைப் பேணத் தவறியுள்ளது.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து இலங்கையுடன் காத்திரமான முறையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் தமிழக மீனர்கள மீதான தாக்குதல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

# கால்நடைகளை வெட்ட விதிக்கப்பட்ட தடை நாடு பூராகவும் நீக்கம்

## பணிப்பாளர் டி.சில்வா அறிவிப்பு

(கொழும்பு)

கால்வாய் நோய் காரணமாக கால்நடைகளை அறுக்கவும் போக்குவரத்து செய்யவும் விதிக்கப்பட்டிருந்த தடை சகல மாவட்டங்களில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் குமார டி சில்வா தெரிவித்துள்ளார் .

இருந்த போதும் அநுராதபுரம், அம்பாறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் உள்ள சில பிரிவுகளில் மாத்திரம் கால்நடைகளுக்கான கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கால்வாய் நோயினால் பாதிக்கப்பட்ட பிராணிகளை மத்திய மாகாணத்தின் சில பகுதிகளுக்கு தடையையும் மீறி எடுத்து வந்ததால் மத்திய மாகாணத்திலும் கால்வாய் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டது. எனினும் துரித நடவடிக்கை மேற்கொண்டதையடுத்து மத்திய மாகாணத்தில் கால்வாய் நோய் பரவுவது தடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.


மலையகத்தில் இந்த நோய் பரவினால் பால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கும் என்று கூறிய அவர மலையகத்தில் உள்ள மாடுகளுக்கு உரிய காலத்தில் தடுப்பூசி வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

கால்வாய் நோய் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மே மாதம் வரை செல்லுபடியாகிறது.

மே மாதத்தில் வர்த்தமானி வாபஸ் பெறப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை வலம் வர சோலர் விமானம்



சுவிட்ஸர்லாந்தை சேர்ந்த பொறியியலாளர்கள் குழு ஒன்று சோலர் படலத்தில் செயற்படக் கூடிய விமானம் ஒன்றினை வடிவமைத்துள்ளனர்.

Solar Impulse 2 என பெயரிடப்பட்டுள்ள இந்த விமானமானது ஒருமுறை பறக்க ஆரம்பித்ததன் பினனர் மீண்டும் தரையிறங்காது தொடரச்சியாக பூமியை வட்டமிடக் கூடிய வகையில் இருக்கும் என அப்பொறியியலாளர்கள் நம்புகின்றனர்.

இதற்கு முன்னரும் சோலர் விமானம் ஒன்றினை வடிவமைத்துள்ள குறித்த பொறியியலாளர்கள் அதனை விடவும் 8 மீற்றர்கள் நீளம அதிகம் கொண்டதாக இப்புதிய விமானத்தின் விங்ஸ்பேனை வடிவமைத்துள்ளனர்.

இந்த விமானமாது 2015ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதத்திற்கும் ஜூலை மாதத்திற்கும் இடையில் தனது பறப்பினை ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# iOS 8 இன் முகப்பு வெளியானது




அப்பிள் நிறுவனம் தனது புதிய ஸ்மார்ட் கைபேசியான iPhone 6 இனை விரைவில் வெளியிடவுள்ள நிலையில், புதிய இயங்குதளப் பதிப்பான iOS 8 இனை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

iPhone 6 கைபேசியில் பயன்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இவ் இயங்குதளத்தின் ஸ்கிரீன் ஷாட் புகைப்படம் தற்போது இணையத்தளங்களில் வெளியாகியுள்ளது.

இதில் பயனர் இடைமுகமானது முன்னைய இயங்குதளங்களில் காணப்பட்டதையும் விட சற்று வித்தியாசமாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# விற்பனைக்கு வந்தது கூகுள் கண்ணாடி



தொழில்நுட்ப உலகில் புதிய புரட்சியை ஏற்படுத்திய கூகுள் கிளாஸ் தன்னகத்தே பல்வேறு திறன்களை கொண்டதாக வடிவமைக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே.


பார்க்க சாதாரணமான கண்ணாடியாக தோன்றினாலும், உலகைச் சுற்றி வர ஏதுவான வசதி பெற்றுள்ள இதில் எப்போது வேண்டுமானாலும் மின்னஞ்சல், டுவிட்டர என அனைத்து இணைய தளத்திலும் இணைந்திருக்க உதவியாக இணையத்துடன் இதன் வலப்பக்கம சிறிய திரையையும் பெற்றுள்ளது.

எனினும் நீண்ட காலமாக பொதுமக்களின் பாவனைக்காகவும், பொது நோக்கத்திற்காகவும் இச்சாதனம் விற்பனை செய்யப்படவில்லை.

ஆனால் நேற்றைய தினம் மட்டும் இச்சாதனம் பொது நோக்கத்திற்காகவும், பொதுமக்களுக்கும் விற்பனை செய்யப்பட்டிருந்தது.

இதன் விலையானது 1500 டொலர்களாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# Processor உற்பத்தியில் கால் பதிக்கும் LG நிறுவனம்




உலகப் புகழ்பெற்ற இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமான LG ஆனது முதன் முறையாக சொந்தமாக Processor உற்பத்தியில் காலடி பதிக்கின்றது.

LG Odin என அழைக்கப்படும் இந்த திட்டம் தொடர்பில் கொரியாவிலுள்ள LG உற்பத்தி நிறுவனம் இதுவரையில் எதுவித தகவல்களையும் வெளியிடவில்லை.

எனினும் 2.2 Ghz வேகம் கொண்ட Cortex-A15s எனும் Processor உம், 1.7 Ghz வேகம் கொண்ட Cortex-A7s எனும் Processor உம் வடிவமைக்கப்படவுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

# உடல் இயக்கங்களை கண்காணிக்க புதிய சிப்




தோலினுள் பொருத்தி உடலியல இயக்கங்களை ஆராயக்கூடிய புதிய இலத்திரனியல் சிப் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சிக்காகோவில் அமைந்துள்ள Northwestern பல்கலைக்கழகத்தினை சேர்ந்த John A. Rogers என்பவரை தலைமையாகக் கொண்டு இயங்கும் குழு ஒன்றே இந்த சிப்பினை உருவாக்கியுள்ளது.

பிளாஸ்டிக், சிலிக்கன் என்பவற்றினை ஒன்றாக இணைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்த சிப் ஆனது உடலினுள் அசைந்து செல்லக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

# கிரெடிட் காட்டுகளை பாதுகாக்க ஆராய்ச்சி



கிரெடிட் கார்டுகள் போன்றவை தொலைந்துபோனால் பாதுகாப்பாக உடனே அவற்றை அழித்துவிட உதவக்கூடிய ஒரு புதிய தொழில்நுட்பம் பற்றிய ஆராய்ச்சியில் அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் பணியாற்றி வருகின்றார்.

ஐயோவா மாநில பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொருட்கள் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் ரேசா மோன்டசமி என்ற விஞ்ஞானி மக்கும் பொருட்கள் மற்றும் மின்னணுவியலைத் தொடர்புபடுத்தி இத்தகைய தொழில்நுட்பத்தை உருவாக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்.

"நிலையற்ற பொருட்கள்" அல்லது நிலையற்ற மின்ன்ணுவியல் என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பற்றிக் குறிப்பிடும் அவர் இதற்கான மூலப்பொருளாக சிறப்பு பாலிமர்களை வடிவமைக்கும் ஆய்வில் செயறபட்டு வருகின்றார். இத்தகைய பாலிமரில் உருவாக்கப்படும் கார்டுகள் வெளியிலிருந்து தூண்டப்படும் போது எளிதிலும், விரைவாகவும் அழிந்துவிடக் கூடிய தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் என்று இந்த விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

புதிய துறையாகக் கருதப்படும் இந்த ஆய்வில் முன்னேற்றம் கண்டுவருவதாக மோன்டசமி குறிப்பிட்டுள்ளார். அவர் தலைமையின் கீழ் செயற்பட்டுவரும் விஞ்ஞானிகள் குழு மின்னணுப் பொருட்களுக்கு பொருத்தமான தளங்களாகக் கருதப்படும் மக்கும் தன்மை கொண்ட பாலிமர் கூட்டுப் பொருட்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தரவு பரிமாற்றத் திறன் கொண்ட ஒரு ஆன்டெனாவையும் இவர்கள் சோதனை முயற்சியாக செய்து பரிசோதித்துப் பார்த்துள்ளனர்.


நிலையற்ற பொருட்களைக் கொண்டு மின்னணு உதவியுடன செயற்படுத்தப்பட உள்ள இந்தப் புதிய தொழில்நுட்பம் இராணுவம் மற்றும் மருத்துவத்துறைகளில் மிகுந்த பயன்பாட்டினை அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று இந்த விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# Samsung மொபைலில் மறைந்துள்ள இரகசிய குறியீடுகள்

01) *#9999# - தங்கள் போனின் சொப்ட்வெயர் சார்ந்த தகவல்களை அறிய.
02) #*3849# -தங்கள் சாம்சங் மொபைல் போனை மீண்டும் Reboot செய்ய.
03) *#06# -சாம்சங் போனின் IMEI (EMI) எண்ணை அறிய. இது மிக முக்கிய ஓர் எண்ணாகும்.
04) #*2558# -தங்கள் போனின் கடிகாரத்தை இயக்க அல்லது நிறுத்த. தங்கள் போனின் மொபைல் போனின் டைமை ஆன் செய்ய அல்லது ஆப் செய்ய.
05) #*7337# -தங்கள் அண்மைக்கால சாம்சங் மொபைல் போனை அன்லாக் செய்ய (UnLock).
06) #*4760# -தங்களில் போனில் GSM Featuresia இயக்க அல்லது நிறுத்த.
07) *#9998*246# -தங்கள் போனின் மெமரி திறன் மற்றும் பற்றரியின் திறனை அறிய.
08) *#7465625# -தங்கள் போனின் கடவுச்சொல் நிலைமை அறிய.
09) *#0001 # -தங்கள் போனின் சீரியல் எண்ணை காண.
10) *#2767*637 # -தங்கள் மொபைல் போனை அனலொக் செய்ய.
11) *#8999*636# -தங்கள்போனின்சேமிப்பு கொள்ளலவு நிலைமையை காண.
12) *#8999*778 # -தங்கள் சிம் கார்ட் பற்றிய தகவல்களை அறிய.
13) #*#8377466# -தங்கள்போனின் ஹாட்வெயரின் தன்மை மற்றும் Versionia அறிய.
14) #*3888# -சாம்சங் போன்களின் Bluetooth வாயின் தகவல்களை அறிய.
15) #*5376# - ஒரே கட்டளையில் தங்கள் போனின் அனைத்து மெசேஜ்யும் ஒரே கட்டளையில் நீக்க அல்லது அழிக்க.
16) #*2472# -தங்கள் போனின் சார்ஜிங் நிலைமை அறிய.

ஒரு சில கோடுகள் சில போன்களில் இயங்காது என்பதை கவனத்தில் கொள்ளவும். அதற்கு காரணம் தயாரித்த நாடுகளின் அமைப்பே.

# FaceBook Messenger வசதியில் மாற்றம்




மொபைல் சாதனங்களுக்கான பேஸ்புக் அப்ளிகேஷனுடன் இணைந்து காணப்படும் Facebook Messenger வசதியினை தற்போது தனியாக அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான அறிவித்தலை பேஸ்புக் நிறுவனத்தின் நிறுவுனரான Mark Zúckerberg உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளார்.

இந்த மாற்றம் முதலில் ஐரோப்பிய நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் ஏனைய நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படும் என தெரிவித்துள்ள அவர் விரைவான குறுஞ்செய்தி சேவையினை வழங்கும் பொருட்டே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....நெடுநெடுவென வளர்ந்திருந்த ஒரு மரத்தைக் காட்டி இதன் பெயர் தெரியுமா? என்றார் நாகராஜ்.

நாங்கள் என்னத்தைக் கண்டோம்? ஊருக்குள் இருக்கும் ஒதிய மரத்தையே அடையாளம் காண முடியாமல் திண்டாடி இருக்கின்றோம். இந்த அடர்ந்த காட்டுக்குள் திடுதிப்பென்று ஒரு மரத்தைக் காட்டி இது என்ன மரம் என்று கேட்டால்? எல்.கே.ஜி. பிள்ளைகள் போல் விழிக்கத்தான் முடிந்தது.

நீங்களே சொல்லுங்கள் நாகராஜ். எங்களுக்குத் தெரியவில்லை என்றோம்.

இதுதான் ச்சாயா விருட்சம் என்றார்.

மரத்திற்கு அருகில் சென்று பார்த்தேன். புன்னை மரத்து இலை போல் காணப்பட்டது. அதில் தொங்கிக் கொண்டிருந்த காய்கள் சுருண்ட வெள்ளரிப் பிஞ்சு போலக் காணப்பட்டது. வெள்ளரிக்காய் கொடியில் அல்லவா காய்க்கும். இங்கு மரத்திலேயே காய்த்துக் தொங்குகிறது. மரத்தைத் தொட்டுப் பார்த்தேன். கையில் சாம்பல் பூத்தது போல தூசி ஒட்டிக் கொண்டது. அதைத் துடைப்பதற்காக பக்கத்திலிருந்த இலையை எட்டிப் பறிக்க, சர்ரென்று கால் சறுக்கியது.

கீழே மலைச்சரிவு. பார்ப்பதற்கு சமதரை போலவே இருந்து இப்படி சட்டென்று சரிவு காணப்படுவது.... சற்று ஏமார்ந்திருந்தால் மலைப்புதரில் விழ வேண்டியதுதான் போலும். பக்கத்திலிருந்த குத்துச் செடியைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறிவிட்டேன்.

என்ன ஆயிற்று? ஓரமாகப் போகாதீர்கள். திடீர் சரிவுகள் வரும் என்றார் நாகராஜ்.

இப்பொழுது சொல்லுங்கள், போவதற்கு முன்னே சொல்லக்கூடாதா? இப்பொழுது தெரிகிறது இந்த மரத்திற்கு ஏன் சாயா விருட்சம் என்று பெயரிட்டனர் என்று.



நடுக்காட்டு லிங்கம்

என்ன காரணம்?

இவ்வளவு பெரிய பள்ளம் அருகில் இருந்தும் சாய்ந்து விடாமல் சாமர்த்தியமாக நிமிர்ந்து நின்றுகொண்டே இருக்கிறதே, அதனால்தான் சாயா விருட்சம் என்று பெயர் வைத்திருப்பார்கள். என்ன நாகராஜ், நான் சொன்னது சரிதானே!

இல்லையில்லை, இந்த மரத்தின் நிழல் பூமியிலேயே படாது. இப்படி மரத்தின் நிழல் சாயாமல் இருந்த மாதிரியே இருப்பதால்தான் இந்த மரத்திற்கு சாயா விருட்சம் என்று பெயர் ஏற்பட்டது. இதுவும் ஒரு காயசித்தி மூலிகை என்று விளக்கம் அளித்தார் நாகராஜ்.

இப்பொழுது ஒரு திருப்பத்தினருகே உள்ள பள்ளத்தின் குறுக்கே பெரிய நெடும் மரம் ஒன்று வீழ்ந்து கிடந்தது. அதன்மீது ஏறும்போது தான் அருகில் இருந்த சரிவை அடுத்து பெரும் பாறை வெளி ஒன்று இருப்பது தென்பட்டது. அதிலிருந்து வரும் வெளிச்சம் தான் இந்தக் காட்டை ஓரளவு வெளிச்சம் உடைய தாக்கிக் கொண்டிருக்கிறது போலும்.

இந்த இடத்திற்கு என்ன பெயர்?

மோகினிப் பாறை.

திகிலுடன் திரும்பினேன். இங்கே இரவு நேரத்தில் மோகினிப் பிசாசுகளின் நடமாட்டம் அதிகம் இருக்குமோ?

எனது கேள்வியைக் கேட்டு வழி காட்டி சிரித்துக் கொண்டார். மோகினி என்றால் அவ்வளவு பயமா? மோகினி என்றால் அதிரூப சௌந்தர்யமாக இருக்கும் என்கிறார்கள். அழகை ரசிக்கத் தெரியாத ஆளாயிருப்பீர்கள் போலிருக்கிறதே!

விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்ததைக் கேள்விப்பட்டிருக்கிறீரா? அந்த இடம் இதுதான்.

அதென்ன மோகினி கதை, எங்களுக்கும் கொஞ்சம் சொல்லுங்கள் பின்

**ஆன்மீகம் 97**

னாலிருந்து ஒரு குரல்.

தாருகா வனத்தில் தவம் செய்து கொண்டிருந்த முனிவர்களுக்கு ஏகப்பட்ட கர்வம் தலைக்கேறியிருந்தது. தவ வலிமையில் தங்களை மிஞ்சுவார் யாருமில்லை என்ற எண்ணம் அவர்களுக்கு.

அவர்களின் பத்தினிமார்களுக்கோ அதைவிடக் கர்வம். கற்பு நெறியில் தங்களை மிஞ்சுவார் யாருமில்லை என்று.

உணர்ச்சிகளை அடக்கி தவமியற்றுவோர் தானே, சிறந்த முனிவர்களாக இருக்க முடியும். இப்படி மன அடக்கம் இல்லாவிட்டால் எப்படி? இருவருக்கும் நல்ல புத்தி புகட்ட வேண்டுமே!

சிவனும் விஷ்ணுவும் சேர்ந்து புறப்பட்டனர். சிவன் ஆண்டியின் கோலமாக ஆடையேதுமின்றி பிச்சைப் பாத்திரத்தைக் கையிலேந்தி புறப்பட்டார். விஷ்ணுவோ அழகிய மோகினியின் வடிவில் முனிவர்கள் தவம் செய்யும் காட்டை அடைந்தார்.

பிச்சாடனரான சிவனுக்குப் பிச்சையிட வந்த முனிபத்தினிமார்களெல்லாம் அவரின் அழகில் மயங்கி ஆடை நெகிழ்வது கூடத் தெரியாமல் அவரின் பின்னே சென்றனர்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

16

...உன்னைப் பெண் பார்க்க மத்தியானம் வந்தவர்கள் மாலை வரை காத்திருந்தார்களாம்.

பிறகென்ன?

நீ மாடு மேய்த்துத் திரும்பும் நேரம் மாலைப் பொழுதுதானே!

கலைந்த கூந்தலோடு, காட்டில் அலைந்த களைப்போடு புழுதியில் நெய்த புடவையோடு இரண்டு காளை மாடுகளை ஓட்டிக்கொண்டே நீ வீட்டுக்குள் நுழைந்த போது என் தாத்தா உன்னைப் பெண் பார்த்தார்.

உன் உடம்பு மெல்ல மெல்லக் குழிக்குள் இறக்கப்பட்ட போது உன்னைப் பெண் பார்த்த காட்சி என் கற்பனைத் திரையில் ஓட ஓட இந்த உலகம் என் கண்ணீர்த் திரையில் மறைந்து போனது.

உழைப்பு.

உழைப்பைத் தவிர வேறில்லை.

மழை!


மழையைத் தவிர வாழ்க்கையில் வேறு நம்பிக்கை இல்லை.

தார் ரோட்டில் விதை விதைத்து அறுவடை செய்வது மாதிரி ஒரு விவசாயம்.

வைக்கோல் போருக்குள் தொலைந்து போன நாலணாவைத் தேடுவது மாதிரி ஒரு வாழ்க்கை.

ஆனாலும் வாழ்க்கையில் எதையும் எதிர்கொள்ளும் ஆவேசம்- அடுத்த வருட மழையின் மீது நம்பிக்கை- எப்போதும் சந்தோஷமாய் இருக்கும் சக்தி- வறுமையிலும் செம்மை- இருக்கும் தானியத்தில் நாலில் ஒரு பங்கை தானம் செய்யும் நல்ல குணம்- இவையெல்லாம் சேர்ந்து உன்னை, என்னை வணங்க வைத்தன பாட்டி.

உனக்கு சங்கீதம் தெரியாது; சாஸ்திரமும் தெரியாது.



ஆனாலும் நீ அழகாய்ப் பாடுவாய்.

பேசும்போது உன் குரலில் இழையும் லயம், பாடும் போது குறைவதாகவே எனக்குப் படும்.

என்றாலும் நான் வியந்து போவேன்.

எழுத்தறிவில்லாத உன் பாட்டில் எப்படி இலக்கியம் இருந்தது?

குயில் சுரம் கற்றுக் கொள்ளாமலேயே சுருதியோடு பாடுகிறதே! அப்படியா அது?

நதி பரதம் கற்றுக் கொள்ளாமலேயே ஜதியோடு போகிறது! அப்படியா அது?

நீ பேரன் பேத்திகளுக்கு எப்போதாவது தாலாட்டுப் பாடுவாய்.

நீ யாருக்காகப் பாடுகிறாயோ அந்தக் குழந்தை தூங்குவதற்கு முன்னால் உன் தாலாட்டில் நான் தூங்கியிருக்கிறேன்.

**சீனிப்பாட்டி**

போருக்கு நீ போனா(ப்)
புழுதி கிளம்பாதோ?
மாராசன் சிலம்பெடுத்தா
மருத கலங்காதோ?

உனது குரல் என் காதுகளில் உள்



வளையங்களில் இன்னும் ஒட்டியிருக்கிறது பாட்டி.

உன் உத்தம குணங்களிலெல்லாம் நான் உன்னதமாய் நினைப்பது- உனது சத்தியம்.

நினைத்துப் பார்க்கிறேன்.

உன் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட அந்த சம்பவத்தைப் புரட்டிப் பார்க்கிறேன்.

நீ நோயில் விழுந்து பாயில் கிடக்கிறாய்.

எண்ணி எழுபது வீடுகளே இருந்த அந்த கிராமத்தின் ஒரே ஒரு நாட்டு வைத்தியரும் உதடு பிதுக்கி விட்டார்.

இமைகளை உயர்த்திப் பிடிக்கவும் உனக்குச் சக்தியில்லை.

உன் தலைமாட்டில் எரிந்த சிம்னி விளக்கும் உனது பிரக்ஞையும் மங்கிக் கொண்டே வருகின்றன.

அந்தப் பாயில் நீ படுத்திருந்தது போக மிச்சமுள்ள இடத்தில் மரணம் வந்து உட்கார்ந்திருக்கிறது.

உழைத்து உழைத்துக் காய்ப்பேறிய உன் கைகளைப் பற்றிக் கொண்டு என் தாத்தா சின்னாங்கி உடையத்தேவர் சிதறிப் போய் நிற்கிறார்...

-வைர முத்து- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

782

## நட்பிற்கு ஏது எல்லை?

ஒரு ஊருல ஒரு ராஜாவாம். அந்த ராஜாவோட பேலஸ்ல ஒரு பட்டத்து யானை இருந்துச்சாம்.

"பட்டத்து யானை"ன்னா என்ன பாட்டி?!

அதாவது, ராஜாவும், ராணியும் ஏறி சுத்தி பார்க்க போறதுக்குன்னு தனியா ஒரு யானையை பேலஸ்ல வளர்ப்பாங்க.

ராஜாவுக்கு தர்ற அதே மரியாதையை அந்த யானைக்கும் குடுப்பாங்க.

அரண்மனைல இருந்ததால நல்ல கவனிச்சுப்பாங்க அந்த யானையை. சத்தான சாப்பாடு, உடம்புக்கு முடியலைன்னா டாக்டர்ன்னு இருக்கு.

அப்படி இருந்ததால, அந்த பட்டத்து யானை நல்லா பெரிய தந்தத்தோட, நல்லா கொழுத்து அழகா, கம்பீரமா இருந்துச்சு.

அதுமேல போறதை பெருமையா நினைச்சுப்பார் அந்த ராஜா.


அந்த யானையை கட்டிப் போடுற லாயத்துல ஒரு நாய் ஒண்ணு வந்திட்டுது.

சரியா சாப்பாடு கிடைக்காம அது எலும்பும் தோலுமா இருந்துச்சு.

யானை சாப்பிடும்போது, சிந்துனது சிதறுனதுலாம் சாப்பிட்டு பசியாறுச்சு.

அதை பார்த்து இரக்கப்பட்ட யானை, நிறைய சாப்பாட்டை கீழ சிந்த ஆரம்பிச்சுது.

அந்த நாயும் அதையெல்லாம் சாப்பிட்டு நல்லா கொழுகொழுன்னு வர ஆரம்பிச்சுட்டுது.



ரெண்டும் திக் ஃப்ரெண்ட்ஸ் ஆனாங்க.

அரண்மனை சாப்பாடு சாப்பிட்டதால நல்லா கொழுக் மொழுக்ன்னு அழகா மாறிடுச்சு அந்த நாய்.

அரண்மனைக்கு ஏதோ ஒரு வேலையா வந்த பெரிய பணக்காரன் ஒருத்தன் இந்த நாயை பார்த்து ஆசைப்பட்டு பாகன்கிட்ட, என் பசங்க வளர்க்க நாய் வேணும்ன்னு ரொம்ப நாளா கேட்டுக்கிட்டு இருக்காங்க.

இந்த நாய் நல்லா இருக்கு.
அதனால, அதை எனக்கு குடு.
உனக்கு பணம் தாரேன்.
ப்ளீஸ்ன்னு கேட்டான்.

பணத்துக்கு ஆசைப்பட்ட பாகன் அந்த நாயை குடுத்துட்டான்.

தன் ஃப்ரெண்டை மிஸ் பண்ணிட்ட யானை, அன்னிலிருந்து சாப்பிடல, சரியா தூங்கலை.

எப்பவும் அழுதுக்கிட்டே இருந்துச்சு.

இப்படியே நாட்கள் போச்சு.

மெல்ல மெல்ல யானை இளைச்சு, படுத்த படுக்கையா போச்சு.

ஐயோ பாவம் அந்த யானை பாட்டி.

ஆமாண்டி செல்லம்.

இதை கேள்விப்பட்ட ராஜா அரண்மனைல இருக்குற டாக்டர்களை வரச்சொல்லி யானைக்கு ட்ரீட்மெண்ட் பார்த்தார்.

ராஜா! யானைக்கு எந்த நோயும் இல்ல.

ஏன் இப்படி இருக்குன்னு தெரியலை.

எப்பவும், கூடவே இருக்குற பாகன்கிட்ட கேளுங்க.

அவனுக்குதான் என்னன்னு தெரியும்ன்னு சொல்லிட்டாங்க,.

ராஜா யானைப்பாகனை வரவச்சு, என்ன நடந்துதுன்னு உணமையை சொல்லுன்னு மிரட்டுனாரு.

வேற வழியில்லாம அவன், ராஜா! இங்க ஒரு நாய் சுத்திக்கிட்டு இருந்துச்சு.

அதோடதான் நம்ம பட்டத்து யானை விளையாடும், சாப்பிடும், தூங்கும்.

அந்த நாயை பணத்துக்கு ஆசைப்பட்டு வித்துட்டேன்.

என்னை மன்னிச்சிடுங்கன்னு சொல்லி அழுதான்.

அந்த நாயை வாங்கி வரச் சொல்லி ஆட்களை அனுப்பினார் ராஜா.

நாயை கொண்டு வந்ததும் யானைக்கிட்ட கொண்டு போனார் ராஜா.

யானைக்கிட்ட மெல்ல அசைவு வந்திச்சு.

ஐய்ய்ய்ய்ய்ய்ய்ய்யய், யானை நல்லாகிடுமா பாட்டி?!

தன் தும்பிக்கையால நாயை தடவுச்சு யானை.

ரெண்டுத்து கண்ணுலயும் தண்ணி கொட்டுச்சு.

வாயில்லா ஜீவன்களாச்சே! தன்னோட ஃபீலிங்க்ஸை எப்படி சொல்லும்?!

இதை பார்த்த எல்லாரும் வாயடைச்சு போய் நின்னுட்டாங்க.

விலங்குகளுக்குள் இப்படி ஒரு நட்பா?!

இனி நாயை, எக்காரணம் கொண்டும் யானைக்கிட்ட இருந்து பிரிக்க கூடாதுன்னு சொல்லிட்டு, இனி பட்டத்து யானை பழைய மாதிரி அழ்கா, கம்பீரமா மாறிடும்ன்னு நம்பிக்கையோட அரண மனைக்குள் போனார்.

இதிலிருந்து நீங்க தெரிஞ்சுக்க வேண்டியது.

தூய நட்புக்கு இனம், மொழி, உருவம், அந்தஸ்துன்னு எதுவும் தேவை இல்லை.

நட்புக்கு எந்த எல்லைக் கோடும் இல்லை.

மனசுல அன்பிருந்தா ஒரு கிளிக்கிட்டயோ இல்ல ஒரு ஆட்டுக் குட்டிட்டகூட நீங்க ஃப்ரெண்டா இருக்கலாம்.

04.2014
20

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1534 - இழ்சாக் கார்ட்டியே தனது கடற்பயணத்தை ஆரம்பித்தார். இப்பயணத்தின் போதே அவர் கனடாவைக் கண்டுபிடித்தார்.
- 1653 - ஒலிவர் குரொம்வெல் இங்கிலாந்து நாடாளுமன்றத்தைக் கலைத்தார்.
- 1657 - அமெரிக்காவில் நியூ ஆம்ஸ்டர்டாம் (தற்போதைய நியூயோர்க் நகரம்) என்ற டச்சுக் குடியேற்றத்தில் யூதர்களுக்கு மதச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.
- 1775 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பொஸ்டன் நகரைக் கைப்பற்றும் போர் ஆரம்பமானது.
- 1792 - பிரான்ஸ், ஆஸ்திரியா மீது போரை அறிவித்தது. பிரெஞ்சு புரட்சிப் போர்கள் ஆரம்பித்தன.
- 1859 - சார்ல்ஸ் டிக்கன்ஸ் எழுதிய இரண்டு நகரங்களின் கதை புதினம் வெளியிடப்பட்டது.
- 1862 - லூயி பாஸ்டர் மற்றும் குளோட் பெர்னார்ட் ஆகியோரின் பாஸ்ச்சரைசேஷன் முறையை முதன் முதலாக சோதித்தனர்.
- 1902 - பியேர், மற்றும் மேரி கியூரி ரேடியம் குளோரட்டைத் தூய்மைப்படுத்தினர்.
- 1926 - திரைப்படத்துக்கு ஒலியை இணைக்கும் வைட்டாபோன் என்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்க படைகள் ஜேர்மனியின் லெயிப்சிக் நகரைக் கைப்பற்றினர். ஆனாலும் அடுத்த நாளே இதனை சோவியத் ஒன்றியத்துக்கு அளித்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் லெய்ப்சிக் நகரத் தந்தை தனது குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார்.
- 1945 - அடொல்ஃப் ஹிட்லர் கடைசித் தடவையாக தனது சுரங்க பதுங்கு இருப்பிடத்திலிருந்து வெளியே வந்தார்.
- 1961 - கியூபாவில் ஐக்கிய அமெரிக்காவின் பிக்ஸ் விரிகுடாத் தாக்குதல் தோல்வியில் முடிந்தது.
- 1972 - அப்போலோ 16 சந்திரனில் இறங்கியது.
- 1998 - 28 ஆண்டுகள் இயங்கிய ஜேர்மனியின் சிவப்பு இராணுவ அமைப்பு என்ற தீவிரவாத அமைப்பு கலைக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 570 - முகமது நபி, இஸ்லாம் மதஸ்தாபகர் (இ. 632)
- 1808 - மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன (இ. 1873)
- 1889 - அடொல்ஃப் ஹிட்லர், ஆஸ்திரியாவில் பிறந்து ஜேர்மனியை ஆண்ட சர்வாதிகாரி (இ.1945)
- 1910 - சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், எழுத்தாளர் (இ. 2006)
- 1918 - காய் சீக்பான், நோபல் பரிசு பெற்றவர்
- 1927 - கார்ல் முல்லர், நோபல் பரிசு பெற்றவர்
- 1939 - பிரமீள், ஈழத்து எழுத்தாளர் (இ. 1997)
- 1950 - நா. சந்திரபாபு நாயுடு, இந்திய அரசியல்வாதி

### இறப்புகள்

- 1918 - கார்ல் பிரவுன், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் (பி. 1850)
- 2003 - பேர்னார்ட் காட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குதூகலம் பிறக்கும்! நம்பி வந்தவர்களிடம் அன்பு செலுத்தி ஆதரவு காட்டும் மகர இராசிநேயர்களே!**

ஜய வருடம் பிறக்கிறது. சென்ற வருடம் ஆறில் சஞ்சரித்து வந்த குருவால் அல்லல்கள் அதிகம் ஏற்பட்ட நிலை இனி மாறப்போகிறது. வருடத் தொடக்கத்தில் இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதுமட்டுமல்ல சுக ஸ்தானாதிபதியாகவும் லாப ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் செவ்வாயும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார்கள்.

இதுபோன்ற வக்ர காலத்தில் ஆரோக்கியத்திலும் அச்சுறுத்தல்கள் ஏற்படலாம். அன்றாட வாழ்வில் பண நெருக்கடிகளுக்கும் ஆளாகலாம் என்பது பொது நியதி. ஆனால் உங்கள் இராசியைப் பொறுத்தவரை குருவின் பார்வை வருடத் தொடக்கத்தில் 2,10,12 ஆகிய இடங்களில் பதிவாவதால் மலை போல் வந்த துயர் பனி போல் விலகும். மாற்றங்கள் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

என்ன இருந்தாலும் சனி இரண்டாமிடத்திற்கும் அதிபதியாகிறார். குடும்பம்

## சிவல்புரி சிங்காரம்

மற்றும் வாக்கு, தனம் என்று வர்ணிக்கப்படுகின்ற இடங்களுக்கும் சனி அதிபதியாகி வருடத் தொடக்கத்தில் வக்ரம் பெற்று சஞ்சரிப்பதால் குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வார்களா என்பது சந்தேகம் தான். நீங்கள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் ஆதாயத்தை அடைய முடியும்.

இப்படிப்பட்ட சூழ்நிலை குருப்பெயர்ச்சி வரைதான் என்பதால் வைகாசி 30 வரை வருங்கால நலன் கருதி பொறுமையை கடைப்பிடியுங்கள். யார் என்ன சொன்னாலும் உங்களைப் பற்றி விமர்சித்தாலும் குறை கூறினாலும், வலது காதில் வாங்கி இடது காது வழியாக விட்டுவிட்டு உங்கள் முன்னேற்றத்திலேயே குறிக்கோளாக இருப்பது நல்லது.

சகாய ஸ்தானத்தில் அஷ்டமாதிபதி சூரியனோடு கேது சேர்ந்திருக்கிறார். பத்தாமிடத்தில் ராகு வீற்றிருக்கிறார். எனவே ஏற்ற, இறக்கமான சூழ்நிலை ஒரு சிலருக்கு ஏற்படலாம். நல்லதும் கெட்டதும் மாறி, மாறி வந்துகொண்டேயிருக்கும் கிரக அமைப்பு உள்ளது. நினைத்தது நிறைவேறாத

வார்கள். மந்த கதியில் இயங்குவதால் தான் சனியை மந்தன் என்று அழைப்பது வழக்கம். எனவே, நீங்கள் எந்த செயலைச் செய்தாலும் மெதுவாகவும் நிதானமாகவும் செய்வீர்கள்.

குடும்ப ரகசியத்தை வெளியில் சொல்ல மாட்டீர்கள். கொடுக்கல்- வாங்கல்களையும் ரகசியமாக வைத்திருப்பீர்கள். அடிமைத் தொழில் பார்த்தாலும்கூட அதில் தலைமைப் பதவிதான் வேண்டுமென்று சொல்வீர்கள். இனிமையாகப் பேசி எதையும் சாதிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

குடும்ப ஸ்தானாதிபதியாகவும் சனியே உங்களுக்கு விளங்குகிறார். சப்தமாதிபதியாகவும் சந்திரன் விளங்குகிறார். 4 ஆம் இடத்திற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குகிறார்.

இப்படிப்பட்ட அமைப்புகளைப்பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு சனி, செவ்வாயின் வக்ர இயக்கத்தோடு பிறக்கிறது. 6ஆம் இடத்தில் குரு சஞ்சரித்து அதன் பார்வையை 2,10,12 ஆகிய இடங்களில் பதிக்கிறார்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது ஆறில் நிற்கும் குரு அதன் பார்வை பலத்

பாகப்பிரிவினை செய்து கொள்வதில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் மாறும்.

புதிய வாகனங்கள் வாங்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும். பழைய வாகனங்களின் பழுது செலவுகளை முன்னிட்டு வாகன மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும். உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

கேதுவின் ஆதிக்கத்தால் கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்காதவர்கள் இப்பொழுது எடுக்கும் புது முயற்சியில் எதிர்பார்த்த பலனைக் காண்பர். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்பும், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்களும் நடைபெறும் நேரமிது. வியாபாரப் போட்டிகள் அகலவும், வெளிவட்டாரப் பழக்க, வழக்கத்தில் விவகாரம் ஏற்படாமல் இருக்கவும் சர்ப்ப சாந்தி செய்வது நல்லது.

**சனிப்பெயர்ச்சிப் பலன்கள்!**

ஜய வருடம் மார்கழி மாதம் தொடக்க நாளிலேயே விருச்சிக இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு 11 ஆம் இடமாக விருச்சிகம் அமைகிறது. தனாதிபதி லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது

கொண்டே இருக்கும். ஜென்மத்தை மட்டுமல்லாமல் 3,11 ஆகிய இடங்களையும் குரு பார்க்கிறார்.

**இராசியைக் குருதான் பார்த்தால்,**
**நலமெல்லாம் வந்து சேரும்!**
**மூன்றினை குருதான் பார்த்தால்,**
**முன்னேற்றம் அதிகரிக்கும்!**
**பதினொன்றைக் குருதான் பார்த்தால்,**
**நிதிவந்து குவியும் உண்மை!**

என்பது ஜோதிட நியதி.

எனவே, முன்னேற்றங்கள் அதிகரிக்கும். வழக்கில் வெற்றி கிட்டும். களைப்பை மறந்து கனிவோடு பணியாற்ற தொடங்குவீர்கள். உழைப்பிற்கேற்ற பலன் உங்களுக்கு கிடைத்துக்கொண்டே இருக்கும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவிகளும், பொறுப்புகளும் வந்து சேரும். மதிப்பும், மரியாதையும் கூடும், நிதி வந்து குவியும். கல்யாணக் கனவுகளும், கடை திறப்பு விழாக்களும் வந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தும். குருவின் வக்ர காலத்தில் கூடுதல் கவனத்தோடு செயற்படுவது நல்லது.

**மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும்!

ஜய வருடத் தொடக்கத்தில் குருவின் பார்வை பலத்தால் பொருளாதார நிலை உயரும். பொன்னான வாய்ப்புகள் பலவும் வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்ட வாக்கு

# "ஜய" வருட ராசிபலன்கள்



தால் பலவித மாற்றங்களைக் கொடுக்கும். வருடத் தொடக்கத்தில் குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவடைவதற்கான அறிகுறிகள் தோன்றும். கொடுக்கல்- வாங்கல்களில் இருந்த பிரச்சினை அகலும்.

தொழிலில் வரும் கூடுதல் லாபத்தால் தொழில் நிலையத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் சிலர் ஈடுபடுவர். இடம் வாங்கிப் போட்டு எத்தனை வருடமாகியும் இன்னும் வீடு கட்ட முடியவில்லையே என்ற கவலை இனி மாறும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பால் உத்தியோக அனுகூலம் உண்டு.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

## மகரம்



ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள்.

பொருளாதார நிலை மேலும் உயரும். பொல்லாதவர் உங்களைவிட்டு விலகுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

உடல் ஆரோக்கியத்தில் ஒருசில தொல்லைகள் உருவாகிக் கொண்டே இருக்கும். வாய்ப்புகள் வருவதை உபயோகப்படுத்திக் கொள்ள உடல்நலம் இடையூறு செய்யும். எதிரிகள் விலகுவர்.

சனியின் வக்ர இயக்கம் மாசி 30 முதல் வருடக் கடைசிவரை உள்ளது. இக்காலத்தில் பயணங்களைத் தள்ளி வைக்க நேரிடும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வ தின் மூலமும், விழப்புணர்ச்சியோடு செயற்படுவதன் மூலமுமே அமைதியைக் காண இயலும்.

**வழிபாட்டின் மூலம் நன்மை பெறும் காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள்.

இக்காலத்தில் தொழில் தொல்லைகள் அதிகரிக்கும். கூட்டாளிகளால் சில ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உடன் பிறப்புகள் எதிரிகளாக மாறலாம். மற்றவர்களுக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேராது. அங்காரக வழிபாடு அல்லல்களைப் போக்கும்.

**குருப்பெயர்ச்சி பலன்கள்!**

வைகாசி 30 ஆம் திகதி (13.06.2014) அன்று கடக இராசியில் குரு உச்சம் பெற்று

வாதங்கள் மறைந்து மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டு ஓடும். தாய்வழி ஆதரவு பெருகும். குருப்பெயர்ச்சியினால் நினைத்த காரியங்கள் நிறைவேறும். நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள உறவினர்களும், நண்பர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவர். கணவன்-மனைவிக்குள் பாசம் கூடும். ஆசைப்பட்ட பொருட்களை எல்லாம் வாங்கி மகிழ்வீர்கள். உங்கள் பெயரிலேயே இடம் வாங்கி அதில் தொழில் நடத்தலாமா என்று குடும்ப உறுப்பினர்கள் யோசிப்பர். சனியின் வக்ர காலத்தில் உடல்நலம் சீராக ஒரு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆஞ்சநேயர் வழிபாடும், ராகு-கேது வழிபாடும் ஆனந்தத்தை வழங்கும்.

**சிறப்பு வழிபாடுகள்**

**பொதுவாக இராசிநாதன் சனி என்பதால் சனிக்கிழமை தோறும் சனி பகவான் சந்நிதியில் கவசம் பாடி வழிபாடு செய்யுங்கள்.**

**எள் தீபம் ஏற்றுங்கள். யோகபலம் பெற்ற நாளில் கர்ப்ப ரட்சாம்பிகை சமேத முல்லைவன நாதரை வழிபட்டு முன்னேற்றங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.**

**நாளை கும்பம்.....**

# குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குதூகலம் பிறக்கும்!

போது கடவுள் வழிபாட்டில் கவனம் செலுத்த வேண்டும்.

**எப்படியிருக்கும் ஜய வருடம்?**

உங்களுடைய இராசிநாதன் சனி. அவர் ஆயுள்காரகன் என்று வர்ணிக்கப்படுபவர். அதே நேரத்தில் மந்தன் என்றும் சொல்

வருடக்கடைசி வரை அங்கேயே வாசம் செய்கிறார்கள். இதன் விளைவாக 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகு ஒளிமயமான எதிர்காலத்திற்கு உறுதுணையாக இருப்பார். தந்தை வழி உறவில் இருந்த சச்சரவுகள் அகலும். பூர்வீக சொத்துக்களை

சஞ்சரிக்கப் போகிறார். இந்த உச்ச குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே, சகல யோகங்களும் வந்து சேரும் விதத்தில் குருவின் அருளுக்கு நீங்கள் பாத்திரமாகப் போகிறீர்கள். தொட்ட காரியங்கள் வெற்றிபெறும். தொகை எதிர்பார்த்தபடி வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிவேட்டையின் ஓட்டைகள்!



வடக்கிலும் கிழக்கிலும் கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக நீடித்த புலிவேட்டை, மூன்று பேரின் மரணங்களுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மார்ச் மாத தொடக்கத்தில் பளைப் பகுதியில் விநியோகிக்கப்பட்டதாக கூறப்படும் துண்டுப்பிரசுரங்களுடன் தான் இந்தப் புலிவேட்டை ஆரம்பிக்கப்பட்டது. முதலில் கோபி என்ற செல்வநாயகம் கஜப னைத் தேடுவதாக பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அறிவித்தது. அடுத்தடுத்த நாட்களிலேயே கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் அவரைச் சுற்றிவளைத்தபோது, பொலிஸ் அதிகாரி ஒருவரைச் சுட்டுவிட்டு கோபி தப்பிச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஜெயக்குமாரி என்ற பெண்ணும் அவரது மகள் விபூசிகாவும் பிடிக்கப்பட்டனர். இதனுடன் தேடுதல் வேட்டைகளும் சுற்றிவளைப்புகளும் இராணுவக் கெடுபிடிகளும் ஆரம்பித்தன. அத்துடன் கோபியுடன், அப்பன் என்ற நவரட்ணம் நவநீதனும் தேடப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர், தேவியன் எனப்படும் சுந்தரலிங்கம் கஜீபன் என்பவரையும் தேடுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த் மூவரினதும் புகைப்படங்களுடனான சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும் ஆயிரக்கணக்கில் வெளியிடப்பட்டன. ஒவ்வொருவரினது தலைக்கும் இலட்சக் கணக்கான ரூபா விலையும் மதிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாக நடந்த இந்தத் தேடுதல் வேட்டைகள், சோதனைகள், விசாரணைகளின் விளைவாக 10 பெண்கள் உள்ளிட்ட 65 பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் பலரும் சந்தேக நபர்களின் தாயார் அல்லது மனைவி அல்லது வேறு உறவினர்களாக இருந்தனர்.

இவற்றின் மூலம் கிட்டத்தட்ட வடக்கு, கிழக்கில் ஐந்து வருடங்களுக்கு முந்திய அச்சம் நிறைந்த ஒரு போர்ச் சூழ்நிலை மீளவும் உருவாக்கப்பட்டது. கடந்த 11ஆம் திகதி நெடுங்கேணிக்கு தெற்கே சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள வெடிவைத்தகல்லு காட்டுப்பகுதியில் தேடப்படுவதாக அறிவிக்கப்பட்ட கோபி, அப்பன், தேவியன் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டதுடன், இந்த வேட்டை முடித்துவைக்கப்பட்டது.

இந்த ஒரு மாதகாலத்தில் நடந்த எல்லாச் சம்பவங்களுமே நிறையக் கேள்விகளையும் சந்தேகங்களையும் மக்களின் மனங்களில் எழுப்பியிருக்கிறது. ஏனென்றால், எல்லாமே சர்ச்சைக்குரிய வகையில்தான் நடந்து முடிந்திருக்கின்றன. பல சம்பவங்கள் இடம்பெற்ற சூழலும் அவற்றின் பின்னால் உள்ள மர்மங்களை துலக்க அரச தரப்போ, படைத் தரப்போ முன்வராததும் அவை நியாயப்படுத்தப்பட்ட விதமும் இந்தச் சர்ச்சைகளுக்கும் சந்தேகங்களுக்கும் காரணமாகியுள்ளன.

இந்தப் புலி வேட்டையின் ஊடாக அரசாங்கம, விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணைய முனைகிறார்கள் என்ற செய்தியை உள்நாட்டிலும் வெளியுலகிலும் பரப்பியது. இறுதியில் அந்த முயற்சியை தாம் முறியடித்து விட்டதாகவும் இனியொருபோதும் புலிகளை ஒருங்கிணைய விடமாட்டோம் என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

மீண்டும் புலிகள் ஒருங்கிணைய முயன்றனர் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பில் ஏகப்பட்ட கேள்விகள் இருக்கின்ற நிலையில், இதனை வைத்து அரசாங்கம் தனக்குத் தேவையான பல காரியங்களை நிகழ்த்தியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இந்தப புலி வேட்டையை வைத்து அரசாங்கம், வடக்கில் படையினர் நிலை கொண்டிருப்பதை ஜெனீவாவில் நியாயப்படுத்தியுள்ளது. புலிகள் மீள ஒருங்கிணைய முனைகிறார்கள் என்ற சாக்கில் வெளிநாடுகளில் இயங்கும் அமைப்புகளையும் தனி நபர்களையும் தடைசெய்துள்ளது. தமது சந்தேக வளையத்துக்குள் இருந்தவர்களையெல்லாம் பிடித்து தடுத்து வைத்துள்ளது அல்லது விசாரணைக்குட்படுத்தியுள்ளது. மீண்டும் புலிகள் என்ற பூச்சாண்டியை காட்டி தெற்கிலுள்ள மக்களையும் திசை திருப்பி தேர்தலில் வாக்குகளைக் கவர முயன்றது.

மீளவும் வடக்கிலுள்ள மக்களை அச்சுறுத்தி அடக்கி வைப்பதில் வெற்றி கண்டுள்ளது. புலிகள் இயக்கத்தையோ அல்லது அது போன்ற ஒரு அமைப்பையோ உருவாக்க முனைந்தால் இதுதான் கதி என்ற தெளிவான செய்தியை எடுத்துக் கூறியுள்ளது. இப்படியாகப் பல காரியங்களை அரசாங்கம் சாதித்துள்ளது. அதுவும், ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் நடந்து கொண்டிருக்கும்போதே, இவற்றையெல்லாம் அரசாங்கம் செய்து முடித்திருக்கிறது.

இதன் மூலம் ஜெனீவாவில் கொண்டு வரப்படும் தீர்மானங்களைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை என்ற செய்தியையும் இலங்கை வெளிப்படுத்தியதாகவே பலரும் கருத்து வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது ஜெனீவாவில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள், இலங்கையை ஜனநாயக வழிக்குக் கொண்டுவரும் என்ற மேற்குலகின் நம்பிக்கைக்கு முரணாக நடந்துகொண்டதன் மூலம், தாம் புறநடையாகவே செயற்பட விரும்புகிறது என்ற தகவலையும் அரசாங்கம் எடுத்துக் கூறியுள்ளது.

மிகவும் முக்கியமான இந்தக் கால கட்டத்தில் அரசாங்கம் நடத்திய புலி வேட்டைக்கு நெடுங்கேணிக் காட்டில் முடிவு கட்டப்பட்டுள்ளது. இந்தப் புலிவேட்டை முடித்து வைக்கப்பட்ட சூழலும் அது நடந்த விதமும் பலத்த கேள்விகளைத் தோற்றுவித்துள்ளன. நெடுங்கேணிக்கு தெற்கே 15 கிலோமீற்றர் தொலைவில் சேமமடுக்குளம் நோக்கிச் செல்லும் வீதியில் அமைந்துள்ள வெடிவைத்த கல்லு என்ற இடத்தில்தான் இந்தப் புலி வேட்டையின் உச்சக்கட்டம் இடம்பெற்றது.

கடந்த 11ஆம் திகதி அதிகாலையில் பொதுமக்கள் எவரும் வசிக்காத இந்த இடத்திலுள்ள அடர்ந்த காட்டுக்குள் கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூவரும் படையினரின் சுற்றிவளைப்பிலிருந்து தப்பிச்செல்ல முயன்றபோது சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதற்கு முதல் நாள் 10ஆம் திகதி காட்டுப் பகுதியில் உணவும் மருந்துப்பொருட்களும் உடைகளும் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தே அந்த தேடுதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு கூறியது.

சுமார் 3,000 படையினர் அந்தக் காட்டுப் பகுதியைச் சுற்றிவளைத்தபோது, அதிகாலையில் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவர்களுடன், லான்ஸ் கோப்ரல் கமல்ராஜா என்ற ஒரு தமிழ் இராணுவப் புலனாய்வு அதிகாரியின் சடலமும் பதவியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. முதலில் கோபி உள்ளிட்டோரைத் தேடும் போது நடந்த மோதலிலேயே அவர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. ஆனால், பின்னர் பாதுகாப்பு அமைச்சு, அவர் வவுனியா வடக்கில் வேறோரு பயிற்சியின்போது தவறுதலாக மற்றொரு சிப்பாயின் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகியே அவர் மரணமானதாக கூறியது.

எவ்வாறாயினும், வெலிஓயா என இப்போது அழைக்கப்படும் மணலாற்றுக் காட்டுப்பகுதியில் நடந்த இந்த நான்கு உயிர்ப் பலிகளும் ஒன்றுடனொன்று தொடர்புபட்டதாகவே சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சுதந்திரமாக செய்திகள் சேகரிக்க ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை. பதவியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நால்வரினது உடல்களும் அநுராதபுரத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கேயே பிரேத பரிசோதனைகள், மரண விசாரணைகள் எல்லாம் நடத்தப்பட்டு இரகசியமாகவே அவை அடக்கமும் செய்யப்பட்டன. நெடுங்கேணிக் காட்டில் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்ட படையினர் பற்றிய படங்களை வெளியிட்ட படைத்தரப்பு, கொல்லப்பட்ட எவரது படத்தையும் வெளியிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அது மட்டுமன்றி, சித்திரைப் புத்தாண்டுக்காக பிரதான அச்சு ஊடகங்கள் எல்லாமே ஞாயிற்றுக்கிழமைக்கான வெளியீடுகளை வெள்ளியன்றே அச்சிட்டுவிட்டு விடுமுறைக்காக மூடப்படும் சூழலில்தான் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன. இதன்மூலம் அச்சு ஊடகங்கள் இந்தச் சம்பவங்கள் குறித்து கேள்விகளை எழுப்பவோ, சந்தேகங்களை கிளப்பவோ அல்லது சில இரகசியங்களை அவிழ்த்து விடவோ முடியாத நிலையிருந்தது. இவையெல்லாவற்றையும் ஒருங்கிணைதது் பார்த்தால், பல விடயங்கள் அம்பலத்துக்கு வருவதை அரசாங்கமும் படைத்தரப்பும் விரும்பவில்லை என்பதை உணர்ந்து கொள்ள முடியும். கோபியின் உடலை அவரது மனைவி, தாய் அடையாளம் காட்டியதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டபோதும், ஏனைய இருவரினதும் உடல்களை யார் அடையாளம் காட்டினர் என்ற விபரம் வெளியிடப்படவில்லை. எதற்காக அரசாங்கம் அவசர அவசரமாக இவர்களின் உடல்களை அடக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தது என்பதும் சந்தேகத்துடனேயே நோக்கப்படுகிறது.

அது மட்டுமன்றி, புலிகள் இயக்கத்தை மீள ஆரம்பிக்க முயன்றதாக கூறப்பட்ட மூவரும், தம்மைப் படையினர் தேடுகிறார்கள் என்று தெரிந்ததும், வெடிவைத்தகல்லு காட்டுக்குள் போய் ஒளிந்துகொள்ள வேண்டிய தேவை என்ன என்ற கேள்வியுமுள்ளது. குடிமனைகளை அண்டிய காடுகளில் ஒளிந்திருந்தால் தான், அவர்களுக்குத் தேவையான எதையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், குடிமனைகளற்ற காட்டில் அவர்களுக்கு எங்கிருந்து உணவு கிடைக்கும் என்பதை விட, அதன் மூலம் அவர்கள் எதையுமே சாதிக்கவும் முடியாது.

மேலும், கொல்லப்பட்ட மூவரும் புலிகள் இயக்கத்தை மீள ஒருங்கிணைக்க முயன்றதாக கூறப்பட்டாலும், அவர்கள் தப்பிச்செல்ல முயன்றபோது ஏன் கைதுசெய்ய முயற்சிக்கவில்லை? அவர்கள் படையினருடன் சண்டையிட்டுக்கொண்டு தப்பிச்செல்ல முயன்றதாகத் தெரியவில்லை.

ஏனென்றால், கொல்லப்பட்ட பின்னர் அவர்களிடமிருந்து ஒரேயோரு கைத்துப்பாக்கியையும் இரண்டு கைக்குண்டுகளையும் மீட்டதாகத்தான் படைத்தரப்பு கூறியுள்ளது. 3,000 படையினருக்கு முன்பாக இந்த ஆயுதங்களால் எதையும் சாதிக்க முடியாது. நிச்சயமாக படையினர் நினைத்திருந்தால், மூவரையும் உயிருடன் பிடித்திருக்கலாம். ஆனால், ஒரேயொரு துப்பாக்கியுடன் இருந்தவர்களை சுட்டுக்கொன்றது ஏன் என்ற கேள்வியும் உள்ளது. உயிருடன் பிடித்திருந்தால் தான், புலிகள் இயக்கத்தை மள ஆரம்பிக்க உதவியவர்கள் பற்றிய எல்லா விபரங்களையும் படைத்தரப்பினால் திரட்ட முடிந்திருக்கும்.

அத்தகைய வாய்ப்பைக் கெடுக்கும் வகையில் மூவரையும் சுட்டுக்கொன்று விட்டதாக மார்தட்டிக்கொள்வது எந்த வகையிலும் கிளர்ச்சி அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் ஒரு இராணுவத்தினது புத்திசாலித்தனமான அணுகுமுறையாக இருக்க முடியாது. அதாவது இன்னொரு போராட்டத்தின் வேர்களை அழிக்க அரசாங்கம் நினைத்திருக்குமேயானால், இந்தக் கொலைகள் நிகழ்ந்திராது.

அது மட்டுமன்றி, இந்தக் கொலைகள் நடந்த சமநேரத்திலேயே, கிட்டத்தட்ட அதே பகுதியில் இராணுவ அதிகாரி ஒருவரும் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டதும் சந்தேகங்களை வலுப்படுத்துகிறது. அதுவும், சாதாரண படையினர் என்றால் பரவாயில்லை. இராணுவப் புலனாய்வு அதிகாரியாக இவர் இருந்ததுதான் இன்னும் அதிக குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இந்தப் புலிவேட்டை தொடங்கப்பட்ட போதே, இது வெறும் புரளி என்றும் நாடகம் என்றும் ஊடகங்கள் பலவும் செய்திகளை வெளியிட்டன. அதாவது, 'அரசாங்கம் வடக்கில் படையினரை நிறுத்தி வைத்திருப்பதை நியாயப்படுத்திக்கொள்வதற்காகவே இவ்வாறு நாடகமாடுவதாக விமர்சனங்கள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.

அத்தகைய விமர்சனங்களின் மீதுள்ள நியாயங்களை சற்றும் புறமொதுக்கித் தள்ளிவிட முடியாது. ஏனென்றால், இந்தப் புலி வேட்டையில் அந்தளவுக்கு ஓட்டைகள் இருந்தன. இது புலிகளின் மீண்டெழும் முயற்சி என்றும் அதை அடக்கிவிட்டதாகவும் அரசாங்கம் கூறிக்கொண்டாலும், அதனை எந்தளவு மக்கள் நம்புகிறார்கள் என்பது கேள்வி தான்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் இந்தக் கதை தம் மீதான அழுத்தங்களை அதிகரிப்பதற்கான உத்தி என்றே கருதுவதாகத் தெரிகிறது. அந்த வகையில் இந்தப் புலி வேட்டை தமிழ் மக்களுக்கு அச்சத்தைக் கொடுத்துள்ளது மட்டுமன்றி, அரசாங்கம் மற்றும் படையினரின் நடவடிக்கைகள் மீது அவநம்பிக்கை கொள்ளவும் காரணமாகியுள்ளது. இந்தப் புலி வேட்டையை தொடர்ந்து நடத்துவது, வடக்கின் அமைதியை முற்றாகவே சீர்குலைத்து விடும் ஆபத்தையும் அரசாங்கம் உணர்ந்தேயிருந்தது. அதனால், புலிவேட்டையை நெடுங்காலத்துக்கு நீடிக்க முடியாது என்பது அரசாங்கத்துக்கு தெரியும். அதனால்தான் மூவரையும் சுட்டுக்கொன்றதுடன், புலிவேட்டைக்கு முடிவு கட்டப்பட்டுள்ளது.

இனிப் பெரியளவில் தேடுதல்களையோ, சுற்றிவளைப்புகளையோ படையினர் நடத்த முனையமாட்டார்கள். ஆனால், இராணுவத்தின் இருப்பில் எந்த மாற்றமும் இருக்காது. இனிமேல் வடக்கிலிருந்து படையினர் அகற்றப்பட வாய்ப்பில்லை என்பதை அமைச்சர் மஹிந்த சமரசிங்கவினது கருத்தும் உறுதிப்படுத்துகிறது. உண்மையில் புலிகள் இயக்கத்துக்கு மீளுயிர் கொடுக்கும் முயற்சிகள் நடந்ததா என்பதை உறுதிப்படுத்த அந்த மூவரும் உயிரோடு இல்லை. எனவே, அரசாங்கத்தின் கதையை நம்ப முடியாதவர்களும் நம்பித்தான் ஆகவேண்டிய கட்டாயம் உள்ளது.

அதேவேளை, நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு புலி வேட்டை தடையை உருவாக்கும் என்பதால், அது சர்வதேச அளவில் சிக்கலைக் கொடுக்கும் என்பதால், அதை ஆரம்பித்து வைத்தவர்களே அதற்கும் முடிவு கட்டிவிட்டனர். எவ்வாறாயினும், போர் முடிவுககு வந்த பின்னர், நடந்துள்ள நான்கு துப்பாக்கிச் சூட்டு மரணங்களினதும் எல்லா உண்மைகளும் வெளிச்சத்துக்கு வரப்போவதில்லை. ஏனென்றால், உண்மைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் இந்த மரணங்கள் எதுவும் நிகழவில்லை. உண்மைகள் வெளிவரக் கூடாது என்பதால்தான், ஆளரவமற்ற நெடுங்கேணியின் தெற்குப் புறக் காடுகள் இதற்கான களமாகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கலாம்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் பிரச்சினைக்கு அமைச்சு ரீதியான பேச்சுவார்த்தை சிறந்தது

## அமைச்சர் ராஜித கருத்து தெரிவிப்பு

(கொழும்பு)

மீனவர் பிரச்சினைகள் குறித்து அமைச்சு மட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென மீன்பிடித்துறை மற்றும் கடல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை- இந்திய மீனவர்கள் அத்துமீறல்களில் ஈடுபடுதல் மற்றும் கைதுகள் தொடர்பில் இரு நாடுகளினதும் அமைச்சு ரீதியான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியது அவசியமானது.

அடுத்த மாதத்தில் இவ்வாறான ஓர் பேச்சுவார்த்தை நடத்த நேரத்தை ஒதுக்கித் தருமாறு ஏற்கனவே இந்திய மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதற்கு முன்னதாக அமைச்சு மட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தமிழக அரசாங்கம் எதிர்வரும் மே மாதம் 12, 13 ஆம் திகதிகளில் இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளதாக அறிவித்துள்ளது.

எனினும், இது குறித்து உத்தியோகபூர்வமாக இதுவரையில் அறிவிக்கப்படவில்லை எனவும் கடிதங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை எனவும் மீன்பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது. (2)

# சாரதி உறக்கத்தால் வாகன விபத்து!-ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

கண்டியிலிருந்து கதிர்காமம் சென்ற வாகனம் விபத்துக்குள்ளாகியதில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

கதிர்காமம் தெட்டகம பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.30 அளவில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனம் வீதியை விட்டு விலகி தெட்டகம ஆற்றில் வீழ்ந்துள்ளது. வாகன சாரதி உறங்கியதனால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் மூன்று பெண்களும் இரண்டு ஆண்களும் உயிரிழந்துள்ளனர்.

ஐந்தரை வயதான குழந்தையொன்று விபத்தில் உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (2)

# பயங்கரவாதம் குறித்து விழிப்புடன் இருங்கள்

## பொலிஸார் அறிவுறுத்து

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்து பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெற்றால் அது குறித்து அவதானம் செலுத்துமாறு பொதுமக்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பயங்கராத செயற்பாடுகள் குறித்து சந்தேகம் ஏற்பட்டால் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும்.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதனை தடுப்பது பொலிஸாரினதும் மற்றும் பாதுகாப்புப் படையினரினதும் கடமையாகும்.இதற்காக புலனாய்வுப் பிரிவினரின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன மற்றும் மத முரண்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது. பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் தரப்பினர் தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயற்பட்டு தகவல்களை பொலிஸாருக்கு வழங்க வேண்டியது அவசியம் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (2)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற சப்பறத் திருவிழா மற்றும் தேர்த்திருவிழா காட்சிகளைப் படங்களில் காணலாம்.

# புலம்பெயர் அமைப்புக்களின் தடை தொடர்பாக அரசு விளக்கமளிப்பு

## அமைச்சர் பீரிஸ் தலைமையில் நடைபெறும்

வெளிநாடுகளில் செயற்பட்டு வந்த 16 புலம்பெயர் தமிழ் குழுக்கள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாக வெளிநாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் விளக்கமளிக்கவுள்ளது.

இதற்காக வெளிவிவகார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் இணைந்து, இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கான மாநாடு ஒன்றை நடத்தவுள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இதற்கு தலைமை தாங்கவுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது 16 தமிழ் அமைப்புக்களை அரசாங்கம் தடைசெய்ததற்கான காரணம் குறித்து விளக்கம் அளிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# மத்தளவுக்கு சென்ற போது முட்டை வீசி தாக்குதல்

## சர்வதேச விசாரணை கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு விஜயம் செய்த ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் சர்வதேச விசாரணை தேவையென ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சர்வதேச பாராளுமன்றத்தில் முறைப்பாடு செய்ய விருப்பதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் உள்நாட்டில் விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்றும் கோரி சபாநாயகரிடம் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற குழுவொன்று அண்மையில் விஜயம் செய்திருந்தது.

இந்தக் குழுவில், பாராளுமன்ற உறுப்பினர்களான அஜித் பீ பெரேரா, ஆர். யோகராஜன்,நளின் பண்டார, எரான் விக்கிரமரட்ன மற்றும் அஜித் மன்ன பெரும ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இந்த விஜயத்தின் போது, சிலர் மத்தளவில் வைத்து உயிரச்சுறுத்தல் விடுத்ததுடன் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்குச் சென்றதன் பின்னர் முட்டை வீசி தாக்கியதாக அந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (2)

# வாரம் ஒரு தகவல்

## பார்த்த ஞாபகம்

"எனக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம் சேர்!"

"என்ன சந்தேகம்?"

"ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் முகத்தைப் பார்த்து இவன் இன்னார்தான் என்று அடையாளம் கண்டுபிடிக்கிறான்... மிருகங்களுக்கு எல்லா முகமும் ஒரே மாதிரித் தானே இருக்கிறது. அதெல்லாம் எப்படி அடையாளம் கண்டுகொள்கிறது?"

"அது அதுக்கு ஒரு டெக்னிக் இருக்கிறது! கரடிகள் என்ன செய்யும் தெரியுமா? தங்கள் குட்டிகளை நாக்கினால் நக்கும். பின் இரை தேடப் போகும். திரும்பி வந்ததும் குட்டிகளை முகர்ந்து பார்க்கும். தனது உமிழ்நீர் வாசனையை வைத்து இதுதான் தன்னுடைய குட்டிகள் என்று அடையாளம் கண்டு கொள்ளும்"

அமெரிக்காவில் ஓர் ஆராய்ச்சியாளர் புதிதாக குட்டிபோட்ட ஒரு தாய்க் கரடிக்கு தூக்க மருந்து கொடுத்துத் தூங்கவைத்தார். பின்னர் அதன் மூக்கில் தலைவலித் தைலத்தை தடவிவிட்டார். அந்தக் கரடியின் குட்டிகளுடன் அநாதையாக தவித்துக் கொண்டிருந்த இன்னொரு கரடிக் குட்டியையும் சேர்த்துவிட்டார்.

தாய்க்கரடி தூங்கி எழுந்ததும் அதற்கு தன்னுடைய குட்டிகளை சரியாக மோப்பம் பிடிக்க முடியவில்லை. அநாதைக் கரடிக் குட்டியையும் தன்னுடைய குட்டியாகவே நினைத்து நக்க ஆரம்பித்ததாம்"

"நானும் சில சமயம் அந்தக் கரடி மாதிரி ஆகிவிடுகிறேன் சேர்"

"எப்படி?"

"இன்று காலையில் எங்கள் வீட்டு வாசலில் ஒரு சின்னப்பையனைப் பார்த்தேன். அவனை எங்கேயோ பார்த்த ஞாபகமாய் இருந்தது. சரியாக நினைவுக்கு கொண்டு வரமுடியவில்லை. அரைமணி நேரம் கழித்து தான் ஞாபகம் வந்தது!"

"யார் அவன்?"

"ஹி... என்னோட மகன் தான் சேர்!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளிவாய்க்கால் முடிவிற்கு பின்னரும் முடிந்து விடாத தமிழர்களின் அரசியல் தீர்வு

சண்டே லீடர் பத்திரிகைக்கு குசல் பெரேரா எழுதிய போருக்கு வித்திட்ட சக்திகளும் வடக்கு அரசியல் நிலைமைகளுக்கு உரமூட்டும் தெற்கின் கடும் போக்கும் என்னும் கட்டுரையின் தமிழாக்கம் பிரசுரமாக்கப்படுகிறது.

ஜெனீவாவில் இடம்பெற்ற ஐ.நா. மனிதவுரிமைகள் சபையின் கடந்த மாத மார்ச் மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமானது முழுநாட்டிற்கும் எதிரான ஒன்றாகவே தான் இலங்கையில் (சிங்கள நாட்டிற்கெதிரானது போல்)எடுக்கப்பட்டுள்ளது. அரசு மட்டுமன்றி 30 வருட கால மோசமான பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததும் அந்தப்போரே என நம்புவோருங்கூட (உண்மையும் அதுதான்) இதற்குக் காரணமாயுள்ளனர். தற்போது போரின் பின்னணியை கிளறுவதான எந்த முயற்சியும் இலங்கைக்கெதிரானதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சார்பானதென்பதுடன் சர்வதேச தலையீட்டின் மூலம் ஆட்சி மாற்றமொன்றினை ஏற்படுத்துவதற்கான முயற்சியாகவே நோக்கப் படுகின்றது.

மக்கள் ஆட்சிமாற்றத்தை விரும்பவில்லை என்பதே அரசின் தொடர்ச்சியான வாதமாயிருப்பதுடன் இது ஒவ்வொரு தேர்தலிலுங்கூட நிரூபிக் கப்பட்டதாகவே இருக்கிறது. அண்மையில் நடந்து முடிந்த மேல், தென் மாகாண சபை களுக்கான தேர்தல் முடிவுகள் ஆட்சியிலிருக்கும் இந்த அரசையே உறுதிப்படுத்தியுள்ளது என்பதே அரசின் பேச்சாளர் களனைவரதும் கூற்றாகவுள்ளது.

இந்த ஜெனீவாத் தீர்மானம் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனேயே வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிசும் இதனையே எடுத்துக்கூறியதுடன் ஊடகத்துறையினர் மத்தியில் அத்தீர்மானத்தை நிராகரித்துமிருந்தார்.

தேர்தல்களினால் செய்ய முடியாத உள்ளூர் அரசியல் மாற்றத்தினை சர்வதேசத்தினால் ஏற்படுத்தி விடமுடியாது. மக்களே அதனைத் தீர்மானிப்பர் என அவர் கூறியிருந்தார். யு.எஸ்., பிரிட்டிஷ், நேட்டோ தலையீடுகளினால் அண்மையில் ஈராக்கிலும் லிபியாவிலும் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றங்களினால் விரும்பத்தகாததும் அநாவசியமானதுமான குழப்பங்களே ஏற்பட்டன. உக்ரைனிலிருந்து கிரிமியா பிரிவதற்கான நிலைமை ஏற்பட்டதற்கும் இதுபோன்றதொரு ரஷ்ய தலையீடே காரணமாயிருந்தது. ஒரு நாட்டினுள் சமூக, அரசியல் குழப்பங்களை ஏற்படுத்துவதென்பது விவாதத்திற்கப்பாற்பட்டதும் அநாவசியமானதேயாகும் என அவர் மேலும் கூறியிருந்தார்.

ஆனாலும் ஜெனீவா தீர்மானம் மட்டிலான இந்த அமெரிக்க அனுசரணை என்பது இங்கு ஆட்சி மாற்றம் பற்றியதல்ல. 3 வருடங்கள் ஆகிய பின்னரும் இலங்கை அரசானது தனது சொந்த LLRC (நல்லிக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள்) சிபாரிசுகள் மட்டில் மெச்சத்தக்க எந்தவொரு



பெறுமதியான நகர் வினையும் 2011 டிசெம்பரிலிருந்தே வெளிக்காட்ட வில்லை.

அதனது மூர்க்கப்பிடி வாதமான இந்த நிராகரித்தல் போக்கின் காரணமாக அதனது நம்பகத்தன்மைக்கு ஏற்பட்டிருக்கும் இயல்பானதொருசவாலே இதுவாகும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய உண்மையும் நீதியானதுமான நிரந்தர தீர்வுப் பொறிமுறை யொன்றினை வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுத் துமாறு முன்னைய இரண்டு ஐ.நா. தீர்மானங்களூடாக வருடத்திற்கொரு தடவை இந்த அரசுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. யுத்தத்தின் போது விளைவிக்கப்பட்ட அநீதியின் கொடுமையை தணிப்பதுடன் இணக்கப் பாட்டிற் கென அர்ப்பணிப்புடன் கூடிய பாதையொன்றினை ஏற்படுத்தி இன்னமும் தீர்வு காணப்படாத அரசியல் பிணக்கைத் தீர்ப்பதற்கான அதன் சொந்தப் பொறுப்பினைத் தட்டிக் கழிக்கும் அரசின் இந்தக் குரூர மமதையைப் போக்கும் நோக்குடன் தற்போது 3ஆவது சந்தர்ப்ப மும் கடந்த மார்ச் மாத ஐ.நா. மாநாடில் ஏற்படுத்தி...

க்கப்பட்டுள்ளது.

இதன் பயனாகவே OHCHR ஊடான வெளியார் தலையீடுகள் என்ற நடை முறை இங்கு நியாயப்படுத் தப்படுகிறது. இருப்பினும் இலங்கை மக்களிடையே விடையில்லாத பல கேள்வி களும் இருந்து கொண்டேயி ருப்பதால் இவ் விடயம் முடிவில்லாது நீண்டு கொண்டே செல்கிறது. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு எதற்காக ஐ.நா. வையும் சர்வதேச சமூகத்தையும் எதிர்பார்க்கின்றனர். இப் பிரச்சினை நாட்டிற்குள்ளாகவே தீர்க்கப்பட முடியாததா?

நாட்டிற்குள்ளும் வெளியே புலம்பெயர் தமிழர்கள் மத்தியிலுமுள்ள பல்வேறு தரப்பு அரசியற் செயற் பாட்டாளர்களும் பல்வேறு விதமான பதில்களை கூற நான் கேட்டிருக்கிறேன். தமிழீழ விடுதலைப்புலிகள் ஒழிக்கப்பட்ட பின்னர் அப் பாவித் தமிழர்களுக்கான தீர்வு பற்றிய எதுவித அக்கறையும் அரசுக் குக் கிடையாது. தமிழர்கள் ஆயுதமேந்தும் போது மட்டும் அது பிரச்சினைக்கு காது கொடுக்கிறது. இக் கூற்றில் ஓரளவு நியாயம் இருப்பதாகவே தோன்றுகிறது.

ஏனெனில் 1984 இல் திம்புவிலும் அதைத் தொடர்ந்து 2002 இல் ஒஸ்லோவிலும் பின்னர் 2006 இல் ஜெனீவாவிலும் கொழும்பு அரசை பேச்சுவார்த்தைகளுக்கு உந்தித்தள்ளிய ஒரு சக்தியாகவே மேற்படி புலிகளின் ஆயுதபலமே இருந்திருக்கிறது. இருப்பினும் ஆயுத படைக்கல சக்திகள் மட்டும் தான் பேச்சுவார்த்தைகளுக்கு இட்டுச் செல்லுமென்றில்லாமல் எப்போதும் புவி சார் அரசியல் காரணங்களும் இருக்கவே செய்கின்றன.

அதனாலேயே பேச்சு வார்த்தைகளை ஏற்பாடு செய்வதற்கென வெளிநாட்டவர்களின் அனுசரணை யொன்றும் தேவைப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் படைக்கல சக்தியிருந்தும் இவ்வித முயற்சிகளனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

இவ்வனைத்துக் காரணங்கள் மத்தியிலும் எங்கோ ஒரு தவறு இருக்கவே செய்கிறது என்பது நிச்சயம். ஆகக் கூடுதல் முக்கிய காரணி வெறுமனே வட- கிழக்கு அரசியல் சக்தி என்றில்லாமல் இதற்கு அரசியலில் உள்ளார்ந்திருக்கும் பல்லின அரவணைப்பற்ற குறுகிய அரசியல் மனப்போக்கேயாகும்.

**தமிழீழ விடுதலைப்புலிகள் ஒழிக்கப்பட்ட பின்னர் அப்பாவித் தமிழர்களுக்கான தீர்வு பற்றிய எதுவித அக்கறையும் அரசுக்குக் கிடையாது. தமிழர்கள் ஆயுதமேந்தும் போது மட்டும் அது பிரச்சினைக்கு காது கொடுக்கிறது. இக் கூற்றில் ஓரளவு நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.**

தேசிய பிரச்சினைக்கான தீர்வினைக் கொண்டு வருவதற்கு சிங்களப் பெரும்பான்மையினரும் தெற்கு அரசியல் சக்திகளும் எந்தளவிற்கு காத்திரமானதும் நியாயமானதுமான ஓர் முன்னேற்றத்தை நோக்கித் தமது நகர்வினை மேற்கொள்வார்கள் என்பதிலேயே இது தங்கியுள்ளது. இங்குதான் பிரச்சினையேயுள்ளது.

தற்போது சிங்கள பௌத்தர்கள் எனப் பெரும்பான்மையினரை மக்கள் மத்தியிலிருந்து துருவப்படுத்தும் புதுக்காரணியொன்றும் கௌரவமான விட்டுக்கொ டுப்புக்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக வெளிக்கிளம்பியுள்ளது.

சிங்கள சமூக- சித்தாந்த கோட்பாடானது படிப்படியாக வளர்ச்சிகண்டு குரூரமான இந்தப்பூதாகர ஆதிக்க நிலையை எட்டியது எவ்விதம்.?

இது காலமும் பலதரப்பட்ட தொண்டு நிறுவனங்களால் உள்ளூர் ஊடகங்களூடாக சமாதானம், சகவாழ்வு மற்றும் அதிகாரப் பகிர்வுக்குமான பிரசாரப் பின்னணியுடன் மேற் கொள்ளப்பட்டதும் ஏனைய பிரசாரத் திட்டங்களான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல், அதற்கான கல்வியறிவு, விழிப்புணர்வூட்டல் மத்தியிலும் இவற்றுக்கெதிராக தீவிரம் பெற்றிருக்கும் இந்த சிங்கள- பௌத்த அமைப்புக்களின் வளர்ச்சி எத்தகையது?

இலங்கை மட்டிலான கடந்த மூன்றாண்டுகால பிரபல ஜெனீவா நடவடிக்கைகள் பற்றி ஆழ்ந்து நோக்கும் எவருமே இணக் கப்பாடு நம்பகத் தன்மை மற்றும் அதிகாரப்பகிர்வு பற்றி அது விடுத்துவரும் அழைப்புகளுக்கு செவி சாய்க்கவோ ஆதரிக்கவோ அல்லது அதுமட்டில் சம்பந்தப்படவோ எந்தவொரு முக்கிய அரசியல் கட்சிகளும் தயாராக இல்லை என்பதைக் கண்டு கொள்வர்.

சார்பாகக் குரல்கொடுக்கும் எந்தவொரு பொது அமைப்புங்கூட (கொழும்பில் மட்டும்) பெரிதும் கண்டு கொள்ளக்கூடிய அளவில் இல்லை. இலங்கையின் பெரிய எதிர்க்கட்சி (தெற்கின்) இதுவிடயத்தில் எதுவித பிரசித்த தலையீட்டையும் மிகவும் தந்திரமாகவும் கவனமாகவும் தவிர்த்தே வருகிறது.

ஊடகங்களுக்கான அவர்களது பேட்டிகள், வாக்கு மூலங்கள் மிகுந்த எச்சரிக்கையுடனும் சுருக்கமான சொற் பதங்களுடனும் சிங்கள தீவிரவாத குழுக்களை சீண்டாத விதத்திலும் இருக்கும்படி பார்த்துக் கொள்கின்றனர்.

சுருக்கமாகக் கூறப் போனால் பெரும்பான்மையினரின் நடவடிக்கை களனைத்தும் ஜெனீவா எதிர்ப்பு பிரசாரங்களையே அடிப்படையாகக் கொண்டவையே. இதை விட அவர்களுக்கு வேறு தெரிவே இருப்பதாக தெரியவில்லை.

வடக்கிலும் வன்னியிலும் தமிழ்ச்சமூகம் ஒருமித்து எழுப்பும் உரிமைக் குரலுக்கும் அரசின் விட்டுக்கொடா தன்மையால் உருவாகும் உரமேறிய அரசியல் சக்திக்கும் அவர் கள் சிங்கள அரசுக்கே நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளனர். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## காம்புடைந்த மலர்

உன் அழகிய வதனத்தில்
என் இதயத்தை தொலைத்தேன்
அந்த தொலைப்பை உந்தன் காதினிலே கூற
என்னை ஏற்றுக்கொண்டாய்
park எல்லாம் கூட்டிச் சென்றபின்
இவன் போக்கு என்று கூறிவிட்டாயே
Beach இல் என்னுடன் கடலை உண்டுவிட்டு
சீச்சீ இவன் கசக்கிறானே என்றாய்
நெருக்கமாக என்னுடன் பல்சரில் வந்தாய்
இன்று வெட்கமில்லாது
அப்பாச்சியில் பறக்கிறாயே
வாழ்வென்றால் நீதான் என்று
வாழ்ந்த என்வாழ்வும் மகிழ்ச்சியும்
உன்னால் தொலைந்தது என்று
என்னால் ஜீரணிக்க முடியவில்லை
நீ இல்லாத என் வாழ்வு
காம்புடைந்த மலராகி நிற்கிறது

த.மோகனரூபன்
சுழிபுரம்

## அறுவடை இல்லாத விதைப்புகள்

அழகான கவிதை ஒன்று
அநாதையாக வீதியோரத்தில்
மதி தவறிய உறவால் இது
விதி எழுதிய கவிதை
யார் குற்றவாளி?
காதலா,
காதலுக்குக் காமத்தின்
சாயம் தீட்டிய கயவர்களா?
விதைத்தவனும் இல்லை,
விதை நிலமும் இல்லை
எங்கோ பெய்த மழையால்
எப்போதோ முளைவிட்ட விதை ஒன்று
வீதி ஓரத்தில்...
முகவரி இல்லாத கவிதை இது
முன் எழுத்தின்றித் தவிக்கின்றது
யார் குற்றவாளி
ஆயிரம் உண்டிங்கு ஜாதி, இதில்
அநாதைகள் வந்து புகல் என்ன அநீதி

ஆர்.எஸ்.ஆனந்தன்
தும்பளை

## கன்னத்தில் முத்தமிடு

சிந்தனையில் சாறெடுத்து
செந்தமிழில் வார்த்து வைத்தேன்
புத்தம் புது கவி மலரே
புன்னகையில் மயங்கவைத்தாய்

சின்னதாய் ஒருமுறை
கன்னத்தில் சிறு வடு
சரி செய்யும் நிலையிலே
முகக் கிறீம் அணிந்து கொள்வாய்

எடுப்பான உன் அழகு
அழகான புடைவையில்
நான் கண்ட பொழுதுகளில்
சரிப்படுத்தி நீ போவாய்

விண்ணவரை விஞ்சுகின்ற
கற்பனையை உயர வைத்த
கன்னித் தமிழ் காரிகையே
கன்னத்தில் முத்தமிடு

மருதங்கேணியூர்
வே.வே.அகிலேஸ்வரன்

## இமயம் தொட...

தூய்மை என்பது
உடையிலோ
உன் பேச்சிலோ அல்ல
வன்மையற்று
அன்பாய் அரவணைக்கும்
குணத்தில்தான்- தூய்மை
குடியிருக்கும்
உள்ளத் தூய்மை-உன்னை
இறைவனுடன் இணைக்கும்

மாவை.நா. கஜேந்திரன்

## மறைந்து போகும் மகத்துவங்கள்

கடலிலே சுறாவின் இராச்சியம்
கணக்கற்ற சிறு மீன்களின்
இருப்பு என்பது அங்கு பூச்சியம்
சிறிய இனங்களின் இருப்பு என்பது
இனவாத சிலந்தி வலையினுள்ளே சிக்குண்டு
இன்று ஒரு கேள்விக்குறி! விழுமிய கலாசாரம்
வேற்று இனவாத பூதத்திற்கு
இரையான வேள்விப்பொருள்
கண்ணியம் கௌரவம் பண்ணி வந்த வழிபாடுகள்
இங்கே கண்ணீரில் கரைகின்றன
அதனால்-தொல்குடியின் பழைமைமிக்க
பண்பாட்டுக் கோலங்களும்
கண்ணெதிரேயே மறைகின்றன

வாணியழகன், முரசுமோட்டை

# மௌனத்தின் தேடல் – 200



## நேற்று, இன்று, நாளை

பச்சிளம் பாலகரை கூட
பயங்கரவாதி- என்று
கைது செய்கின்ற கலாசாரமாகி
விட்டதால்- நேற்று விபூசிகாவிற்கு
இன்று எனக்கு- நாளை யாருக்கு?
இப்போதே- கம்பி வேலிக்குள்
வாழப்பழகுவோம்- விடியாத
நம் இனத்திற்காய்...!
விடியும் பொழுதுகளை நோக்கி!

எஸ்.பி.கரன்
சண்டிலிப்பாய்

## யார் வருகைக்காய்!

பச்சிளம் பாலகியே!
முட்கம்பி வேலிக்குள்
யாரை எதிர்பார்த்த
வண்ணம் நிற்கின்றீர்
பல உயிர்களைக்
காவு கொண்ட
யுத்தத்தில்
காணாமற்போன
சிறகொடிந்து நிற்கின்றீரே
யார் வருகைக்காக
வேலியோரம்

வளர்மதி யுகன்
யா. செங்குந்த இ.க.

## விடியல்

கலவரத்தில்
தாயையும் தந்தையையும்
இழந்து தனி மரமாய்
நிற்கும் சிறுமியே!
முள்வேலி உனக்கு
சிறைக்கம்பி அல்ல
பழகிப் பார்
அதுகூட உனக்கு நட்பாகும்
இந்த உணர்வுகூட
மனிதனுக்கு இல்லையே
வருத்தப்படாதே
நாளைய உலகம்
உன் கையில் எனப் போராடு

இரா.ஜெ.துஷ்யந்த்
அளவாவோடையூர்

## விதி

இது இக்குழந்தையின்
விதியா?
இல்லை யுத்த அரக்கனின்
சதியா?
பிறக்கும்போதே
இக்குழந்தையின்
விதி தெரிந்திருந்தால்
கருவறையிலே கல்லறை
அமைத்து
தங்கியிருக்கும்...

ஜான்சன்

## அகதி வாழ்க்கை

யுத்தம் ஓய்ந்த பின்பும்
முள்வேலிக்குள் தொடரும்
நம் அகதி வாழ்க்கைக்கு
முடிவே இல்லையா?

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## பாவச்செயல்

பச்சிளம் பாலகியின்
பள்ளிப் படிப்பிற்கு
பாதியிலே முற்றுப்புள்ளி
வைத்த பாதகர்களே!
உங்கள் பாவச் செயலுக்கு
என்றோ ஒரு நாள்
பதில் சொல்லியே
தீர வேண்டும்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## மௌனம் காத்திடு

முடிந்த அவலத்தை
எண்ணிப் பயந்தாயா?
இல்லை- முள்வேலிதான்
தடை என நினைத்தாயோ?
கவலைவிடு உனக்கொரு
காலம் வரும் மௌனம் காத்திடு

அ.வசந்தன்
அல்வாய்

## தடுமாற்றம்

யுத்தத்திலிருந்து உயிர்தப்பி பிழைத்து
பணத்திற்கு ஆசைப்பட்டு கொலை
செய்யும் ஒரு கும்பலுக்கும்
காமவெறிக்கு உட்பட்டு கொலை
செய்யும் ஒரு கும்பலுக்கும்
இடையிலிருந்து மீண்டு வர இயலாமல்
இருக்கும் இக்குழந்தையின்
நிலைகண்டு இயற்கைகூட
தடுமாறுகின்றது

எஸ்.சுதாகினி
மணியந்தோட்டம்

## யார் உதவப் போகின்றார்?

பட்டுச் சிறகடித்து
வானில் வட்டமிட்டுப்
பண்ணிசைத்து மகிழ்ந்த
வண்ணப்பறவைகள் பல
மண்ணில் மாண்டு போக
கண்ணீரோடொரு பறவை
கம்பிவேலிக்குள் சிக்கி
வெளியேற முடியாது தவிக்கிறது
பாவம் யாருதவப் போகின்றார்

துரை, தென்மட்டுவில்

## போதும்

அழகே உன் பூப்போன்ற
முகத்தைக் கண்டு இந்த
உலகே கருணை கொள்ளலாம்
ஆனால் முட்கம்பிகள் மாத்திரம்
உனக்கு கருணை காட்டவில்லை
ஏன் அவற்றுக்கு இதயமில்லை
ஆனால் எம்மினத்தின்
வேதனை உலகறிய
உன் பார்வை மட்டும் போதும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –201



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 23.04.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுகதி புகையிரதம் தாமதம்; பயணிகள் அசௌகரியம்

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து பிற்பகல் 4.15 மணிக்கு புறப்பட்டு வவுனியாவை சென்றடையும் கடுகதி புகையிரதம் தாமதமாக வந்தடைவதால் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்குச் செல்லும் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த கடுகதி புகையிரதம் சில புகையிரத நிலையங்களில் மாத்திரமே நிறுத்தப்படுமெனவும் துரித கதியில் வவுனியாவை சென்றடையும் எனவும் புகையிரதம் புறப்பட முன்னர் அறிவுறுத்தப்படுகின்றது.

எனினும் கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரை கடுகதியில் வரும் புகையிரதம் அநுராதபுரத்தில் ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நிறுத்தி வைக்கப்படுகின்றது.

அதேபோல் மதவாச்சி புகையிரத நிலையத்திலும் 30 நிமிடங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கு 4 மணித்தியாலங்களில் வந்தடையும் புகையிரதம் அநுராதபுரத்திலிருந்து வவுனியாவிற்கு வந்தடைய 3 1/2 மணித்தியாலங்களை எடுக்கின்றது.

இந் நிலையில் இக்கடுகதி புகையிரதத்தில் பயணிக்கின்ற யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயணிகள் வவுனியாவை வந்தடைந்ததும் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்வதற்கு தனியார் பேருந்துகளோ இ.போ.ச. பேருந்துகளோ இல்லாமையால் நடுவீதியில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மூன்று மாவட்ட பயணிகளின் நிலையைக் கருத்திற்கொண்டு தேவையின்றி நீண்ட நேரம் புகையிரதம் நிறுத்தி வைக்கப்படுவதை தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-254)

# வவு.வில் மீண்டும் மினி சூறாவளி



(குருமன்காடு)

வவுனியாவில் நேற்றுமுன்தினமும் கடுங்காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது. பிற்பகல் 4 மணி தொடக்கம் 6 மணி வரை தொடர்ந்த கடும்காற்று, இடி மின்னலுடன் கூடிய இம் மழையினால் வவுனியா, குருமன்காடு காளிகோவில் வீதியில் மரங்கள் முறிந்து மின்சார கம்பிகள் அறுந்து விழுந்தன. இதனால் அப்பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டது.

அத்தோடு ஏற்பட்ட மினி சூறாவளியால் மகாகச்சிகொடியில் மூன்று பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (9-250)

# கிணற்றிலிருந்து வெடிக்காத ஆர்.பி.ஜி. ஷெல் மீட்பு



(மல்லாவி)

மாங்குளம் நீதிபுரம் பகுதியிலுள்ள கிணறொன்று துப்புரவு செய்யப்பட்ட வேளை வெடிக்காத நிலையில் காணப்பட்ட ஆர்.பி. ஜி. ஷெல் ஒன்று நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

இக்கிராமத்தைச் சேர்ந்த நபரொருவர் தனது வீட்டின் கிணற்றைதுப்புரவு செய்துள்ளார்.

இதன்போது கிணற்றில் வெடிக்காத நிலையில் உள்ள ஷெல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து, இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

அங்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஷெல்லினை செயலிழக்கச் செய்துள்ளனர். (9-15)

# பசளை வழங்க நடவடிக்கை எடுக்குக

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வீட்டுத் தோட்டங்களை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பசளைகளைவழங்ககமநல சேவைகள் நிலையம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வீட்டுத்தோட்ங்களை செய்து வருகின்றனர்.

எனினும் இவர்களுக்கான பசளைகள் வழங்கப்படுவதில்லை.

இதனால் தோட்டப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வீட்டுத்தோட்டங்களை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கான பசளைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (9-267)

# கண்டன போராட்டம்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் விநியோகிக்கப்படுவதை எதிர்த்தும் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை நீர் வழங்கல் தொடர்பான பிழையான கருத்துக்களை தெரிவிப்பதை கண்டித்தும் கரைச்சி பிரதேச சபை வளாகத்தில் இன்று காலை 9 மணி தொடக்கம் 4 மணி வரை கண்டனப்போராட்டமொன்று முன்னெடுக்கவுள்ளது.

இக்கண்டனப்போராட்டத்தில் அனைத்து விவசாயிகளையும் கலந்து கருத்துக்களை தெரிவிக்குமாறு இரணைமடு விவசாய சம்மேளன செயலாளர் சிவமோகன் அறிவித்துள்ளார். (9-254)



வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட புளியங்குளம் சமுர்த்தி வங்கிச் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வாழ்வின் எழுச்சி புத்தாண்டு சந்தை அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன், வவுனியா மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர் பி.வீரசிங்க ஆகியோர் இணைந்து நாடாவெட்டி சந்தையை ஆரம்பித்து வைப்பதையும் பொதுமக்கள் பொருட்களை கொள்வனவு செய்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:பூந்தோட்டச் செய்தியாளர்)




# நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

வன்னியூர் செந்தூரனின் உயிர் வலித்த கணம் எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (9)

# மீள்குடியேறி அல்லற்படும் கூராய் கிராம மக்கள்

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கூராய் கிராமத்தில தென்பகுதியை சேர்ந்த தனிநபர் ஒருவர் அரசியல்வாதிகளின் செல்வாக்குடன கிராம மக்களை அச்சுறுத்தி சட்ட விரோத மணல் மண் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக கிராம மக்கள் மனனார பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளாரிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கூராய் கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு மண் அகழ்விற்கான அனுமதிபத்திரம் உள்ள போதும் அதனை பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி குருணாகலைச் சேர்ந்த நபர் ஒருவர் கூராய் கிராமத்திற்குட்பட்ட ஆற்றுப்பகுதியில் கிராம மக்களை மண் அகழ விடாமல் தன்னிஷ்டப்படி அவர் மண்ணை அகழ்ந்து வருகின்றார். மண் அகழ்வினால் குறித்த கிராமத்தின் பாரம்பரிய தொழிலாகிய மேட்டுநில பயிர்ச்செய்கை நில நீர் உவர் நீராக மாறி வருகின்றது.

இதனால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்கு தள்ளப்படும் நிலை தோன்றியுள்ளது. குறித்த தென்பகுதியை சேர்ந்த நபர் கிராமத்தில் வசிக்கும் ஒருவருடைய சொந்த காணியில் மண்ணை பலவந்தமாக சேகரித்து வைப்பதனால் சொந்த காணிக்காரர் அவரது காணியினை பாவிகக முடியாமலுள்ளது. இது தொடர்பாக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலுப்பைக்கடவை பொலிஸ நிலையத்தில் முறையிட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இக் கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் பல்வேறு நடைமுறை சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். 2010 ஆம் ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் 30 குடும்பங்களை கொண்ட 115 பேர் மீள்குடியேற்றப்பட்டு பல்வேறு நடைமுறை சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இங்குள்ள 26 குடும்பங்களுக்குகடந்த 2011 ஆம் ஆண்டு வீட்டுத்திட்டத்தினை கோடைற் என்ற அரச சார்பற்ற நிறுவனம் வழங்கியுள்ள போதிலும் வீடுகள் சரியான முறையல் நிர்மாணித்து கொடுக்கவில்லை. வீடுகள் கட்டுமானப்பணிகள் பூர்த்தியடையாமல் காணப்படுகிறது.

கடந்த வடமாகாண தேர்தலின் போது குறித்த கிராமத்திற்கு சென்ற பல் கட்சிகளையும் சேர்ந்த வேட்பாளர்கள் வாக்குறுதிகளை இவரகளுக்கு கொடுத்திருந்தாலும் தேர்தலுக்கு பின் அப்பகுதிக்கு இன்று வரை சென்று பார்க்கவில்லை என இம் மககள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே கூராய் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-250)

# திருக்குறள் மாநாட்டில் சிவகுமாரன் உரை



(வவுனியா)

அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கமும் தமிழோசை சஞ்சிகையும் இணைந்து நடத்தும் அகில உலக திருக்குறள் மாநாட்டில் இலங்கையிலிருந்து தமிழருவி த.சிவகுமார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்.

அகில உலக திருக்குறள் மாநாடு எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் பங்குகொள்வதற்காக உலகெங்குமுள்ள பல தமிழறிஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கலந்து கொள்ளும் தமிழருவி த.சிவகுமார் மாநாட்டின் இரு தினங்களும் தனக்கு பிற்பட்ட இலக்கியங்களில் திருக்குறளின் செல்வாக்கு, இலங்கையில் திருக்குறளுக்கான இடமும் செல்நெறியும் என்ற தலைப்புக்களில் உரையாற்றவுள்ளார்.

அத்தோடு அவுஸ்திரேலியாவில் சிட்னி, மெல்பேர்ன் ஆகிய நகரங்களிலுள்ள இந்து ஆலயங்களில் ஆன்மீக சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளதுடன் அவுஸ்திரேலியா காரை நலன்புரிச் சங்கத்தினால் கௌரவிக்கப்படவுமுள்ளார்.

அவுஸ்திரேலியாவிலுள்ள யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலில் உலகளாவிய ரீதியில் யாழ். இந்துக் கல்லூரியின் செல்வாக்கு எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக இளைஞர் மாநாட்டில் ஐ.நா.தலைவர் பங்கேற்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரின் தலைவர் டாக்டர் ஜோன் வில்லியம் யெஷி எதிர் வரும் மே மாதத்தில் இலங்கையில் நடைபெறும் 2014ஆம் ஆண்டுக்கான உலக இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளப்போவதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சகல அங்கத்துவ நாடுகளுக்கும் அங்கத்துவம் வகிக்கும் சம சந்தர்ப்பம்வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

என்டிகுவா, பாபுடா ஆகிய நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதி டாக்டர் வில்லியம் யெஷி 2015ஆம் ஆண்டின் அபிவிருத்திப் பணிகளில் இளைஞர்கள் முக்கியத்தும் அளிக்க வேண்டும் என்ற கருத்தை முன்னெடுக்கும் ஒரு சர்வதேச இராஜதந்திரியாக விளங்குகிறார்.

இவருடன் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் இளைஞர் விவகாரங்களுக்கு பொறுப்பான விசேட தூதுவரான அஹமட் ஹல் ஹெனடாவியும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல்வேறு பிரிவுகளின் தலைவர்களும் இந்த உலக இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதாக உறுதியாக அறிவித்துள்ளார்கள்.

உலக இளைஞர் மாநாடு 2014 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி முதல் 9ஆம திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் உலகெங்கிலும் உள்ள 18இற்கும் 29 வயதுக்கும் உட்பட்ட ஆயிரத்து 500 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள். இவர்களில் 350 பேர் பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து வருகை தருவது குறிப்பிடத்தக்கது. (2)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனம் கடத்தல்

யாழ்.அத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் பூட்டப்பட்டு விடப்பட்ட ஹயஸ் ரக வான் ஒன்று கடத்தப்பட்டுள்ளது.

இவ் வான் கடத்தல் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது என யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வான் உரிமையாளரான ஆரியகுளம் பகுதியினைச் சேர்ந்த குணசேகரம் காந்தரூபன் என்பவர் யாழ்.பொலிஸ் நிலைய சிறுகுற்றத்தடுப்பு பிரிவினரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தனது ஹயஸ் ரக வானை அத்தியடிப்பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக நிறுத்தி விட்டு ஆலயத்திற்குள் சென்று திரும்புகையிலேயே வான் கடத்தப்பட்டுள்ளது.

வான் அருகே இரண்டு நபர்கள் நின்றிருந்ததாகவும் அவர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும் என, ஆலயத்தின் முன்னால் கச்சான் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒருவர் தன்னிடம் கூறியதாக அதன் உரிமையாளர் அதை பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-4)

# ஜே.வி.பி. பயங்கரவாதத்தில் ஒருபோதும் ஈடுபடவில்லை

## சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டு

ஜே.வி.பி ஒருபோதும் பயங்கரவாதத்தில் ஈடுபடவில்லை என அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1969 ஆம் ஆண்டு ஜே.வி.பி ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து அரசியல் அமைப்பாகவே செயற்பட்டது.

நாங்கள் பயங்கரவாதத்தில் ஈடுபடவில்லை. அன்று ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் ஜே.வி.பியை தடைசெய்தது.

அதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுத்தோம். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆருக்கு கடிதம் மூலம் அறிவித்தோம்.

சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடம் முறையிட்டோம். தடையை மீறி நாங்கள் அரசியலில் ஈடுபட்டு வந்தோம்.

ஜே.வி.பியை பயங்கரவாத அமைப்பாக எப்போதும் பெயரிடப்படவில்லை. இனிமேலும் அப்படி பெயரிடப்பட போவதுமில்லை.

எம்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. ஆனால் அவற்றுக்கு பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை.

இனவாத அமைப்புகள் போன்று ஜே.வி.பி இனவாத அணியில் சேர்ந்து விடவும் இல்லை என்றார்.(2)



காரைநகர் தோப்புக்காடு பிரதேசத்திற்கான மின்னிணைப்பை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றபோது...

(படம்: மானிப்பாய் செய்தியாளர்)


# பிரிவுத்துயர் பகிர்வு



### மாணிக்கம் மணிவாசகம்

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் யோகர்சுவாமி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மணிவாசகம் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### பொன்னையா வேலாயுதபிள்ளை

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா வேலாயுதபிள்ளை கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு Glendale Funeral Home & Cemetery, 1810 Albion Road, Etobicoke, ON M9W 5T1, Canadaஎன்னும் முகவரியில் நடைபெற்றுபின்னர் பூதவுடல் தகனம் செய்யப் படும்.



### திருமதி எசேக்கியேல் எலிசபெத்தம்மா

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எசேக்கியேல் எலிசபெத்தம்மா கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் யாகப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் இராசலிங்கம்

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் 89, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராசலிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சிவராசா இராசம்மா

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிகுளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா இராசம்மா கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உக்குளாங்குளத்தில் உள்ள அவரது மருமகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### வாமனா ஜெயகாந்தன்

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாமனா ஜெயகாந்தன் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 8 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி வேலாயுதபிள்ளை திலகவதி

கொழும்பு, தெஹிவளையில் வசித்து வந்த வேலாயுதபிள்ளை திலகவதி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) கடந்த 16 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# நாட்டில் வாழும் அனைவருக்கும் சொத்துக்கள் சொந்தமானது

## ஜே.வி.பி.உறுப்பினர் லால்காந்த கூறுகின்றார்

நாட்டில் உள்ள நிலங்கள், சொத்துக்கள் அனைத்து நாட்டில் வாழும் சகலருக்கும் சொந்தமானது என ஜே.வி.பியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர், மலாயர் என யாராக இருந்தாலும் அனைவருக்கும் இவை சொந்தமானவை.

குடியிருக்கவும் காணிகள் வேணடும். உற்பத்தி நடவடிக்கைகளுககும் காணிகள் வேண்டும்.

இதனை அரசாங்கமே நிறைவேற்ற வேண்டும்.

காணியற்ற மக்களுக்கு காணியை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அரசாங்கம் இதனை நிறைவேற்ற வேண்டும்.

சரியான முறையில் காணிகளை மக்களுக்கு வழங்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

[illegible] றது என்றால் அதற்கு அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டுமே அன்றி அப்பாவி முஸ்லிம் மக்கள் அல்ல.

அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்காது முஸ்லிம் மக்களுக்கோ வேறு நபர்களுக்கோ எதிர்ப்பு தெரிவிப்பதில் பிரயோசனமில்லை.

பாதுகாக்கப்பட வேண்டிய நிலங்களை பாதுகாத்து கொள்வது போல் காணியற்றவர்களுக்கும் காணிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் லால் காந்த கூறியுள்ளார். (2)

# மஹோற்சவம்

சுன்னாகம் கதிரமலை சிவன் கோயில் மகோற்சவம் கடந்த 16 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடை பெறும்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெற்று விசேட பூசைகள்இடம்பெறும்.

அன்றைய தினம் மாலை திருக்கல்யாண உற்சவம் நடைபெறும். (2)

# க.பொ.த (சா.த) பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா/த) பரீட்சை -2013 பெறு பேறுகள் பரீட்சை திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப் பரீட்சையில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்றவர்களின் பெயர் விபரங்களை பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு,

**வடமராட்சி கிழக்கு, யா/அம்மன் அ.மி.த.க. பாடசாலை**

இ.மஞ்சிகா-6ஏ2பிசி, தி.நிசாந்தன்-5ஏ2பிசிஎஸ், த.தயாரூபன்-3ஏ3பி2சி, க.சுதனா-3ஏபி4சிஎஸ், தி.சரூபிகா-3ஏ2பி3சிஎஸ்.

**யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்**

க.நிஷானா-7ஏபிசி, ம.சியாந்தினி-6ஏ2பிசி, சி.சுபாசினி-5ஏ3பிஎஸ், ந.நிருஜன்- 4ஏபி2சிஎஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்கொரியாவின் ஜெஜு தீவு அருகே சுற்றுலா சென்ற பயணிகள் கப்பல் கடந்த 16 ஆம் திகதி மூழ்கியது. அதில் சென்ற 477 பேரில் 300 இற்கும் மேற்பட்டோர் பாடசாலை மாணவர்கள். கப்பல் சாயத் தொடங்கிய 2 மணி நேரத்துக்குள் தலைகீழாக கவிழ்ந்து விட்டது. மீட்புக் குழுவினரால் 164 பேரை மட்டுமே மீட்க முடிந்தது. கப்பலுக்குள் இருக்கும் ஏர் பாக்கெட் எனப்படும் தண்ணீர் புகாத அறைகளில் சிலர் சிக்கி உயிருடன் இருக்க வாய்ப்புள்ளது என்ற நம்பிக்கையில் மீட்பு பணி தொடர்ந்து நடைபெறுகின்றது. கடலுக்கு வெளியே நீட்டிக்கொண்டிருந்த கப்பலின் அடிப்பகுதி முழுவதுமாக மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் அந்த இடத்தை எளிதில் அடையாளம் காண இராட்சத பலூன் மிதவைகளை மிதக்க விட்டுள்ளனர். மீட்பு குழுவினர் (உட்பட) கடலில் மேற்பரப்பில் தெரியும் கப்பலின் அடிப்பகுதியினை படத்தில் காணலாம்.

# கிழக்கு உக்ரைன் போராளிகள் ஜெனீவா ஒப்பந்தத்தை ஏற்க மறுப்பு

(கீவ்)

ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது தொடர்பான பிரச்சினையில் உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் பதவி விலக அதனைத் தொடர்ந்து அந்நாட்டின் ஒரு பகுதியான கிரிமியா ரஷ்யாவுடன் தன்னை இணைத்துக் கொண்டது.

இதனை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் எதிர்த்தன. எனினும், தற்போது கிழக்கு உக்ரைனின் சில பகுதிகளையும் ஆக்கிரமித்துள்ள போராளிகள் ரஷ்யாவுடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி வருகின்றனர்.

நிலைமை மோசமாவதைத் தொடர்ந்து





நேற்று முன்தினம் ஜெனீவாவில் கூடிய ஐரோப்பிய ஒன்றியம், உக்ரைன், ரஷ்யா மற்றும் அமெரிக்க வெளியுறவுத் தலைவர்கள் மக்களின் பாதுகாப்பிற்கும், போராளிகளை வெளியேற்றுவதற்கும் ஒருங்கிணைந்த ஒரு புதிய ஒப்பந்தத்தை மேற்கொண்டனர்.

அதன்படி கிழக்கு உக்ரைனை ஆக்கிரமித்துள்ள போராளிகள் அலுவலகங்களை அரசு வசம் ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டும் என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனால், அதனை ஏற்க மறுத்துள்ள போராளிகள் அமைப்பு சட்டவிரோதமாக அமைந்துள்ள உக்ரைன் அரசு பாராளுமன்றத்தைக் காலி செய்தால்தான் தாங்களும் வெளியேறுவோம் என்று குறிப்பிட்டுள்ளது. டோநெட்ஸ்க் மக்கள் குடியரசு என்று தங்களைப் பிரகடனப்படுத்திக் கொண்ட இந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் அலெக்சாண்டர் நெஸ்டிலோவ் இதனைத் தெரிவித்துள்ளார். குறைந்தது ஒன்பது நகரங்களிலாவது இவர்கள் அரசு கட்டடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலைமையில் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுகின்றது.

தலைநகர் கீவின் மைதான சதுக்கத்தில் முகாமிட்டுள்ள ஐரோப்பிய ஆதரவாளர்கள் வெளியேறினால் தாங்களும் வெளியேறுவதாக இந்த அமைப்பின் மற்றொரு தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

# 2050 ஆம் ஆண்டளவில் உலகளவில் தீவிர உணவுப் பஞ்சம் ஏற்படும்

## அதிர்ச்சித் தகவல்

(வோஷிங்டன்)

**இன்னும் 40 ஆண்டுகளில் உலகளவில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு மக்களுக்கும், அரசுகளுக்கும் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடும் என்று சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க ஏஜென்சி ஒன்றில் பணிபுரியும் முன்னணி விஞ்ஞானி ஒருவர் எச்சரித்துள்ளார்.**

நிலம், நீர் மற்றும் ஆற்றல் குறைபாடால் முதன்முறையாக உலகளவில் உணவு உற்பத்தி கட்டுப்படுத்தப்படவுள்ளது என்று உணவு பாதுகாப்பு அமைப்பின் மூத்த அறிவியல் ஆலோசகரான பிரெட் டேவிஸ் குறிப்பிட்டார்.


தற்போது காணப்படும் எரிசக்தி பிரச்சினைகளைப்போல் 2050 இல் தோன்றும் உணவுப் பிரச்சினை அரசியலை ஸ்திரமற்றதாக ஆக்கக்கூடும் என்று வோஷிங்டனில் இந்த வாரம் நடைபெற்ற வட அமெரிக்க விவசாய பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் டேவிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்த நூற்றாண்டின் மத்திக்குள் மக்கள் தொகை 30 சதவிகிதம் அதிகரித்து 9 பில்லியனாக மாறும் என்று இவர் கணித்துள்ளார்.

அதன்படி வரும் உணவுத் தேவைகளை சமாளிக்க 70 சதவிகித உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டும்.

மேலும், விவசாய உற்பத்தி, உணவு பாதுகாப்பு, சுற்றுச்சூழல், சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் உடற்பருமன் போன்றவை ஒன்றுடன் ஒன்று இணைந்த விடயங்கள் ஆகும். ஏற்கனவே உலகளவில் எட்டில் ஒருவர் ஊட்டச்சத்து குறைபாடால் அவதிப்பட்டு வருகின்றார். இவர்களில் பெரும்பான்மையான 75 சதவிகிதத்தினர் நடுத்தர வருவாய் நாடுகளான சீனா, இந்தியா, பிரேசில், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால், உணவு உற்பத்திக்கு கிடைக்கும தொழில்நுட்ப, இயற்கை வளங்களின் கட்டுப்பாடுகள் உலகளாவிய உணவு உற்பத்தியையும் கட்டுப்படுத்தும்.

இதற்கான ஆய்வுகளில் செலவி டப்படும்



தொகையும் குறைந்துள்ளது. மேலும் கண்டறியப்படும் புதிய தொழில்நுட்பங்களும் எளிய, சிறு விவசாயிகளைச் சென்றடைவதில்லை.

இந்த முறைகள் மாற்றப்பட்டு உணவுத் தேவைகளை சமாளிக்கும் புதிய நுட்பங்களும் கண்டறியப்படுதல் வேண்டும் என்று டேவிஸ் கூறியுள்ளார்.

# உத்தரப் பிரதேசத்தில் புழுதிப் புயல்; 27 பேர் உயிரிழப்பு-சொத்துக்கள் சேதம்



(லக்னோ)

உத்தரப் பிரதேசத்தில் வீசிய பயங்கர புழுதி புயலில் சிக்கி 27 பேர் பலியானார்கள். உத்தரப் பிரதேச மாநிலத்தில் மழைக்குப் பின்னர் புழுதியுடன் கூடிய பயங்கர சூறாவளி காற்று வீசியது. இது மரங்களை வேரோடு சாய்த்தன.

மின்கம்பங்கள் மற்றும் குடிசைகளும் சாய்ந்தன. இதனால் பலத்த சேதம் ஏற்பட்டது. இந்தச் சூறாவளியால் பருக்காபாத் என்ற இடத்தில் 10 பேரும் பாராபங்கி என்ற இடத்தில் 2 குழந்தைகள் உட்பட 6 பேரும் லக்னோ மற்றும் சிடாப்பூரில் தலா 3 பேரும் கர்டாய் மற்றும் ஜலூன் என்ற இடத்தில் தலா 2 பேரும் சைபாத்தில் ஒருவர் உட்பட 27 பேர் பலியாகியுள்ளனர்.

ராஜஸ்தான் பகுதியில் ஏற்பட்ட வானிலை மாற்றத்தால் மழையும் புழுதிச் சூறாவளியும் ஏற்பட்டதாக வானிலை அதிகாரிகள் கூறினர்.

# மெக்சிக்கோவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோவின் குரேரோ மாநிலத்தில் உள்ள தேக்பான்பகுதியை மையமாக கொண்டு நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 7.0 ஆக பதிவாகியதாக தேசிய நிலநடுக்க ஆய்வியல் மையம் தெரிவித்துள்ளது.

மேலும் அதிகபட்சமாக 7.5 ரிக்டர் அளவு வரை ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையமும் தெரிவித்து உள்ளது. இந்த நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியது மட்டுமல்லாது ஜன்னல்களும் உடைந்து சிதறின. எனவே, மக்கள் உடனடியாக கட்டடங்களை விட்டு தெருவுக்கு ஓடிவந்தனர்.

இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் ஏதும் இதுவரை வெளியிடப்படவில்லை. இதுகுறித்து மெக்சிகோ நகர மேயர் தனது டுவிட்டர் வலைத் தளத்தில் "தலைநகர் முழுவதும் ஏற்பட்டுள்ள சேதங்களை சோதனை செய்து கொண்டிருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.

# பாக். நூலகத்திற்கு பின்லேடனின் பெயர்

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள செம்மசூதியில் பிரார்த்தனை குருவாக மௌலானா அப்துல் அசிஸ் என்பவர் பணியாற்றி வருகின்றார்.

போராளிகள் பதுங்குமிடமாக இருந்த இந்த மசூதி கடந்த 2007 ஆம் ஆண்டில் இராணுவத்தினரின தாக்குதலுக்கு உள்ளானது. அப்போது பன்னிரண்டுக்கும் மேற்பட்டோர் அங்கு கொல்லப்பட்டதால் நாடு முழுவதும் போராளிகளின் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இந்த மசூதி மூலம் இரண்டு பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. ஒன்றில் ஆண்களும், மற்றொன்றில் பெண்களும் கல்வி பயின்று வருகின்றனர். 15 ஆயிரம் பெண்கள் பயிலும் பாடசாலையில் பெண் ஆசிரியைகளே பணிபுரிந்து வருகின்றனர். இதனையும் சர்ச்சைக்குரிய மௌலானா அப்துல் அசிசே நிர்வகித்து வருகின்றார்.

இவர் பெண்கள் பள்ளியில் அமைந்துள்ள நூலகத்திற்கு கடந்த 2011 ஆம் ஆண்டில் அமெரிக்க இராணுவத்தால் கொல்லப்பட்ட மறைந்த அல்கொய்தா இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடனின் பெயரை வைத்துள்ளார்.

இந்தத் தகவலை வெளியிட்ட அவரது தகவல் தொடர்பாளரான டெசின் உல்லா இஸ்லாமிய மதத்திற்காக உயிரை விட்ட ஒரு தியாகியாக ஒசாமாவை அசிஸ் கருதுகின்றார். அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாகவே இந்த நூலகத்திற்கு அவரது பெயரை வைத்துள்ளார் என்று தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை, சகிப்புத்தன்மை, துணிவு, உறுதி ஆகிய நான்கு ஆயுதங்களால் நாம் விரும் பிய எதனையும் சாதித்து விடலாம். – தமிழ்வாணன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பேச்சுவார்த்தைக்கான பாடுகள் இருதரப்பிலும் மந்தநிலை

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற ஜெனிவாத் தீர்மானங்களுக்கு அப்பால், இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அரச தரப்பும் தமிழர் தரப்பும் பேச்சுவார்த்தை நடத்துவது தவிர்க்க முடியாததே.

அதேநேரம் முன்னைய காலங்களிலும் அரசும் தமிழ்த்தரப்பும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தாலும் அந்தப்பேச்சுக்கள் எந்தவிதமான முன்னேற்றங்களையும் தரவில்லை.

அரசும் தமிழ்த் தரப்பும் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியபோதிலும் அதில் இணக்கப்பாடுகள் எட்டப்படவில்லை எனும் போது மாற்றுவழி பற்றிய சிந்தனை அவசியமாகின்றது.

இந்த மாற்றுவழி என்பது அரசுடன் பேசுவது என்பதை மாற்றுவதல்ல. மாறாக அரசுடன் பேசும் போது வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்தத்தை ஏற்படுத்தி அந்த நாட்டின் மத்தியஸ்தப் பங்களிப்புடன் பேசுவதே ஒரேவழியாகும்.

வெளிநாட்டு மத்தியஸ்தத்தை ஏற்காதவர்கள், இனப்பிரச்சினை தீரவேண்டும் – தீர்க்க வேண்டும் என்பதை விரும்பாதவர்கள் என்றே கூறமுடியும்.

இலங்கையில் மிக நீண்டகாலமாகத் தொடர்கின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற மனநிலை இருந்தால், வெளிநாட்டு மத்தியஸ்தத்தை எவரும் மறுக்கமாட்டார்கள்.

ஆனால், இலங்கை அரசைப் பொறுத்தவரை வெளிநாட்டு மத்தியஸ்தம் என்பது வெறுப்புக்குரியதாகவே இருக்கிறது.

மாறாக தெரிவுக்குழுவுக்கு வாருங்கள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுவதைத்தவிர, வெளிநாட்டு மத்தியஸ்தம் பற்றிச் சிந்திக்கலாம் என்ற நினைப்புக்கள் அரசிடம் அறவே இல்லை.

அதேநேரம் தமிழர்களிடம் இருக்கக் கூடிய கடந்த கால அனுபவங்கள் தெரிவுக்குழுவில் நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் இல்லை.

ஆக, அரசு – தமிழர் தரப்பு என்ற இரு சாரார் குறித்து ஒட்டுமொத்தமாக நோக்கினால் கடந்த காலங்களில் பேச்சுவார்த்தை என்ற பேரில் தமிழர்களை ஏமாற்றியதன் காரணமாக வெளிநாட்டு மத்தியஸ்தம் மூலமாகவே இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற யதார்த்தத்தை அரச தரப்பினர் புரிந்துகொள்வது அவசியம்.

இதேவேளை வெளிநாட்டு மத்தியஸ்தம் என்பதை அரசு ஏற்கப் போவதில்லை என்ற உண்மையை உணர்ந்துகொண்டு அதற்கேற்றவாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது இராஜதந்திர வியூகங்களை அமைக்க வேண்டும்.

ஆனால் கூட்டமைப்பின் இராஜதந்திர வியூகங்கள் கூட்டமைப்பிற்குள் இருக்கின்றவர்களை வெட்டிவிடுவது எப்படி என்பதாக இருக்கின்றதே தவிர, வெளிநாட்டு மத்தியஸ்தத்தை வலியுறுத்துவதாக இல்லை.

இப்போதுகூட கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தென்னாபிரிக்கா சென்றுள்ளனர். தென்னாபிரிக்காவுக்குச் சென்றவர்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் தமிழ் மக்கள் மத்தியில் பரவியுள்ளது.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிநாட்டுப்பயணங்கள் கூட, சர்ச்சைக்குரியதாக இருக்கும் போது அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் பூரணமாகப் பாடுபடுவர் என்பது சந்தேகமே?

# பாதசாரிக்கடவையில் வாகன விபத்து

## குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கனகபுரம் கிளிநொச்சியில் இடம்பெற்ற பேருந்து – துவிச்சக்கரவண்டி விபத்தில் குடும்பஸ்தர்ஒருவர்படுகாயமடைந்துள்ளார்.

இவ் விபத்து நேற்று மதியம் கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன் வீதியில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஏ–9 வீதி கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மஞ்சள் நிறபாதசாரிகடவையினால் பிரஸ்தாப நபர் துவிச்சக்கரவண்டியை உருட்டிக் கொண்டுநடந்துசென்றுள்ளார். அவ்வேளை யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்கு சென்று கொண்டிருந்த இப் பேருந்து துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில்கிளிநொச்சிபள்ளங்கண்டியைச் சேர்ந்த பொ.பொன்னையா (வயது–64) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸார் குறித்த பேருந்தினை தடுத்து வைத்ததுடன் பேருந்து சாரதியுடன்விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (செ–9,259)

# இருதய நோய்

(கொழும்பு)

இலங்கையில் இருதய நோய்களினால் நாள்தோறும் 150 பேர் உயிரிழக்கின்றனர். நாள்தோறும் இருதய நோய்களினால் 125 முதல் 150 பேர் வரையில் உயிரிழப்பதாக இருதய நோய்தொடர்பான நிபுணத்துவ மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த மரணங்களை தடுப்பதற்கு விசேட தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

புதிய தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்துவதென்பது குறித்து மருத்துவர்களுக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

இந்தியா, பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த நிபுணத்துவ மருத்துவர்களின் ஒத்துழைப்புடன் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ–11)

# கைதியை தாக்கிய அதிகாரி இடைநிறுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலை கைதி ஒருவரினை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் சிறைச்சாலை அதிகாரியொருவர் பணியிடை நிறுத்தப்பட்டார்.

யாழ்.சிறைச்சாலையில் அதிகாரியாக கடமையாற்றிய ஒருவரே மேற்படி குற்றச்சாட்டில் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கைதி ஒருவருக்கு கைகளில் விலங்கு மாட்டி குறித்த சிறைச்சாலை அதிகாரி தாக்கியுள்ளார்.

இதனால் உடல் நலக்குறையுற்ற குறித்த கைதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து கைதியை தாக்கிய அதிகாரி மீது மேல் நிலை அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் பணியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக யாழ்.சிறைச்சாலை உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (2–4)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)


இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை விழா எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திருமதி மா.அனந்தலெட்சுமி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர் சண்முகநாதன் வேலழகன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் 'கண்டேன் அவர் திருப்பாதம்' எனும் பொருளில் யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி ஆசிரியர் சேனா பாலச்சந்திரன் சிறப்புச் சொற்பொழிவொன்றை ஆற்றுவார்.

இதன்போது ஆனைக்கோட்டை கரைபிரான் ஆதி விநாயகர் தேவஸ்தான அறநெறிப்பாடசாலை, சாந்தை விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### கண்டேன்

எண்வகை யொருவனை யேந்திழை பாகனை
மண்முதற் பூதங்கள் வகுத்த பிரானை
கண்ணுக் குக்கண் ணாய கடவுளை
மன்னு மிலங்கை மாநகர் கண்டேன்
தித்திக்கு மமுதினைத் தெளிந்த தேறலை
எத்திக்கு மாகிய என்னா ருயிரினை
பக்திக்கு மடியவர் பாட்டிற் குகந்தானை
முத்துக்கள் சேர்முது இலங்கையிற் கண்டேன்

# நீதி அமைதியாக வெற்றிபெறும் என்பதை இயேசுவின் உயிர்ப்பு கூறுகின்றது

இன்று உயிர்ப்பு பெருவிழா. இயேசுவின் உயிர்தெழுதலை ஈஸ்டர் என உலக கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். உயிர்த்தெழுதலை அன்றும், இன்றும் பல இறையியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என்பது நாமறிந்ததே. இயேசுவின் உயிர்த்தெழுதலை தடுப்பதற்கே அவரது உடல் கல்லறை யில் வைக்கப்பட்டு காவலும் செய்யப்பட்டது. ஆனால் கல்லறை காலியாக இயேசு உயிர்பெற்றார்.


கத்தோலிக்கர்கள் கொண்டாடுகின்ற திருவிழாக்களிலெல்லாம் தலைசிறந்த விழா இயேசுவின் இந்த உயிர்ப்புப் பெருவிழாவேயாகும். ஏனெனில் அது கத்தோ லிக்க விசுவாசத்தின் பெருவிழா. கத் தோலிக்க வாழ்வுக்கு அடித்தளமாக இருந்து அர்த்தம் தருவது இயேசுவின்

## பரமபிதா காட்டிய பாதை

உயிர்ப்பே. இயேசு உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும் என்று புனித பவுல் பைபிளில் குறிப்பிடுகின்றார். சாவின் சக்திகள் இறைவன் முன் பலமற்றவை என்ற செயதியை இயேசுவின் உயிர்ப்பு பறைசாற்றிக் கொண்டேயிருக்கிறது.

அன்று யூதாசின் துரோகத்தனத்தின் கொடூரத்தினால் நம்பியிருந்தவர்கள் நடுத்தெருவில் விடப்பட்டது போன்ற நிலையில் அன்பான சீடர்களும் ஓடியொளித்துக் கொண்ட சூழல். இந் நிலையை மாற்றி அவர்களுக்கு நம்பிக்கையூட்ட உயிர்த்த இயேசு தம்மை அவர்களுக்குக் காண்பிக்க வேண்டிய நிலை. அது மாத்திரமல்ல. இயேசுவைச் சிலுவைக்கு ஒப்புக் கொடுத்து சிலுவையில் அறைந்து கல்லறையில் அடக்கமும் செய்து கல்லறைக்கு முத்திரையிடப்பட்டு காவலாளிகள் காத்து நின்ற சூழல். மதத் தலைவர்கள், மூப்பர்கள், அரசியல் அடிவருடிகள், குதூகலித்து நின்ற நேரம். இதற்கெல்லாம் காரணம் இயேசுவைக் கொன்று விட்டோம் என்ற மமதை. இம் மமதை மூன்றே மூன்று நாட்கள் மட்டும் நிலைத்திருந்தது. மரணத்தின் ஓலம். மூன்றே மூன்று நாட்கள் தான். மூன்றாம் நாள் ஆண்டவர் உயிர்தெழுந்ததனால் இவர்களும் அடங்கிப் போனார்கள். அநீதியும் அக்கிரமமும் அதிக நாட்கள் நீடிக்காது. அநீதி செய்பவர்கள் குதூகலிப்பார்கள். ஆனால் நீதி அமைதியாக வெற்றி பெறும். இது உலகம் தந்த பாடம். மாத்திரமல்ல இதுவே கிறிஸ்தவ உண்மையும் கூட. நீதியின் இறைவன் மனித மனங்களில் உயிர்ப்பை, நம்பிக்கையை கொடுக்கத் தொடங்கிய நாளே உயிர்ப்பின் நாள்.

இயேசு உண்மையாகவே உயிர்த்து விட்டாரா? இயேசுவைப் பற்றி முழுமையாய் அறிந்திராதவர்கள் மனதில் எழும்கேள்வி இதுதான்.



இயேசு உயிர்த்ததற்கான சாட்சியம் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட சட்டப் பேராசிரியர்கள் பலர் பைபிளை ஆழமாகப் படித்து, ஆராய்ந்து, ஆழ்ந்து சிந்தித்த பின் பைபிளில் மறுகக முடியாத ஆதாரமாக உயிருள்ள சாட்சிகள் உண்டு என்று கண்டறிந்து உயிர்ப்பு குறித்த ஐயத்திலிருந்து விடுபட்டதுடன் அதனைப் பகிரங்கப்படுத்தியுமிருந்தனர்.

மேலும் இயேசு உயிர்க்கவில்லை என்றால் அவருடன் வாழ்ந்த சீடர்கள் அந்த உண்மையை உறுதிப்படுத்தியிருக்க முடியாது! ஏனென்றால்

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

அந்த உண்மையை உலகறியச் சாடசியம் கூறியதற்காக அவர்கள் அடித்து நொறுக்கப்பட்டார்கள். மறுத்துக் கூறுமாறு சிறையில் அடைக்கப் படடார்களா. உண்மைக்குச் சான்று பகர உயிரையும் கொடுத்தார்கள்" – உயிர்ப்புக்கு உயிருள்ள சாட்சிகள் அவர்களே என வரலாறு கூறுகிறது. இன்று நாமும இயேசுவின்சாடசிகளாகியிருக்கிறோமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் பிரதேச இ.கழக வி. விழா; இணுவில் கலையொளி முதலிடம்







உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் அனைத்துப் பிரிவுகளிலும் இணுவில் கலையொளி இளைஞர் கழகம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.

உடுவில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளின் இறுதி நாள்நிகழ்வும்பரிசில்வழங்கலும்அண்மையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெற்றது.

ஆண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளின் மொத்தப்புள்ளிகளின்படி இணுவில் கலையொளி இளைஞர் கழகம் 99 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. சுன்னாகம் ஸ்கந்தா இளைஞர் கழகம் 28 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தைப் பிடித்தது.

பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளின் மொத்தப்புள்ளிகளின்படி கலையொளி இளைஞர் கழகம் 113 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. சுன்னாகம் காந்தீய மன்றம் இளைஞர் கழகம் 53 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தைப் பிடித்தது.

குழுவிளையாட்டுப்பேர்ட்டிகளின்படி இணுவில் கலையொளி இளைஞர் கழகம் 45 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றது. சுன்னாகம் காந்தீயமன்றம் இளைஞர் கழகம் 29 புள்ளிகளைப் பெற்று 2ஆம் இடத்தைப் பிடித்தது.

இவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களை வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான த. சித்தார்த்தன், பா.கஜதீபன் ஆகியோர் வழங்கி வைத்தனர். (சு-23)

# பெண்களுக்கான கிரிக்கெட்; சுழிபுரம் விக்டோரியா சம்பியன்



இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்திற்குட்பட்ட சுழிபுரம் விக்டோரியா இளைஞர் கழகம் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிகளிலும் வெற்றி பெற்றிருந்தது.

இவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வானது அண்மையில் இடம் பெற்ற சங்கானைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2014ஆம் ஆண்டிற்கான விளையாட்டு நிகழ்வுகளின் இறுதி நாளன்று வழங்கப்பட்டது. இவர்களுக்கான பரிசில்களை நிகழ்வின் பிரதம விருந்தினர் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்தார். (சு-23)

# சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் வெற்றி

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கெதிரான நட்புறவு கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணி வெற்றி பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணிக்கும் சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணிக்குமிடையிலான நட்புறவுக் கிரிக்கெட் போட்டியொன்று அண்மையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணி முதலில் களத்தடுப்பாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடிய சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் அணி 30 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 242 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் விஷ்ணுபிரகாஷ் 93, நிரோஜன் 34, கபிலன் 30, விஜிதரன் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு 243 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணியினர் 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களை மாத்திரமே பெற்று போட்டியில் தோல்வியைத் தழுவினர்.

இதில் கணேஷ் 56 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் சுன்னாகம் ஸ்கந்தாஸ்ரார் அணி சார்பில் நிரேஷன் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். (சு-23)

# காரைநகர் பிரதேச இளைஞர் கழக ஆண்களுக்கான எல்லே போட்டி

## அம்பாள் இளைஞர் சம்பியன்



காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப்போட்டிகள் இடம்பெற்றுவருகின்றன.

இதன் ஒரு அங்கமாக ஆண்களுக்கான எல்லே போட்டிகள் இடம்பெற்றன. இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் அம்பாள் இளைஞர் கழக அணியும் ஒ ளிச்சுடர் இளைஞர் கழக அணியும் மோதியது.

இப்போட்டியில் 32:23 என்னும் புள்ளிகள் அடிப்படையில் அம்பாள் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (சு-23)

# முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாவை- கலட்டி, தெல்லிப்பழை உதய தாரகை விளையாட்டுக்கழகம் மற்றும் கணேசா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கழக மைதானத்தில் உதயதாரகை விளையாட்டுக்கழக தலைவர் தே.பகிதரராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யா/திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியர் வ.தயாநிதி, சிறப்பு விருந்தினர்களாக கிளி/விநாசியோடை அ.த.க. பாடசாலை உதவி அதிபர் பா.சிவகுமார், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சி.றமணராசா, கிராம முன்னேற்ற சங்கத் தலைவர் மு.ஐயாத்துரை, காந்திஜி சனசமூக நிலையத் தலைவர் பொ.பிரபாகரன், பராசக்தி அம்மன் ஆலய தர்மகர்த்தா சி.கதிரவேலு, தெல்லிப்பழை முன்பள்ளி இணைப்பாளர் திருமதி செல்வரஞ்சனா, மூத்த கழக உறுப்பினர் ப.பரராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2)

# பொம்மர்சுக்கு வெற்றி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. அதில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்க்கணக்கில் வெற்றி பெற்றது. (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்...

களை வெளியிட்டதன் மூலம் இந்தியா வில் பெரும் சர்ச்சைகளில் சிக்கியிருந்தார.

சிங்களவர்கள், வட இந்திய வம்சா வளியினர் என காரியவசம் ஒருமுறை கூறியிருந்தார்.

இது தமிழகத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியதுடன், தமிழர்களுக்கு எதி ரான வட இந்தியர்களை தூண்டுவதாக தமிழக அரசியல் கட்சிகள் குற்றம் சுமத்தி யிருந்தன. அத்துடன் அவர், தமிழக அர சியல் தலைவர்களையும் விமர்சித்து வந்துள்ளார்.

பிரசாத் காரியவசம் அமெரிக்கா வுக்கான தூதுவராக நியமிக்கப்பட் டுள்ள நிலையில், இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக சுதர்சன சென விரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கண்டி பேராதனை பல்கலைக் கழகத்தின் தொல்லியல்துறைத் தலை வராக பதவி வகித்து வந்த செனவிரத்ன, இலங்கையின் பாரம்பரியச் சின்னங் களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார்.

அத்துறையில் அவர் சிறப்பாக செயல பட்டதன் காரணமாக, அமெரிகக தொல் லியல் கழகத்தின் 2013-ஆம் ஆண்டுக் கான பாரம்பரிய முகாமைத்துவ விருதைப் பெற்றுள்ளார்.

தற்போது அயல்நாட்டுப் பணிக்கு அரசால் நியமிக்கப்பட்டுள்ள நிலை யில், இலங்கை நாடாளுமன்றத்தின உயர் பதவி நியமனக் குழுவின் அனு மதி கிடைத்தால்தான், அவர் இந்தப் பதவியை ஏற்பார் என்பது குறிபபிடத் தக்கது. (செ-11)

## குடும்பப் பெண்...

ணைக்காக கொழும்பு பயங்கரவாத புல னாய்வுப் பிரிவுக்கு கொண்டு செல்லப் படவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி யுள்ளது.

இதேவேளை. குறித்த பெண்ணின் மகன் ஒருவர் இறுதி யுத்தத்தின் போது காணாமல் போயிருந்தமையும் மற்று மொரு மகன் ஐரோப்பிய நாடொன்றில் வசித்து வரு கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (செ-250)

## போரின்...

மொழியாக உள்ள சிங்களத்தில் மாத்திரம் உள்ளது. தமிழுக்கு அதில் இடமில்லை. இதனைத்தவிர போரி னால் பாதிக்கப்பட்ட வன்னியில் அபி விருத்தி திட்டங்கள் என்ற பெயரில் பல நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் நிர்மாணங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே சிங்கள மக்களை பொறுத தவரையில் அங்கு போர்க்குற்றச் சாட்டுக்களுக்கான ஏதுக்களை காணக கூடிய சந்தர்ப்பம் இல்லை என்று ஜெரிட் கேட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

வடக்குகிழக்கில் போரின் தாக் கங்கள் இன்னமும் அன்றாட வாழ்க் கையில் பல்வேறு வழிகளில் தாக் கத்தை ஏற்படுத்தி வருகிறது. புதிய பாதைகள், முதலீடுகள், ரயில் பாதை கள் என்று நிர்வாக கட்டமைப்புக் கள் ஏற்படுத்தப்படுகின்றன.

எனினும் பொதுமக்களுடன் இணைந்து செயற்படக்கூடிய பொலி ஸாருக்கு பதிலாக இன்னமும் படை யினர் சோதனை சாவடிகளையும் நடமாட்டங்களையும் காணமுடிகிறது.

இந்தநிலையில் கணவர்மாரை இழந்த பெண்கள், அவர்களின் பிள் ளைகள், விடுதலைப் புலிகளால் பலாத்காரமாக இயக்கத்தில் இணைக் கப்பட்டவர்களின் உறவினர்கள், படையினரால் பாதிக்கப்பட்டவர்கள் என்று பலரும் வேறு வழிகள் இன்றி கசப்பான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

இந்த பிரச்சினையானது, இலங் கையின் சமூகங்களுக்கு இடை யில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தி வருகிறது. எனவே பிரிந்து போயுள்ள இந்த சமூகங்களை ஒன்றிணைக்க பொதுவான மொழி ஒன்றை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

போருக்கு பின்னர் நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் முகமாக பொது வான மொழியின் மூலம் பிரிந்து போயுள்ள சமூகங்களுக்கு இடையில் பாலத்தை ஏற்படுத்த முடியும் என்று ஜெரிட் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## இன்றைய போட்டி




ராஜஸ்தான்
VS
பஞ்சாப்

நேரம் இரவு 8.00
இடம் :சார்ஜா

## முன்னாள்...

என்ற பகுதியிலுள்ள படைமுகா முக்கு கட்டாயம் வரவேண்டும் என படையினர் வற்புறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து படையின ரின் ஏற்பாட்டில் குறித்த பிரதேசங் களுக்கு நேற்றுக் காலை பேருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டு முன்னாள் போராளிகளும் அவர்களுடைய குடும்பத்தினரும்படைமுகாமுக்கு ஏற்றிச செல்லப்பட்டு விசாரணை செய்யப் பட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றமான சூழல் நிலவிவருகிறது. (செ-11)

## தமிழீழ விடு...

நாட்டு நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

வெளிநாட்டு தமிழர்களிடம் பெற்றுக் கொள்ளும் கப்பப் பணம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணம் ஆகியவற்றை புலிகள் ஆயுத கொள்வனவிற்காக பயன்படுத்தினர்.

சில நாடுகள் இலகு ரக விமா னங்களைக் கூட புலிகளுக்கு வழங் கியுள்ளன. நெடுங்கேணி சம்பவ மானது நகத்தினால் கிள்ளி எறியக் கூடிய நிலையிலேயே தீர்க்கப்பட வேண்டும். மாறாக கோடரியால் வெட்டக் கூடிய வகையில் வளர்த்து விடக் கூடாது.

மனித உரிமை, ஜனநாயகம் போன்ற பல்வேறு வழிகளில் விமர் சனங்கள் எழக்கூடும். எனினும் இவை ஒன்றும் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யாது.

கோலாலம்பூரில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ சில பலம் பொருந்திய நாடுகள் புலி களுக்கு ஆதரவளிப்பதாக தெரி வித்திருந்தார். புலிகள் பாரியளவில் பிரசாரத்திற்காக பணத்தைச் செல விடுகின்றனர்.

முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் நட வடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருவதாக கோத்தபாய சுட் டிக்காட்டியுள்ளார். இது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டி யது அவசியமாகின்றது.

சர்வதேச பொலிஸாருடன் இணைந்து முக்கிய புலிச் செயற் பாட்டாளர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

டொலர்களுக்கு அடிபணியாது அனைவரும் பயங்கரவாதத்திற்கு எதி ராக போராட வேண்டியது அவசியமானது என திவயின ஆசிரியர் தலையங்கத் தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-11)

## தமிழர்களை...

நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ள தாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

யாழ்.கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலைய, நிறைமதி முன் பள்ளியின் விளையாட்டுவிழா நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர்அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாங்கள் நின்று கொண்டி ருக்கும், இந்த சனசமூக நிலைய திறப்புவிழாவில் கடந்தவருடம் நான் கலந்துகொண்டேன். அப்போது இந்த சனசமூக நிலையத்துக்கு மறைந்த, தென்மராட்சி மண்ணைச் சேர்ந்த, யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் அண்ணன் மாமனிதர் ந.ரவிராஜ் அவர்கள் அடிக்கல் நாட்டியிருந்தமை பற்றி அறிந்தேன்.

அவருடன் இணைந்து செயற் பட்ட இந்த ஊரின் முக்கியஸ்தர்கள் தான் இந்த சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளாக உள்ளனர். இந்நிலை மையானது இன்று இந்த முன்பள்ளி யில் கல்வி கற்கும் சிறார்கள், நாளை நல்ல தேசிய உணர்வாளர்களாக, மொழிப்பற்றாளர்களாக வருவார்கள என்பதில் எனக்கு எள்ளளவும் சந் தேகம் இல்லாமல் செய்து விட்டது.

ஆனால் இப்படியான சமூகங் களை திசைமாற்றி, சீரழித்து இப்படி யான இனப்பற்றுள்ள, தமிழ்த்தேசி யப்பற்றுள்ள இளையோர்களை வேலைவாய்ப்பு எனும் மாயையின் கீழ் இனத்துக்கு எதிரானவர்களாக மாற்றும் செயற்பாடுகளை அரசாங் கம் திட்டமிட்டு முடுக்கி விட்டுள்ளது. ஆனால் தனிப்பட்ட தேவைகளை மனதிற்கொண்டு அல்லது அவர் களுடைய ஆசை வார்த்தைகளுக்கு எடுபட்டு யாராவது இவ்வாறான வர லாற்றுத்துரோகத்தை இழைப்பார் களேயானால் அவர்களை ஒரு பொழுதும் எந்தவொரு தமிழ்மகனும் ஏற்றுக்கொள்ளவோ, மன்னிக்கவோ மாட்டான். ஆகவே எமது இளை யோர்கள் அரசாங்கத்தின் திட்ட மிட்ட நிகழ்ச்சிநிரலை விளங்கிக் கொள்வதுடன், ஏனைய நண்பர் களுக்கும் விளக்கி, விழிப்புணர்ச் சியை ஏற்படுத்தி, அரசின் சதித்திட் டததை முறியடிக்க ஒன்றுதிரள வேண டும் எனக்கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சாவகச்சேரி பிர தேசசபை உறுப்பினர் ஜெ.சிற் சபாநாதன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ஞா.கிஷோர், கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபர் இ.திருஞானசிவம் மற்றும் சன சமூக நிலைய செயலாளர் வ.ரவீந் திரன் மற்றும் ஊர் மக்களும் பெருமள வில் கலந்து கொண்டனர். (செ-6)


# ஈர விழிகளுடன் ஓராண்டில்



கீழ்கரவையை பிறப்பிட
மாகவும் கரவை மத்தியை
வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் சின்னையா-சின்னத்தம்பி
(கேவளை சந்திரவளவு
தங்கராசா) அவர்கள்
மண்விட்டுசென்ற
முதலாம் ஆண்டில்...

மண் மகிழ
05.09.1938

மண் நெகிழ
01.05.2013

## சின்னையா சின்னத்தம்பி
(கேவளை சந்திரவளவு தங்கராசா)

குவலயத்தில் குறையில்லா வாழ்வுதனை – தன்
குடும்பம், ஊர், உறவோர் என்று பேதமின்றி
குதூகலித்து வாழவைத்த எம் அன்புத் தெய்வமே
மாண்டாண்டு ஒன்றானாலும் மாறாத
உம் நினைவை எம்
நெஞ்சத்தில் சுமந்து நிதம் உம் பாதம் பதித்த
பாதைதனில் பணிகள் செய்வோம் நாம்...
அப்பா, இச்சை அகற்றி பெருவாழ்வு எமக்குத்தந்த
தச்சை ஐங்கரனை தொழுது அப்பாவை
பிரார்த்திக்கின்றோம்

(C-7113)

வாரியத்தனை, கரவை மத்தி,
கரவெட்டி.

குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

## நாகமணி சிவப்பிரகாசம்
(வருணன் அச்சுவேலி)



வருணன் அச்சுவேலியை பிறப் பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டவரா கிய நாகமணி சிவப்பிரகாசம் அவர் கள் 19.04.2014 சனிக்கிழமை இறை பதம் அடைந்தார்.

அன்னார் அமரர்களான நாக மணி, கதிராசிப்பிள்ளை தம்பதியின ரின் அன்பு மகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், சிவபாஸ் கரன் (சுவிஸ்), பாலபாஸ்கரன் (பிரான்ஸ்) பகீரதி (பருத்தித் துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தூரணி (சுவிஸ்), தியாகேஸ்வரி (பிரான்ஸ்), குகன் (குகன் ஸ்ரூடியோ, பருத்தித் துறை ஆகியோரின் அன்பு மாமனும், சுவர்ணன் (சுவிஸ்), ஐஸ் வர்ணன் (சுவிஸ்), டிலானி (பிரான்ஸ்), நிலானி (பிரான்ஸ்), வேணுகா (லண்டன்), ரஜீன் (லண்டன்), குகரேகா (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.04.2014 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவ ரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குகன் ஸ்ரூடியோ,
பிரதான வீதி, பருத்தித்துறை.

(C-7111)

தகவல் :- நாகரத்தினம் குகன்
(கிளி) (மருமகன்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## Let's Learn Basic & Modern English

CCS

Community Connection Services (Pvt) Ltd has decided to provide Basic English Classes, topic based syllabus which includes thorough and comprehensive work on grammar, vocabulary, pronunciation and the skills of listening, reading, speaking and writing.

Students are encouraged to learn more about the world and other cultures through the medium of English. We aim to motivate learners to speak English.

**Yes! You are in the safe hands of professionals.**

| (Classes May, 2014) | • | Group 1 | Group 2 |
|---|---|---|---|
| Week days | : Batch 1 | Age 6-14 | Above 19 years |
| Week Ends | : Batch II | Age 6-14 | Above 19 years |

Get your application by sending a Money Order/Credit Slip for Rs. 500/= along with a self-stamped envelope or by paying cash.

For further details please contact:

Managing Director,
Address: 665 B, Hospital Road, Jaffna
Mobile: +94 77 2649 990
E mail: info@communitycs.lk Website: www.communitycs.lk

(6161)

Knowledge is always to be put at the service of Love






Print your Building Plans in A1 & A2 sizes

**LEYDEN PRINTS**

Registered with Municipal & Urban Councils

We Specialize in 3D Drawings, Designs & Estimates



(6079)

No.472, Main Street, Chundikkuli, Jaffna.
Tel/Fax:-021 222 1851 Hot Line:-0777 320 799, 07755 6 99 77


## தெரிவுக்...

பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை கேட்டறிந்து அதன் ஊடாக தீர்மானங்களை எடுக்கக் கூடிய வாய்ப்பு பாராளுமன்றத் தெரிவுகுழுவிற்கு காணப்படுவதாகத் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பு இதில் அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் மிதவாத கருத்துக்கள் வரவேற்கப்பட வேண்டியவை என சுட்டிக் காட்டியுள்ள அவர்,

எதிர்வரும் மே மாத முதல் வாரத்தில் மீண்டும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகள்நடைபெறவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (செ-11)


## ஆசிரியர் தேவை

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு சுகாதாரம், சங்கீதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். கல்வி நிலையத்திற்கு நேரில் வருகை தரவும்.

(6167)

தொடர்புகளுக்கு: 0217917791



## தேவை

யாழ் நகரிலுள்ள அலுவலகம் ஒன்றிற்கு
கிளார்க் (Clerk) (பெண், A/L சித்தி)
பியோன் (Peon) (பெண், தரம் 10 சித்தி) தேவை
தீவகப் பகுதியை பூர்வீகமாகக் கொண்டோருக்கு முன்னுரிமை.

(த-710)

தொடர்புகளுக்கு : 0214993501



## இலவச விசா ஆலோசனைகள்

* ஐக்கிய அமெரிக்கா
* கனடா
* அவுஸ்ரேலியா
* நியுஸ்லாந்து
* ஐரோப்பிய நாடுகள் (U.K, France, Italy, Latvia, Germany, Lithuania, Swiss)
* ஆசிய நாடுகள் (India, China, Singapore, Malaysia, Russia)

Student Visa
Family Visa
Work Permit

மிக குறுகிய காலத்தில் தெளிவான ஆலோசனைகள்

* Entry with G.C.E O/L
* IELTS Not required
* Free Accommodation
* Full Scholarships
* Financial Sponsorships
* Full / Part Time Jobs

ICS Study Abroad

77,மணிக்கூட்டு கோபுரவீதி
யாழ்ப்பாணம்
021 4926222, 077 3013060



யாழ். மாநகரில் தங்க நகைகளின் கரட் பரிசோதனை
இயந்திரத்தை முதலில் அறிமுகப்படுத்திய **சிறிராம் ஜுவல்லர்ஸ்**
ஸ்தாபனத்தினர் குறையாத செல்வத்தை வளமாக
அள்ளித்தரும் அதிசயத் திருநாளாம்

## 'அட்சய திருதியை'

எதிர்வரும் மே மாதம் 1ம் 2ம் திகதிகளில் வருகின்றது. அன்றைய தினங்களில் உங்களது சிரமத்தை தவிர்த்துக் கொள்ள முன்கூட்டியே ஆபரணங்களைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.

**சிறிராம் & சிறி அமலா ஜுவல்லர்ஸ்**

(C-7109)

இல. 158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.தொலைபேசி : 021 222 8334



**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:**
021 321 0815,
021 567 1532



## STUDY IN UK , LATVIA

(AUSTRALIA, CANADA, NEW ZEALAND, USA) EUROPE

City & Guilds Approved Centre-UK

* G.C.E O/L , A/L சித்தியடைந்திருந்தலே போதும்.
* அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
* வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
* 5 வருடகால அனுபவம்மிக்க வீசா சட்டஆலோசகரால் வீசா சட்டஆலோசனை.
* இலவசமாக நேரில்வந்து சட்டஆலோசனைகளை அறிந்துகொள்ளக்கூடிய அரிய சந்தர்ப்பம்.
* 150 இற்கும் அதிகமான வீசாக்களை பெற்றுக்கொடுத்த சாதனை.
* IELTS & A1,B1 Special வகுப்பு ஒழுங்குகள்

**WEC** நிறுவனத்தினர் தற்பொழுது யாழ்நகரிலும் தமது IELTS, City&Guilds (A1,B1) German Deutsch, French வகுப்புக்களினை ஆரம்பித்துள்ளனர்.

(C-7105)

கடந்த 9 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 60 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri.
021 7200 989; 0779265447

Branch:
No.04, Kesavil Road,
Kokkuvil,
Jaffna.



SPEED LANKA EXPRESS

## வெளிநாடுகளுக்கான

தபால் பொதிகள் சேவை

* உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
* உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
* நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
* அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
* சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(C-7093)

**ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net



## சித்திரை புத்தாண்டு காலத்தில் சிங்கர் தரும் விசேட சலுகைகள்

* பழைய ஒன்றுக்கு 10,000 ரூபா அல்லது 8,000 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

35,999/=
( Fully Automatic - 7 kg)

10,000/=பெறுமதியான Vacum Cleaner ஒன்று இலவசம்

69,999/=
Fully Automatic - 6 kg)

அனைத்து சலவை இயந்திரங்களுக்கும் 4 வருட உத்தரவாதம்
(நிபந்தனைக்குட்டபட்டது)

* 3,750 ரூபா விலைக்கழிவு
* வட்டி இன்றிய மாதாந்த கொடுப்பனவு

21,249/=
( Semi Automatic - 6 kg )

சிங்கர் GEO குளிர்சாதன பெட்டிகளுக்கு

விசேட விலைக்கழிவு

~~41,000/=~~ 37,925/=

GEO- 182S

50% வரை மின் சேமிப்பு

10 வருட உத்தரவாதம்

59,999/=
GEO- 260NF

ஃபில்டர் ஒன்று இலவசம்

47,999/=
GEO- 200D

விசேட இலகு தவணை கொடுப்பனவு மற்றும் ஃபில்டர் ஒன்று இலவசம்

(C-7098)

கடனட்டைகளுக்கு 24 மாத வட்டியின்றிய கொடுப்பனவு வசதி

| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | சுன்னாகம். | மானிப்பாய். | சங்கானை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி. | பருத்தித்துறை | கிளிநொச்சி | முல்லைத்தீவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 021 222 5408 | 021 224 0555 | 021 225 5343 | 021 225 1100 | 021 227 0197 | 0776 433988 | 021 226 4937 | 021 226 3411 | 021 228 0199 | 021 229 0180 |

www.singersl.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.